விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk


கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144.
பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 புரட்டாதி 23 செவ்வாய்க்கிழமை (09.10.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 294

## மீசாலையில் பாரிய கொள்ளை

### தாலிக்கொடி உட்பட 18 பவுண் பறிபோனது

(யாழ்ப்பாணம்)

மீசாலையில் நேற்று அதிகாலை வாள்களுடன் வீடு ஒன்றினுள் நுழைந்த முகமூடி அணிந்த கொள்ளையர்கள் ஆயுதமுனையில் வீட்டில் இருந்தவர்களை மிரட்டி தாலிக்கொடி உட்பட 18 பவுண் நகைகளை அபகரித்துச் சென்றுள்ளனர். 03

## குமரப்பா, புலேந்திரனின் தூபி அமைக்க நீதிமன்றம் அனுமதி

### தடை கோரிய மனு நிராகரிப்பு

(கரணவாய்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆரம்ப கால உறுப்பினர்களான குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 வேங்கைகள் நினைவாக வல்வெட்டித்துறையில் தூபி அமைப்பதற்கு நகர சபை முன்னெடுத்த பணிக்கு தடையுத்தரவு கோரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை நீதவான் நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதிகளான லெப்.கேணல் குமரப்பா, லெப்.கேணல் புலேந்திரன் உட்பட 12 வேங்கைகள் நினைவாக வல்வெட்டித்துறை தீரு 24

## அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி

### யாழ். பல்கலையில் கவனயீர்ப்பு



03

## வன்முறை தொடர்பில் யாழில் 55 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்கள் தொடர்பில் 55 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 04 மாதங்களாக சுன்னாகம், மானிப்பாய் மற்றும் கோப்பாய் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களில் இவர்கள் கைது 24

# முடிந்தால் இடைக்கால அரசை உருவாக்குங்கள்

## மகிந்த அணியினருக்கு ஐ.தே.க சவால்



(கொழும்பு) மகிந்த அணியினருடன் இணைந்து இடைக்கால அரசை உருவாக்க சுதந்திரக்கட்சியினர் முயற்சிப்பதாக தகவல் வெளியாகியுள்ள நிலையில், முடிந்தால் இடைக்கால அரசை உருவாக்கிக் காட்டுங்கள் என மகிந்த அணியினருக்கு ஐக்கிய தேசியக் கட்சியினர் சவால் விடுத்துள்ளனர்.

அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான துஷார இந்துன்னில் அமரசேன இதனைத் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந் திப்பின் போதே அவர் இதனைக் கூறினார். 23

### விஜயகலாவுக்கு எதிராக

## உச்ச நீதிமன்றத்தில் மற்றுமொரு வழக்கு

(கொழும்பு)

விடுதலை புலிகளின் தொடர்பில் சர்ச்சை கருத்தை வெளியிட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படவுள்ளது. 24

## அமெரிக்காவின் பிரதி இராஜாங்க செயலாளர்

### ● இன்று இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

அமெரிக்காவின், தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கு பொறுப்பான பிரதி இராஜாங்க செயலாளர் அலிஸ் வெல்ஸ் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். 24

### அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி

## யாழ். பல்கலையில் இருந்து அநுராதபுரம் சிறைச்சாலை நோக்கி நடைப்பயணம்

(யாழ்ப்பாணம்)

அரசியல் கைதிகளை நிபந்தனை இன்றி விடுதலை செய்ய கோரி என்ற தொனிப்பொருளில் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் பொது அமைப்புக்களுடன் இணைந்து யாழ்.பல்கலைக்கழகத்தில் இருந்து அநுராதபுரம் சிறைச்சாலை நோக்கி விடுதலைக்கான நடைப் பயணத்தை இன்று ஆரம்பிக்கவுள்ளனர்.

அரசியல் கைதிகளின் விவகாரம் ஓர் சட்டவிவகாரம் அல்ல. ஓர் அரசியல் விவகாரம் எனவே அரசியல் கைதிகள் விடயத்தில் ஓர் அரசியல் தீர்மானம் எடுத்து கைதிகளை நிபந்தனை இன்றி விடுதலை செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தியும் அரசியல் கைதிகளின் உணவு தவிர்ப்பு போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் இன்று காலை 7 மணிக்கு யாழ் பல்கலைக்கழகத்தில் இருந்து ஆரம்பிக்கும் இந்த நடைபவனி ஏ9 வீதி 24

### புலிகளுக்கு ஆதரவான உரை தொடர்பில்

## விஜயகலா மகேஸ்வரன் கைதாகி பிணையில் விடுதலை



(கொழும்பு)

முன்னாள் இராஜாங்க அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜயகலா மகேஸ்வரன், நேற்று காலை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட நிலையில் இரண்டு மணித்தியாலயங்களில் கொழும்பு 24

### முல்லைத்தீவு மாணவன்

## மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரியில் சடலமாக மீட்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு பொக்கணை பிரதேசத்தினை சேர்ந்த 23 வயதுடைய மனுவேல்பிள்ளை பிரதீபன் என்ற கல்வியியற் கல்லூரி மாணவன் கல்லூரி விடுதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மட்டக்களப்பு ஆரையம்பதியில் உள்ள 23

## மீள்கட்டுமானங்களுக்கு நிதி போதுமானதாக இல்லை!

### மாவை சேனாதிராசா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் மீள்கட்டுமானங்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற நிதி போதுமானதாக இல்லை என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

வட மாகாண ஓய்வூதியர் தின நிகழ்வு யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன் தலைமையில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று திங்கட்கிழமை இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு 23

### மன்னாரில் இதுவரை

## 151 மனித எலும்பு கூடுகள் மீட்பு

(மன்னார்)

கடும் மழையுடனான வானிலைக்கு மத்தியிலும் மன்னார் மனிதப் புதைகுழியின் அகழ்வு நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப் படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மார்ச் மாதம் ஆரம்பமான இந்த பணிகள் நேற்று 82-வது நாளாகவும் முன்னெடுக்கப் பட்டது. இதுவரையில் 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அரியாலை இளைஞன் இராணுவத்தால் காணாமல் ஆக்கப்பட்ட குற்றச்சாட்டு

## வழக்கு இழுத்தடிக்கப்படுகின்றதா? நீதிமன்று அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் காணாமல் ஆக்கப்பட்ட இளைஞன் தொடர்பான ஆள்கொணர்வு மனுவை இழுத்தடிக்க சட்ட மா அதிபர் திணைக்களம் முயற்சிக்கின்றதா? என்று கேள்வி எழுப்பிய யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று, மனுதாரரின் வயதைக் கருத்திற்கொண்டு விசாரணைகளை விரைந்து முடிக்குமாறு அறிவுறுத்தியது.

வழக்கு நேற்று விளக்கத்துக்கு வந்த போது, பிரதிவாதியான சட்ட மா அதிபர் சார்பில் மூத்த அரச சட்டவாதி நீதிமன்றில் முன்னிலையாகாத நிலையிலேயே நீதிமன்று அதிருப்தியடைந்ததுடன், வழக்கை வரும் வெள்ளிக்கிழமைக்கு ஒத்திவைத்தது.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றின் கட்டளைக்கு அமைவாக, யாழ்ப்பாணம் நீதிவான நீதிமன்றில் முன்னெடுக்கப்படும் ஆரம்ப விசாரணைகளில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற முக்கிய சாட்சியப் பதிவின் போது, 5ஆவது பிரதிவாதியான சட்ட மா அதிபர் சார்பில் அரச சட்டவாதி மன்றில் முன்னிலையாகவில்லை.

இந்த வழக்கு நேற்று காலை மன்றினால் விளக்கத்துக்கு எடுக்கப்பட்ட போது, அரச சட்டவாதி மன்றில் தோன்றவில்லை. அதனால் பிற்பகல் வரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. பிற்பகல் வழக்கு விளக்கத்துக்கு வந்த போது, யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற அரச சட்டவாதி மன்றில் தோன்றினார்.

சட்ட மா அதிபர் திணைக்களத்தின் மூத்த அரச சட்டவாதி நேற்றைய தினம் இந்த மன்றில் முற்பட்டு வழக்கின் சாட்சியிடம் குறுக்கு விசாரணையை முன்னெடுக்கவிருந்தார். எனினும் அவர் பயணமாகவிருந்த விமானம் சீரற்ற காலநிலையால் யாழ்ப்பாணத்துக்கான சேவையை இடைநிறுத்தியது. எனவே வழக்கை தவணையிடுமாறு மன்றைக் கோரிகின்றேன் என்று யாழ்ப்பாண மேல் நீதிமன்ற அரச சட்டவாதி மன்றில் விண்ணப்பம் செய்தார்.

வழக்கை இழுத்தடிப்புச் செய்யும் நோக்கம் சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு உண்டா? என்று மன்று கேள்வி எழுப்பியது. கடந்த தவணையின் போதும் அரச சட்டவாதி மன்றில் தோன்றவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி மன்று அதிருப்தியை வெளியிட்டது.

மனுதாரரான வயோதிபத் தாயாரின் இயலாமையைக் கருத்திற்கொண்டு வழக்கை இழுத்தடிக்காமல் நிறைவு செய்து, விசாரணை அறிக்கையை மேல் நீதிமன்றுக்கு பாரப்படுத்தவேண்டும் என்று சுட்டிக்காட் டிய யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன், குறுகிய தவணையாக வரும் வெளளிக்கிழமை வரை விளக்கத்தை ஒத்திவைத்தார். (ம)

வங்கியில் அடகுநகை மோசடி

# வாடிக்கையாளரின் 143 நகை பொதிகளை விடுவிக்க நீதின்று கட்டளை

(யாழ்ப்பாணம்)

வங்கி ஒன்றின் கிளையில் அடகு வைக்கப்பட்டு பணியாளர்களால் மோசடி செய்யப்பட்ட குற்றச்சாட்டில் மீட்கப்பட்ட வாடிக்கையாளர்களின் தங்க நகைகளில் 143 பொதிகளை விடுவித்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று நேற்று கட்டளையிட்டது.

வழக்கில் சந்தேகநபர்களான 6 வங்கி உத்தியோகத்தர்களுக்கும் எதிரான குற்றச்சாட்டுகளை விசாரிக்க அவர்களிடம் மீட்கப்பட்ட சான்றுப்பொருள்களான தங்க நகைகள் பொதிகள் அவசியமில்லை என்று மன்று முடிவுக்கு வருகின்றது. அதனால் 143 தங்க நகைப் பொதிகளை விடுவிக்க நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் கட்டளையிட்டார்.

வங்கியின் அடகுப் பிரிவில் பணியாற்றிய உத்தியோகத்தர்களால் வாடிக்கையாளர்களின் நகைகள் மோசடி செய்யப்பட்டன. 2012ஆம் ஆண்டு இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

வங்கிக் கிளையின் உத்தியோகத்தர் கோப்பாய் பொலிஸில் சரணடைந்திருந்தார். அவரால் நகைகள் சில கையளிக்கப்பட்டன. அவர் உள்பட 6 உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைகளில் வங்கிக் கிளையில் வாடிக்கையாளர்களால் அடகு வைக்கப்பட்ட நகைகளில் ரூபாய் 10 கோடியே 67 லட்சத்துக்கும் மேற்பட்ட தங்க நகைகள் மோசடி செய்யப்பட்டதாக அறிய வந்தது.

அதுதொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில்193 பொதிகள் மீட்கப்பட்டன. அவை வழக்கின் சான்றுப் பொருளாக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டன.

இந்த வழக்கில் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ள வாடிக்கையாளர்களின் நகைகளை விடுவிக்கவேண்டும் என்று முறைப்பாட்டாளரான வங்கி சார்பில் மன்றில் விண்ணப்பம் செய்யப்பட்டது.

6 வருடங்களாக அந்த நகைகளை வாடிக்கையாளர்களுக்கு மீள வழங்கத் தவறியதால் வங்கிக்கு அவப் பெயர் ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டி வங்கியின் சட்டத்தரணி மன்றில் விண்ணப்பம் செய்திருந்தார்.

அந்த விண்ணப்பம் தொடர்பான கட்டளையை நீதிமன்று நேற்று வழங்கியது.

இதேவேளை, வங்கியின் சேவை நிலையத்தில் இடம்பெற்ற அடகு நகை மோசடி தொடர்பில் தனக்கு நீதிபெற்றுத் தருமாறு கோரி வாடிக்கையாளர் ஒருவரால், நிதி நிறுவனங்கள் மீதான அதியுச்ச அதிகாரம் கொண்ட நிதியியல் ஒம்புட்ஸ்மன் அலுவலகத்தில் 2014ஆம் ஆண்டு முறைப்பாடு செய்யப்பட்டது.

தமது நகைகளை மீட்டுத்தருமாறும், இழப்பீடு பெற்றுத் தருமாறும் கோரி அந்த முறைப்பாடு செய்யப்பட்டது.

விசாரணைகளின் முடிவில் முறைப்பாட்டாளரின் நகையை மீளளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஒம்புட்ஸ்மன் பரிந்துரைத்த போதிலும், நகையை மீளளிப்பதற்கு வங்கி நடவடிக்கை எடுக்காத நிலையில், மேன்முறையீடு செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி சுரேஸ்குமார் லதுஜா

யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் செல்வி சுரேஸ்குமார் லதுஜா 2018ஆம் ஆண்டு நடைபெற்ற 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 184 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். அவருக்கு கல்வி போதித்த அதிபர், ஆசிரியர்களை மனதார வாழ்த்துகின்றோம்.

-பெற்றோர்

(5977)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



விக்கினேஸ்வரன் பவித்திரன்

யா/அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் கல்வி பயின்று 2018ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 174 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் இன்னும் பல கலைகளில் சித்தியடைந்து பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
அப்பா, அம்மா, அக்கா

அளவெட்டி மேற்கு.
அளவெட்டி.

(5975)


# ஓய்வுதியர் வயதெல்லை அதிகரிக்கப்படவுள்ளது

## எம்.ஏ.சுமந்திரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஓய்வூதியர் வயதெல்லை விரைவில் அதிகரிக்கப்படவுள்ளது என தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்தி ரன், ஓய்வு பெற்றவர்களுக்கான ஆக்கபூர்வ மான செயற்திட்டங்களை மேற்கொள்வத ற்கும் முயற்சி செய்து வருவதாக தெரிவித்து ள்ளார்.

தேசிய ஓய்வூதியர் தின நிகழ்வு நேற்று வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கொண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஓய்வு பெறும் வயது குறித்து நாட்டில் மீளாய்வு இடம்பெறுகிறது. 60 வயது கட்டாய ஓய்வு என இருக்கும் நிலையில், 60 வயதி னர் ஏன் ஓய்வு பெற வேண்டும் என்ற கேள்வி வந்துள்ளது.

அரசியல்வாதிகளுக்கு ஓய்வுபெறும் வயது எல்லை கிடையாது. அரச ஊழியர் ஓய்வு பெறவேண்டும் அது நியதி, ஆனால் பல் துறை செயலாற்ற வல்லவர்களாக இருந்தா லும் ஓய்வூதியம் பெற்ற பின்னரும் வேலை செய்யலாம். ஆகவே ஓய்வூதியத்துக்கான வயது எல்லை விரைவில் மாற்றி அமைக்கப்படும்.

ஓய்வு பெற்றவர்களை ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுத்தலாம் என நினைத்து செயலாற்ற வேண்டிய தருணம் இது. சமூக த்துக்கு பல்துறை சார்ந்தவர்கள் ஓய்வுபெற்ற பின்னர் சமூகத்துக்கான தொண்டை கொடு க்காமல் இருப்பது துரதிர்ஷ்டவசமானது.

ஓய்வூதியர் வயதெல்லையை கூட்டும் அதேவேளை, ஓய்வுபெற்றவர்கள் அவரவர் துறையில் ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் ஈடுபடுவது சிறந்தது. அதற்கான செயற்திட்டம் மேற்கொள்கிறோம். தமது துறைகளை விட்டு அரசியலுக்கு வரக்கூடாது. தொழில் செய்வது சமூகத்துடன் பின்னிப்பிணைந்தது. எந்த வயதானாலும் அதற்கான (தொழில் செய்ய) சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

பல கொள்கை மாற்றம் இடம்பெறவிருக்கு தருணத்தில் ஓய்வு பெறும் வயதெல்லை மாற்றம் மற்றும் ஓய்வு பெற்றவர்களை ஆக்கபூர்வ பணிகளில் ஈடுபடச்செய்யும் செயற்றிட்டம் எதிர்வரும் நாட்களில் விவாதிக்கப்பட்டு அதற்கான பொறிமுறை ஏற்படுத்தப்படும் போது ஓய்வூதியர்களை பிரதிநிதித்துவப்படுத்திகொள்கை மாற்றங்களை மக்களுக்கு பயனுடையதாக செய்ய பாராளுமன்றம் மற் றும் ஏனைய சபைகளில் முயற்சி செய்வோம் என மேலும் தெரிவித்தார். (ம-9)

# தீக்காயத்துக்குள்ளான சிறுமி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

தீக்காயங்களுக்குள்ளான 14 வயது சிறுமி ஒருவர் ஒரு வாரத்தின் பின்னர் சிகிச்சை பலனின்றி நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். கோண்டாவில் மேற்கை சேர்ந்த ஜீவதா சன் சுகந்தி (வயது 14) என்ற மாணவியே மேற்படி உயிரிழந்தவராவார்.

குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக ஆத்திரம் அடைந்த சிறுமி தனது உடல் மீது பெற்றோலை ஊற்றி தீ வைத்துள்ளார்.

உடனடியாக உறவினர்கள் தீயை அணைத்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். அங்கு சிகிச்சை பெற்று வந்த குறித்த சிறுமி நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ம-9)


## ENGLISH MEDIUM

MATHS, SCIENCE, HELTH

Gr 6 தொடக்கம் G.C.E (O/L) தனியாகவோ, குழுவாகவோ ஒழுங்கு செய்யப்படுமிடத்து வீட்டில் வந்து கற்பிக்கப் படும்.

V.றமேஸ், பிறேம் Sir

077 644 4160



## அறிவித்தல்

கரைதுறைப்பற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வாக்களிக்கத் தகுதியுள்ள வாக்காளர் பட்டியல் 07.09.2018ஆம் திகதி இடம்பெற்ற விசேட இயக்குநர் சபைக் கூட்டத்தில் ஆராயப்பட்டு 30.09.2018ஆம் திகதியுடன் வாக்காளர் பட்டியல் மூடப்பட வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இத் தீர்மானத்திற்கு அமைவாக 30.09.2017ஆம் திகதியில் வாக்களிக்கத் தகுதியுள்ள வாக்காளர் பட்டியல் கிளைகளிலும், கிளை நிலையங்கள் இயங்காத கிளைகளுக்கான பட்டியல்கள் அவ்வவ் கிராமசேவையாளர் அலுவலகத்திலும், முல்லைத்தீவு வடக்கு கிளைக்கான பட்டியல் முல்லைத்தீவு நகரப் பகுதியில் உள்ள சங்கத்தின் கிராமிய வங்கியிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இப்பட்டியலில் ஏதாவது ஆட்சேபனைகள் இருப்பின் 14 நாட்களுக்குள் எனக்கு எழுத்து மூலமாக, நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

குறிப்பு:-இயங்காத கிளை நிலையங்களின் பட்டியல்கள் தலைமை அலுவலகத்தில கடமை நேரத்தில் செயலாளருடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம் என்பதனையும் அறியத் தருகின்றேன்.

செயலாளர்,
கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கம், முல்லைத்தீவு.
09.10.2018.

தொலைபேசி இல:-
0243243483

(சி-4093)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



## தோட்டக்காணி விற்பனைக்கு

வடமராட்சி கிழக்கு,குடத்தனை சந்திக்கு அருகில் தொழிற்சாலைகள், பண்ணைகள் மற்றும் பாரிய தொழில் திட்டங்களுக்கு உகந்த 10 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:

077 956 1525,077 193 0232

(சி-4059)



## RAVEENS EMC- KARAVEDDY

YEAR 6 ADMISSION 2019

(ENGLISH MEDIUM)

- ADMISSION FORMS ARE AVAILABLE
- SCHOLARS (YEAR-5) ARE ENTITLED TO APPLY
- CLOSING DATE:16th OF OCTOBER-2018


P.Easwaranathan
(B.Sc.Hons) Agric Dip.in.Edu) Director

(C-4096)

# மீசாலையில் நேற்று அதிகாலை

# ஆசிரியரின் வீட்டிற்குள் வாள்களுடன் நுழைந்த முகமூடிக் கொள்ளையர்கள் அட்டகாசம்

## தாலிக்கொடி உட்பட 18 பவுண் நகைகள் திருட்டு





(சாவகச்சேரி)

மீசாலை புத்தூர்ச்சந்தி கமநலசேவைகள் திணைக்களத்திற்கு பின்பாகவுள்ள ஆசிரியர் ஒருவரின் வீட்டிற்குள் வாள்களுடன் நுழைந்த முகமூடிக் கொள்ளையர்கள் அட்டகாசத்தில் ஈடுபட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் வாள்களுடன் முகத்தை துணியால் முற்றாக மூடியவாறு பத்துப்பேருக்கும் அதிகமானவர் மதில் பாய்ந்து வீட்டிற்குள் நுழைந்துள்ளனர். ஜன்னலினால் வாள்களை காட்டி கதவை திறக்குமாறு அச்சுறுத்தியுள்ளனர். இதன்போது வீட்டிலிருந்தவர்கள் கூக்குரலிட கதவினை உடைத்துக் கொண்டு உள்நுழைந்துள்ளனர்.

ஆறு பேர் வீட்டிற்குள் நுழைந்து வாள்களை காட்டி அச்சுறுத்தி தாலிக்கொடி உட்பட சுமார் 18 பவுண் நகைகள், 4000 ரூபா பணம் என்பவற்றையும் கொள்ளையிட்டு சென்றுள்ளனர். சுமார் ஒரு மணி நேரம் வரை வீட்டில் நின்ற கொள்ளையர்கள் கூக்குரல் கேட்டு வந்த அயல்வர்களையும் அச்சுறுத்தியுள்ளனர்.

இக்கொள்ளை தொடர்பாக கொடிகாமம் பொலிஸாருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து ஒரு மணி நேரத்திற்குப் பின் வந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (இ-30-89)

# தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் 79 வீதமான மாணவர்கள் சித்தி!

கடந்த ஓகஸ்ட் மாதம் நடந்த தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் 79.09 வீதமான மாணவர்கள் சித்தி அடைந்துள்ளதாக இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. கடந்த 2017 ஆம் ஆண்டில் 69 வீதமான மாணவர்களே சித்தியடைந்தனர். இந்த ஆண்டு பத்து வீதத்தினால் பரீட்சையில் சித்தி அடைந்தோரின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது.

வினாத்தாள் ஒன்று மற்றும் வினாத்தாள் இரண்டு ஆகியனவற்றில் தலா 35 புள்ளிகளுக்கு அதிகமாக பெற்றுக் கொள்ளும் அனைவரும் பரீட்சையில் சித்தியடைந்தவர்களாக கருதப்படுகின்றனர். இந்த ஆண்டில் மூன்று இலட்சத்து 50 ஆயிரத்து 191 மாணவ, மாணவியர் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர். இதேவேளை, மாவட்ட ரீதியான வெட்டுப் புள்ளிகளை விடவும் அதிகளவு புள்ளிகளை பரீட்சைக்குத் தோற்றிய 10.32 வீதமான மாணவ, மாணவியர் பெற்றுக் கொண்டுள்ளதாக பரீட்சை திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்துள்ளார். (இ-7)

# நோர்வேயில் பிரதமர் ரணில்




(ஒஸ்லோ)

நோர்வே சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒஸ்லோ நகரிலுள்ள அரச அதிதிகளின் மண்டபத்தில் விசேட அதிதிகளுக்கான புத்தகத்தில் நேற்றுக் காலை கையொப்பமிட்டார்.

அருகில் நோர்வே பிரதமர் ஏர்னா சோல்பார்க், அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா, பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜெயவர்தன ஆகியோரும் காணப்படுகின்றனர். (இ-7)

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழ்.பல்கலையில் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம்










(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நேற்றுத் திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் யாழ். பல்கலைக்கழகத்தில் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறுகிய கால புனர்வாழ்வு அளித்து விடுதலை செய்யுமாறு அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் 12 பேர் கடந்த மாதத்தில் இருந்து தொடர் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து மகசின் சிறைச்சாலையில் உள்ள 42 அரசியல் கைதிகளும் கடந்த வாரம் தொடர் உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்றுக் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்களுடன் பல்கலைச் சமூகம் இணைந்து. அரசியல் கைதிகளின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும் அவர்களின் விடுதலையை வலியுறுத்தியும் கோசங்களை எழுப்பி, பதாகைகளை தாங்கியவாறு இந்தப் போராட்டத்தை பல்கலைக்கழக முன்றலில் முன்னெடுத்தனர். (இ-9-101)

# ஜனாதிபதி சீஷெல்ஸ் பயணம்



(சீஷெல்ஸ்)

இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று திங்கட்கிழமை அதிகாலை சீஷெல்ஸ் சென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை அந்நாட்டின் சிரேஷ்ட அமைச்சரான மெக்சுசி மொன்டன் (Macsuzy Mondon) உள்ளிட்ட பிரதிநிதிகள் மிகுந்த மகிழ்ச்சியுடன் சர்வதேச விமான நிலையத்தில் வைத்து வரவேற்றுள்ளனர்.

இலங்கைக்கும் சீஷெல்ஸ்க்கும் இடையிலான உறவுகளை மேலும் பலப்படுத்தும் நோக்கில் சீஷெல்ஸ் ஜனாதிபதி டெனி போவினுடைய (Danny Faure) அழைப்பின் பேரில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சீஷெல்ஸ் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வடக்கு ஆளுநருக்கு எதிராக லண்டனில் பாரிய ஆர்ப்பாட்டம்



(லண்டன்)

லண்டன் சென்றுள்ள இலங்கையின் வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரேக்கு எதிராக பிரித்தானிய புலம்பெயர் தமிழர்களால் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

இனப்படுகொலை அரசின் கோர முகங்களை மறைக்க பொது நிகழ்வுகளில் கலந்து மக்கள் மனங்களை மாற்றும் செயற்பாடுகளை செய்து வரும் வடக்கு ஆளுநர் இலங்கைக்குத் திரும்பி அனுப்பப்பட வேண்டும் என்று கூறி எதிர்ப்பினைத் தெரிவித்தனர்.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஏற்பாட்டில் YMCA Indian Student Hostel க்கு எதிரில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் பெரும் திரளான புலம்பெயர் தமிழ் மக்கள் கலந்து கொண்டிருந்தனர். இந்நிலையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் குறித்த விடுதிக்கு ஆளுநர் வருகை தந்தபோது "இனப்படுகொலை சிங்கள அரசின் ஆளுநரே இலங்கைக்கு திரும்பிப் போ!" என ஆளுநருக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஆக்ரோசமாக கோசங்களை எழுப்பினர். இதனையடுத்து பெருமளவிலான பொலிஸார் சம்பவ இடத்திற்கு குவிக்கப்பட்டதுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை மோப்பநாய்கள் சகிதம் கொண்டு கட்டுப்படுத்த பொலிஸார் முனைந்தனர்.

அதேவேளை, ஆளுநருக்கு எதிராக கடும் எதிர்ப்பினை வெளிப்படுத்திய நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் செயற்பாட்டாளர் ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7-281)

# சொகைல் சதம்; பாக்., 482 ஓட்.,



கன்னிச் சதமடித்த மகிழ்வில் பாகிஸ்தானின் ஹரிஸ் சொகைல்

டுபாய் டெஸ்டில் ஹரிஸ் சொகைல் கன்னிச்சதம் அடித்து கைகொடுக்க, பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்சில் 482 ஓட்டங்களைக் குவித்தது.

அவுஸ்திரேலியா - பாகிஸ்தான் அணிகள் மோதும் 2 போட்டிகள் டெஸ்ட் தொடர் ஐக்கிய அரபு எமிரேட்ஷில் நடைபெறுகிறது. இத்தொடரின் முதல் டெஸ்ட் டுபாயில் நடக்கிறது. நாணயச் சுழற்சியில் வெற்றி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி நேற்று முன்தினம் முதல் நாள் ஆட்டநேர நிறைவில் முதல் இன்னிங்சில் 3 விக்கெட்டுக்களை இழந்து 255 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் நேற்றைய இரண்டாவது நாள் ஆட்டத்தில் முதல் இன்னிங்சை தொடர்ந்த பாகிஸ்தான் அணிக்கு அசாத் ஷபிக் (80) அரைச்சதம் கடந்தார்.

பாபர் அ்சம் (4) ஏமாற்றினார். அபாரமாக ஆடிய ஹரிஸ் சொகைல் (110) சதம் அடித்தார். அணித் தலைவர் சர்பராஸ் அகமட் (15) 'ரன்-அவுட்' ஆனார். பிலால் ஆசிப் (12), யசிர் ஷா (3) நிலைக்கவில்லை.

பாகிஸ்தான் முதல் இன்னிங்சில் 482 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. வகாப் ரியாஸ் (7) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலியா அணி சார்பில் பீற்றர் சிடில் 3, நேதன் லயன் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து தமது முதல் இன்னிங்சை ஆரம்பித்த அவுஸ்திரேலிய அணி, நேற்றைய இரண்டாவது நாள் ஆட்டநேர நிறைவில் விக்கெட் இழப்பின்றி 30 ஓட்டங்களை எடுத்திருந்தது.

ஆரோன் பின்ச் (13), உஸ்மான் கவாஜா (17) ஆட்டமிழக்காமல் இருந்தனர். போட்டியின் 3ஆம் நாள் ஆட்டம் இன்றாகும். இப்போட்டி இலங்கை நேரப்படி காலை 11.30 மணியளவில் ஆரம்பமாகிறது.

# கெயல் வாய்ப்பு மறுப்பு ஏன்?

## மேற்கிந்தியத் தீவுகள் அணி அறிவிப்பு

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள், 'ரி20' தொடரில் இடம்பெற கெய்ல் மறுத்து விட்டார். தவிர டுவைன் பிராவோ, சுனில் நரைனும் மேற்கிந்திய அணியில் சேர்க்கப்படவில்லை.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் செய்துள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி, அங்கு ஐந்து ஒருநாள், மூன்று 'ரி20' போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. முதல் ஒருநாள் போட்டி எதிர்வரும் 21ஆம் திகதி கவுகாத்தியில் நடக்கவுள்ளது.

இதற்கான மே.தீவுகள் அணி அறிவிக்கப்பட்டது. பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட 'சீனியர்' கிறிஸ் கெய்ல், சொந்த காரணங்களுக்காக இந்திய தொடரில் பங்கேற்க மறுத்து விட்டார். இவர் ஐக்கிய அரபு எமிரேட்ஷில் நடக்கவுள்ள ஆப்கானிஸ்தான் பிரிமியர் லீக், 'ரி10' தொடரில் பங்கேற்க உள்ளார்.

அதேநேரம் சொந்தமண்ணில் இங்கிலாந்து தொடர் மற்றும் 2019 உலக கிண்ணத் தொடரில் பங்கேற்பேன் என தெரிவித்துள்ளார். 'சகலதுறை வீரர்' ரசல் காயம் காரணமாக ஒரு நாள் தொடரில் இடம்பெறவில்லை.

ஐ.பி.எல்., தொடரில் அசத்தும் டுவைன் பிராவோ, நரைன் என இருவரும் ஒருநாள், 'ரி20' அணியில் சேர்க்கப்படவில்லை. பொலார்ட் 'ரி20' அணியில் மட்டும் சேர்க்கப்பட்டார்.

இதனால் வரும் உலக கிண்ணத் தொடருக்கான அணியில் பிராவோ, பொலார்ட், நரைன் இடம்பெறுவார்களா என சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

**சந்தர்போல் மகன்**

இவர்களுக்குப் பதில் இந்திய வம்சாவளி வீரர் சந்தர்போல் மகன் ஹேம்ராஜ் ஆரம்ப வீரராக அறிமுகமாகவுள்ளார். 'சகலதுறை வீரர்' பேபியன் அலன், ஒஷேன் தோமஸ் புதுமுக வீரர்களாக வாய்ப்பு பெற்றனர்.

'ரி20' அணிக்கு கார் லஸ் பிராத்வைட் தலைவராகச் செயற்படவுள்ளார். இந்த அணியில் டரன் பிராவோ, பொலார்ட் சேர்க்கப்பட்டனர்.

**அணி விபரம்:-**

**ஒருநாள் அணி**

ஹோல்டர் (அணித் தலைவர்), பேபியன் அலன், அம்ரிஸ், பிஷ், சந்தர்போல் ஹேம்ராஜ், ஹெட்மயர், ஷாய் ஹோப், அல்ஷாரி ஜோசப், எவின் லீவிஸ், அஷ்லே நர்ஷ், கீமோ போல், ராவ்மன் பவெல், கீமர் ரோச், சாமு வேல்ஸ், ஒஷேன் தோமஸ்.

**'ரி20' அணி**

கார்லஸ் பிராத்வைட் (அணித் தலைவர்), பேபியன் அலன், டரன் பிராவோ, ஹெட்மயர், எவின் லீவிஸ், ஒபட் மெக்காய், அஷ்லே நர்ஷ், கீமோ போல், காரி பியரே, பொலார்ட், ராம்டீன், அன்ட்ரூ ரசல், ரூதர்போர்ட், ஒஷேன் தோமஸ்.



கிறிஸ் கெயல்

# விமானப்படை விழாவில் சச்சின்



சச்சின் டெண்டுல்கர்

இந்திய விமானப்படை தின விழாவில் கிரிக்கெட் வீரர் சச்சின் பங்கேற்றார்.

இந்திய கிரிக்கெட்டின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் (வயது-45), 'சதத்தில்' சதம் எட்டியவர். இவருக்கு இந்திய விமானப்படையின் சார்பில் கௌரவ 'குரூப் கப்டன்' பதவி 2010ல் இவருக்கு வழங்கப்பட்டது. இந்த பெருமை பெற்ற முதல் விளையாட்டு வீரர் இவர் தான்.


இதனிடையே இந்திய விமானப்படையின் சார்பில் 86ஆவது ஆண்டு தினம் கொண்டாடப்பட்டது. இதில் கௌரவ 'குரூப் கப்டன்' சச்சின், விமானப்படை உடையில் வந்து பங்கேற்றார். வீரர்கள் அணிவகுப்பை நேரில் பார்த்து ரசித்தார்.

இதுகுறித்து வெளியான 'டுவிட்டர்' செய்தியில்,

'காஜியாபாத், ஹிண்டன் விமானப்படை மையத்துக்கு 'குரூப் கப்டன்' சச்சின் வருகை தந்தார். இங்கு நடந்த வீரர்கள் அணி வகுப்பு, விழாவில் பங்கேற்றார்,' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அலை சறுக்கலில் தலை தப்பிய ஹைடன்

இன்ஸ்டகிராமில் வெளியான ஹைடனின் புகைப்படம்



அலைச்சறுக்கலின்போது ஏற்பட்ட விபத்தில் மத்யூ ஹைடன் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார். எனினும் முதுகு தண்டு முறிந்து பலத்த காயமடைந்தார்.

அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் மத்யூ ஹைடன் (வயது - 46), ஐ.பி.எல்., தொடரில் சென்னை அணிக்காக விளையாடினார். கடந்த ஆண்டு அவுஸ்திரேலியாவின் சிறந்த வீரர்களுக்கான 'ஹோல் ஓப் பேம்' பட்டியலில் சேர்க்கப்பட்டார்.

இந்நிலையில் குயின்ஸ்லாந்தில் விடுமுறையை கழிக்கச் சென்றிருந்த அவர், அங்குள்ள வடக்கு ஸ்டிராட்புரோக் தீவில் மகனுடன் அலைச்சறுக்கு விளையாட்டில் ஈடுபட்டார். அப்போது கரையை நோக்கி வேகமாக திரும்பியபோது அங்கிருந்த மணல் திட்டில் மோதினார்.

இதில் ஹைடன் கழுத்துக்கு அருகில் உள்ள முதுகு தண்டு வடத்தில் எலும்பு முறிவு ஏற்பட்டது. பல இடங்களில் தசைகள் கிழிந்து காயம் ஏற்பட்டது. முன் தலையிலும் காயம் ஏற்பட்டது. சிகிச்சை பெறும் புகைப்படத்தை தனது இன்ஸ்டகிராம் பக்கத்தில் வெளியிட்டார்.

சிகிச்சையில் உள்ள ஹைடன், 'கூரியர் மெயில்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், 'பெரிய ஆபத்தில் இருந்து நல்லவேளை தப்பினேன். திடீரென பல அலைகள் சேர்ந்து வந்தன. இவற்றில் இருந்து தப்பிக்க தலையை குனிந்தேன். அப்போது என் தலை மணல் திட்டு மீது மோதியது. எனது உடல் எடை, அலையின் வேகமும் சேர்ந்து கொள்ள சப்தத்துடன் கழுத்து திருகியது. இதில் என்னால் வெளியே வரமுடியவில்லை. 'ஸ்கான்' செய்தபோதுதான் பல காயங்கள் தெரியவந்தன,' என்றார்.

**சூமேக்கர் போல...**

'போர்முலா 1' கார்பந்தயத்தில் 7 முறை சம்பியனானவர் ஜேர்மனியின் மைக்கல் சூமேக்கர். இவர் 2014ம் ஆண்டு புத்தாண்டை கொண்டாட பிரான்ஸ் சென்றார். இங்கு அல்ப்ஸ் மலையில் மகனுடன் பனிச்சறுக்கு சென்றபோது தலையில் பலத்த அடிபட்டது. இன்னும் 'கோமா'வில்தான் உள்ளார். ஹைடன் காயத்துடன் தப்பியது ஆறுதலான விடயம்.

# தமிழருக்கு மகிந்த வழங்கியதை கூட்டமைப்பு பறித்துக்கொண்டது

## ஜி.எல். பீரிஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தன்னுடைய தனிப்பட்ட நலனையோ அல்லது அவருடைய கட்சி நலனையோ கருத்தில் கொள்ளாது. தமிழ் மக்களுக்குப் பெற்றுக்கொடுத்த வாக்குரிமையை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பறித்துக்கொண்டுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன குற்றம் சுமத்தியுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த, அக்கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச் சருமான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனநாயகம், மனித உரிமைகள், வாக்குரிமை போன்ற மக்களின் அடிப் படையான உரிமைகள் அனைத்தும் இல்லாது செய் யப்பட்டுள்ளதாகவும், இதற் கெதிராகவும், தேர்தலை விரைவாக நடத்தக் கோரியும் விரைவில் நாடு முழுவதிலும் போராட்டங்கள் மேற் கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகள் தொடர்பிலும் இடைக் கால அரசாங்கத்தை அமைக்க வலியுறுத்தி முன்வைக்கப்பட்டுள்ள யோசனை குறித்தும் இன்று பொதுஜன பெரமுனவிலுள்ள 42 நாடா ளுமன்ற உறுப்பினர்களு டன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்து ரையாடவுள்ளதாகவும் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். (இ-7)

### பிணைமுறி மோசடி தொடர்பில்

# ரவி கருணாநாயக்கவை சந்தேகநபராக்குவது சட்டவிரோதமானது



(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பிணைமுறி மோசடி தொடர்பில் கண்டறிவதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவின் முன்னால், போலிச் சாட்சியங்களை வழங்கியதாகக் கூறி, இரகசியப் பொலிஸாரால் ஆரம்பிக்கப்பட்டுள்ள விசாரணைகளுக்காக, நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவைச் சந்தேகபராக அறிவிப்பது, தற்போதைய சூழ்நிலையில் சட்பவிரோதமானதென, கொழும்பு பிரதான நீதவான் ரங்க திசாநாயக்க, நேற்றுத் தெரிவித்தார்.

இலங்கைத் தண்டனைக் கோவைச் சட்டத்தின் பிரகாரம், இவ்விவகாரத்தில் வழக்கு விசாரணையொன்று ஆரம்பிக்கப்படவில்லை என்றும் இதனால், ரவி கருணாநாயக்கவைச் சந்தேகநபராக அறிவிப்பது தொடர்பில், இரகசியப் பொலிஸார் எடுத்துள்ள நடவடிக்கைகள் சட்டவிரோதமானவை என்றும் நீதவான் நேற்று அறிவித்தார். (இ-7)

# மத்திய மாகாண சபையின் ஆயுள் நேற்றுடன் நிறைவு

(கொழும்பு)

மத்திய மாகாண சபையின் ஆயுட்காலம் நேற்று நிறைவடைந்ததுடன் குறித்த மாகாணம் ஆளுநர் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் இது வரையில் வடமத்திய, கிழ க்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களுடன் 4 மாகாணங்களுக்கான ஆயுட்காலம் முடிவடைந்துள்ளது.

இதேவேளை நாளை வடமேல் மாகாணத்தினதும், 25 ஆம் திகதி வட மாகாணத்தினதும் ஆயுட் காலம் நிறைவடையவுள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி தென் மாகாணத்தினதும் 21 ஆம் திகதி மேல் மாகாணத்தினதும், செப்டெம்பர் மாதம் 08 ஆம் திகதி ஊவா மாகாணத்தினதும் ஆயுட்காலம் நிறைவடைய உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும் ஆயுட் காலம் நிறைவடைந்த மாகா ணங்களில் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் இதுவரையில் இறுதி முடிவு எதனையும் எடுக்கவில்லை என தெரிவிக்கப்படுகின் றது.

இந்நிலையில், எல்லை நிர்ணய மீள்பரிசீலனை குழு அறிக்கையை முன் வைக்க மேலும் சில தினங்கள் செல்லும் எனத் தெரி விக்கப்படுகின்றது. (இ-7)

# வெள்ள நீரில் மூழ்கி பெண் ஒருவர் பலி!

வலல்லாவிட்ட, ஒரு கொட பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தில் மூழ்கி காணாமல் போயிருந்த பெண் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வலல்லாவிட்ட பகுதியைச் சேர்ந்த (வயது-59) தீமிகா எனும் பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வலல்லாவிட்ட, ஒரு கொட பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தில் இழுத்துச் செல்லப்பட்ட மூன்று பெண்களில் இருவரை பிரதேச வாசிகள் ஒன்றிணைந்து காப்பாற்றியிருந்தனர்.

நேற்று முன்தினம்வெள்ள நீர் அதிகமாக காணப்பட்டதன் காரணமாக குறித்த பெண்ணை தேடுவது கஷ்டமாக இருந்ததுடன் கடற்படையின் சுழியோடிகள் வரவழைக்கப்பட்டு நேற்றுக் காலை 9 மணியளவில் குறித்த பெண்ணின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# முன்னாள் சட்டமா அதிபர் ஷிப்லி அஸீஸ் காலமானார்




(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சட்டத்தரணியும் சட்டமா அதிபருமான ஷிப்லி அஸீஸ் (Shibly Aziz) நேற்றுக் காலை காலமானார்.

நோய் வாய்ப்பட்டிருந்த நிலையில் அவர் தனது 75 ஆவது வயதில் நேற்று காலமானார்.

அரசியலமைப்பு சபையின் உறுப்பினராகவும் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் தலைவராகவும் அவர் கடமையாற்றியுள்ளார். (இ-7)

# இலங்கையில் அபூர்வ தேங்காய்



(கொழும்பு)

இலங்கையில் வித்தியாசமான தேங்காய் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

புத்தளம் பகுதியிலுள்ள நபர் ஒருவரின் வீட்டிலேயே வித்தியாசமான தேங்காய் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியைச் சேர்ந்த ஜேமிஸ் என்பவரின் வீட்டிலேயே இந்த தேங்காய் கிடைத்துள்ளது.

காலை உணவிற்காக தேங்காய் உடைக்கும் போது அந்த தேங்காய்க்குள் இரண்டு தேங்காய்கள் காணப்பட்டுள்ளன.

வழமைக்கு மாறாக இவ்வாறு தேங்காய் காணப்படுவது மிகவும் அரிய சந்தர்ப்பமாகும்.

தான் காலை தேங்காய் உடைக்கும் போது, மிகவும் வித்தியாசமாக காணப்பட்டது. எனது வாழ்க்கையில் இப்படி ஒரு தேங்காயை பார்த்த முதல் சந்தர்ப்பம் இதுவென ஜேமிஸ் தெரிவித்தார். (இ-7)

# 2013 இல் இலங்கை போதைப்பொருள் விற்பனை மத்தியஸ்தலமாக செயற்பட்டது-தலதா தகவல்

(கொழும்பு)

கடந்த ஆட்சிக் காலத்தில் அதாவது 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் போதைப்பொருள் விற்பனை மத்தியஸ்தலமாக இலங்கை காணப்பட்டமையே இன்று நாட்டில் போதைப் பாருள் பாவனை அதிகரித்துள்ளமைக்கான காரணம் என நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.

மேலும் நாட்டில் இடம்பெறுகின்ற குற்றச்செயல்களை குறைப்பதற்கு முழுமையான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் நீதித்துறையை புதுப்பிப்பதற்கான பல்வேறுபட்ட பணிகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கண்டி நீதிமன்ற நீதிபதிகளின் சங்கத்துக்கும் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சுக்குமிடையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே அவர் இதனை தெரிவித்தார். (இ-7)

# இராசி பலன்

**மீனம்:** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், விலகிச் சென்றவர்கள் திரும்ப வந்து சேருவர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மேடம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சி கைகூடும், கௌரவமான நாள்.

**இடபம்:** பிள்ளைகள் வழியில் சுப செலவுகள் ஏற்படலாம், அரசு வழியில் அனுகூலமுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மிதுனம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தொலைபேசி வழியில் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்:** மற்றவர்களிடம் பேசும் போது நிதானம் தேவை, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், விரயங்கள் கூடும் நாள்.

**கடகம்:** வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பாசத்தோடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், நிதிநிலை உயரும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மகரம்:** ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**சிம்மம்:** குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும் நாள், பேச்சில் இனிமை தென்படும், ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் பிரியப்படுவீர்கள், சான்றோர்களின் சந்திப்புண்டு.

**தனுசு:** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும் நாள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்:** ஒருசில வேலைகளுக்காக சற்று அலையும் நிலை ஏற்படலாம், புண்ணிய காரியங்களுக்காக சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள், மாற்றங்களால் ஏற்றம் காணும் நாள்.

**கன்னி:** கோரிக்கைகள் நிறைவேற வழிபாட்டில் ஈடுபட வேண்டிய நாள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது.

கிரகநிலை: ராகு; செவ். கேது; சனி; குரு; சுக், புத; சூரி, சந்

சந்திராஷ்டமம்: பூரட்டாதி, உத்தரட்டாதி இரவு 1.08 மணிக்கு துலா-சந்

09.10.2018

புரட்டாதி 23, செவ்வாய்க்கிழமை

சூரிய உதயம் காலை 06.02 மணிக்கு

அமாவாசை முற்பகல் 9.43 மணிவரை

அத்தம் பிற்பகல் 1.22 மணிவரை

சுபநேரம் 10.32-12.02 மணிவரை

இராகுகாலம் 3.02-4.32 மணிவரை

நவராத்திரி விரதாரம்பம்

வளவன்

# சரஸ்வதி சிலை திரை நீக்கம்

(சாவகச்சேரி)

யாழ்.கரம்பைக்குறிச்சி அ.த.க பாடசாலையில் அமையப்பெற்ற சரஸ்வதி திருவுருவச் சிலை திரை நீக்கம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30மணிக்கு இடம்பெறும்.

பாடசாலை அதிபர் க.இளங்கோவன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவமும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சிவத்துரை சிவநாதனும், கௌரவ விருந்தினர்களாக ஞாபகார்த்த அன்பளிப்பு வழங்கிய திருமதி.விக்னேஸ்வரி ,திருமதி வள்ளிப்பிள்ளை, திருமதி தீபா,ம.கார்த்தீபன் ஆகியோர் கலந்து சிறப்பிப்பர். (இ-30)

# யாழ்.சின்மயா மிஷனில் கந்தபுராண அருளுரை

(யாழ்ப்பாணம்)

யாழ். சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தாவால் "உடன் கட்டை ஏறுதல்" என்ற தலைப்பில் இன்று மாலை 6.30 மணி முதல் 7.30 மணி வரை இல 700, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள சின்மய ஞானவேல் ஆச்சிரமத்தில் கந்தபுராண அருளுரை இடம்பெறும். (இ)

# கொக்குவில் இந்துவின் பரிசளிப்பு தினம் நாளை

(யாழ்ப்பாணம்)

யா/கொக்குவில் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு தினம் நாளை 10 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் கல்லூரி அதிபர் ம.ஞானசம்பந்தன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக வைத்தியர் ரவி பெருமாள்பிள்ளை ஞான சுந்தரம், சிறப்பு விருந்தினராக பழைய மாணவர் ஆனந்த கஜேந்திரன் சஞ்சிவன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

# செல்வாபுரம் வீதியை மறு சீரமைத்துத் தாருங்கள்

## மக்கள் கோரிக்கை மகஜர்



(யாழ்ப்பாணம்)

ஒழுங்கமைப்பின்றி சீரற்ற முறையில் அமைக்கப்பட்டுள்ள கரணவாய் தெற்கு செல்வாபுரம் வீதியை மறு சீரமைத்து தருமாறு கோரி அப்பகுதி மக்கள் சார்பில் இளங்கோ சனசமூக நிலையத்தினர் தமது கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றை உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் ஊடாக ஒதுக்கப்பட்ட 15 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் கரணவாய் தெற்கு செல்வாபுரம் வீதியே இந்த வருடம்புதிதாகஅமைக்கப்பட்டுள்ளது. குறித்த வீதி தளம் வெட்டி அமைக்காமல் நீர் ஓட்டம் பார்க்காமல் அமைக்கப்பட்டுள்ளது.

இதனால் மழைகாலங்களில் வீதிகளை மூடி மழை நீர் காணப்படுவதுடன் போக்குவரத்து செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் சிறுவர்கள் நோய்வாய்ப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதுடன் நன்னீர் கிணறுகளும் பாழடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

வீதி அமைக்கும் பணிகள் இடம்பெற்றிருந்த போது தொழில் நுட்ப உத்தியோகத்தர்களிடமும் கரவெட்டி பிரதேச சபை தவிசாளர், கரவெட்டி பிரதேச செயலர் ஆகியோரிடம் இது தொடர்பில் முறையிட்டோம் ஆனால்அவர்கள் எந்தவிதமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

வெள்ளம் தேங்கி நிற்கும் போது ஜே/348/350 பிரிவு கிராம உத்தியோகத்தரிடம் முறையிட்டோம் பயனளிக்கவில்லை.

எனவே மக்களின் அவல நிலையை கருத்தில் கொண்டு குறித்த வீதி அமைப்பு பணிகளுடன் தொடர்புடையவர்களுடன் விரைவில் தொடர்பு கொண்டு குறித்த வீதியை வடிகாலமைப்பு செய்தேனும் சீரமைத்து தரும்படி கோரி அப்பகுதி மக்களின் கையெழுத்து அடங்கிய மகஜர் ஒன்றை உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளனர். (இ-9)

# கல்வியா, செல்வமா, வீரமா? முப்பெரும்தேவிகளின் பெருவிழா



உலகநாடுகளில்உள்ள இந்துஆலயங்களிலும்அலுவலகங்களிலும்வீடுகளிலும் விளம்பி வருஷ 2018ஆம் ஆண்டிற்குரிய நவராத்திரி பூஜை (09.10.2018) இன்று செவ்வாய்க்கிழமை நிறை பூரண கும்பம் வைத்து மிகவும் பக்தி பூர்வமாக ஆரம்பமாகின்றது. நவராத்திரி விழா என்பது மக்களை துன்புறுத்தி வந்த மகிஷாசுரன் என்ற அரக்கனுடன் ஆதிபராசக்தி 9 நாட்கள் போரிட்டு 10 ஆவது நாளில் அவனை வதம்செய்துவெற்றிகொண்டதாக நம்பப்படுகின்றது.

முதல் மூன்று நாட்களும் வீரத்திற்கு அதிபதியாகிய கிரியா சக்தியான அன்னை துர்க்கையாகும். அடுத்த மூன்று நாட்களும் செல்வத்திற்கு அதிபதியான இச்சா சக்தியான திருமகளுக்கும் இறுதி மூன்று நாட்களும் ஞானசக்தியான கல்விக்கு அதிபதியான சரஸ்வதி வழிபாடு மேற்கொள்ளப்பட்டு இறுதிநாளான 10 ஆம் நாள் அன்று ஆயுத பூசை வழிபாடு மேற்கொள்ளப்படுகின்றது.

விஜயதசமி அன்று கோவில்களிலும் பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் குருமார்களினால் பாலர்களுக்கு ஏடு தொடக்கும் வைபவம் மேற் கொள்ளப்படுகின்றது. சக்தி விரதங்களில் நவராத்திரி விரதம் மிகவும் முக்கியமானது. நவராத்திரி முதல் நாள் அதிகாலை எழுந்து கர்மானுஷ்டானங்களை நிறைவு செய்து அம்பிகையை வழிபட்டு திருமுறைகள், அம்பிகை திருப்பதிகங்கள், சகலகலாவல்லி பாமாலை போன்றவற்றை பாராயணம் செய்து ஒரு பொழுது உணவை உட்கொள்ள வேண்டும். நவராத்திரி காலங்களில் உபவா சமிருத்தல் மகா உத்தமமாகும். இயலாதவர்கள் உணவைச் சுருக்கிக் கொள்ளலாம். விஜய தசமிக்கு அதிகாலை விரதத்தை நிறைவு செய்து கொண்டு அம்பிகை ஆலயங்களுக்குச் சென்று வழிபட வேண்டும்.

சிம்ம வாகனத்தில் அமர்ந்து சக்கரம், சங்கு, சூலம் முதலிய ஆயுதங்கள் தரித்துத் துக்க நிவாரணியாகத் துர்க்கை காட்சி தருகின்றாள்.

நன்மைகளையும்நன்மை செய்யும் எல்லாப் பொருட்களையும் அணிபவள் லக்ஷ்மி .ஆயிரம் இதழ்களையுடைய தாமரையில் இருகைகளிலும் தாமரைகள் தாங்கி அபயம், வரதம் என்ற முத்திரைகளுடன்வீற்றிருந்துஅருள்,பொருள் பாலிப்பவள் லக்ஷ்மி. வள்ளுவர் குறளில் இவளை "அகனமர்ந்து செய்யாள் மடியிலான்தாள்உளாள் தாமரையாள்" என்று கூறியுள்ளார். ஸ்ரீ நாராயணனின் திருமார்பில் லக்ஷ்மி அகலாமல் வசிக்கின்றார். லக்ஷ்மிக்கு எட்டு ஸ்வரூபங் கள் உள்ளன.

சரஸ்வதி தேவியானவள் கல்விக்கு அதிபதியானவள். சரஸ்வதிதேவியானவள் ஆயகலைகள் அறுபத்தி நான்கிற்கும் தலைமை தாங்குகின்றாள். அந்த அறுபத்து நான்கு கலைகளுள் சிற ந்து விளங்குவது இசைக் கலை என்றால் மிகையாகாது. இசையால் ஈர்க்கப்படாதவை எவையும் இல்லை என்றே கூறலாம். கல்வி அழியாத செல்வமாகும்.

ஏனைய செல்வங்கள் யாவும் பிறருக்குக் கொடுக்கும் தோறும் குறைந்து கொண்டே செல்லும். இதனால் தான் கல்விச் செல்வத்தை அழியாச் செல்வம் என்று கூறுகின்றனர். இதனையே வள்ளுவர் திருக்குறளில் பொருட்பால் கல்வி எனும் அதிகாரத்தில்

"கேடு இல் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
மாடு அல்ல மற்றயவை"

என்று கூறுகின்றார்.

ஒருவனுக்கு அழிவில்லாத உயர்ந்த செல்வம் கல்வியாகும். ஏனைய மண், பொன், பணம் முதலானவை சிறந்த பொருட் செல்வமாகாது என இரு வரிகளில் கூறியுள்ளார். கல்வி வெள்ளத்தால் அழியாது, வெந்தணலால் வேகாது, கள்வராலும் கவரப்பட முடியாது, இளமையிலும் முதுமையிலும்பயன் அளிக்க வல்லது, 'கல்வி கற்றவனையே உலகம் மதிக்கும், கல்லாதவன் நெடுமரம் போன்றவனாவான். அவனால் குடும்பத்திற்கோ, சமுதாயத்திற்கோ, நாட்டுக்கோ எந்தவித பயனும் கிடையாது. கல்வி ஒன்றே நம்மைக் கடைத்தேற்றும் கலம் என்பதை நம்மாணவச் செல்வங்கள் உணர வேண்டும்.

அன்னசத்திரம் ஆயிரம் கட்டுவதிலும் பார்க்க ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் கோடி புண்ணியமாகும். இந்தஉண்மையை உணர்ந்து வீட்டிலும் நாட்டிலும் கல்விப் பயிர் வளர்த்திட நம்கடன் பணி செய்து இந்த நவராத்திரி நன்னாளிலே அழியாச் செல்வமாகிய கல்விச் செல்வத்தை நமதாக்கிட முயல்வோ மாக.

சங்கீத கலாவித்தகர் கலைமாமணி
திருமதி மலர்விழி
கனகசபை, சண்டிலிப்பாய்.

# வெள்ளத்தில் மூழ்கும் அக்குறணைக்காக ஆர்ப்பாட்டம்

(அக்குறணை)

அக்குறணை நகரம் அடிக்கடி வெள்ளத்தில் மூழ்குவதாகவும்அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் கூறி சிவில் அமைப்புக்கள் இணைந்து மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்று அக்குறணை பிரதேச செயலாளர் காரியாலயம் முன்பாக நடத்தின.




ஒரு சில அதிகாரிகள் சட்டவிரோத நிர்மாணங்களுக்கு அனுமதி வழங்குவதால் முழு அக்குறணை நகரும் பாதிக்கப்பட்டு வருவதாகவும் அதற்கு எதிராக பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபை என்பன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இது தொடர்பாக அரசையும் ஏனைய நிறுவனங்களையும் விழிப்புணர்வூட்டும் வகையில் மாபெரும் ஆர்ப்பாட்டம் மற்றும் கடையடைப்பு என்பன இடம்பெற்றன.

பெருந்தொகையான பொது மக்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். இதனால் கண்டி-மாத்தளை பிரதான வீதியில் வாகனங்கள் செல்ல முடியாது சுமார் ஒரு மணி நேரம் போக்குவரத்து தடைப்பட்டது. (இ-7)

# மகிந்த அரசு பெற்றுக்கொண்ட கடன் மைத்திரி அரசின் அபிவிருத்திக்கு இடையூறு

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் கடந்த (மகிந்த) அரசாங்கம் பெற்றுக்கொண்ட கடன் இந்த (மைத்திரி) அரசாங்கத்தின் அபிவிருத்திகளுக்கு இடையூறாக இருப்பதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடம் அரசாங்கம் செலுத்த வேண்டிய கடன் தொகை மிகவும் உச்ச மட்டத்தில் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள் ளார்.

நுவரெலியா பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ-7)

# பாராளுமன்றத்தின் வாணி விழா நாளை

(யாழ்ப்பாணம்)

பாராளுமன்றத்தின் வருடாந்த வாணிவிழா நாளை 10 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.30 மணி முதல் நண்பகல் 12 மணி வரை பாராளுமன்றக் கூடலில் சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் நடைபெறும். (இ



வடக்கு மாகாண் தேசிய ஓய்வூதியர்தின விழா நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. யாழ்.மாவட்ட செயலகம் மற்றும் ஓய்வூதியத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்த நிகழ்வில் சிறப்புரைகள் இடம்பெற்றதுடன், ஓய்வூதியர்களுக்கான கவிதை, சிறுகதை போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், ஓய்வூதியர்கள் கௌரவிப்பும் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. இந் நிகழ்வில் மதகுருமார்கள், பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், பகிரங்கசேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதிய தலைவர் பொ.கமலநாதன், மாவட்ட செயலர்கள், அரச அதிகாரிகள், ஓய்வூதியர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-பொ.சோபிகா)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## ரவீந்திரராஜா நிலக்ஷி

யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையில் கல்வி கற்று 2018 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 185 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன் மென்மேலும் கல்வியில் பல சிறப்புக்களைப் பெற்று உயர்வடைந்து பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

மாமா (செ.திரவியம்)
அத்தை- (தி.யசோதா)
மச்சாள், மச்சான்.

யாழ்ப்பாணம். [5971]


# வைத்தியசாலைகளில் மருந்து கையிருப்பை கணனி மயப்படுத்த விசேட வேலைத்திட்டம்

## அமைச்சர் ராஜித தகவல்

(கொழும்பு)

வைத்தியசாலைகளில் மருந்து கையிருப்புத் தொடர்பான தகவல்களை கணனிமயப்படுத்தும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சுகாதார போசாக்கு மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவிக்கையில், சகல மக்களுக்கும் சமமான அளவில் சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதே தற்போதைய அரசாங்கத்தின் நோக்கமாகும்.

பொதுமக்களுக்கு தட்டுப்பாடின்றி மருந்தை விநியோகிப்பது இதன் நோக்கமாகும். மருந்து தட்டுப்பாடு ஏற்பட்டவுடன் உடனடியாக வைத்திய சேவைப் பிரிவுக்கு அறிவிப்பதுடன் ஏனைய வைத்தியசாலைகளில் இருந்து மருந்து வகைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் இதன் மூலம் வசதி கிட்டுகின்றது என்று அமைச்சர் தெரிவித்தார். மாகாண சபைகளில் உள்ள வைத்திய சாலைகளிலும் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட இருப்பதாகவும் சுகாதார போசாக்கு மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன மேலும் தெரிவித்தார். (இ-7)


**ENGLISH MEDIUM**
MATHS, SCIENCE, HELTH

Gr 6 தொடக்கம் G.C.E (O/L) தனியாகவோ, குழுவாகவோ ஒழுங்கு செய்யப்படுமிடத்து வீட்டில் வந்து கற்பிக்கப் படும்.

V.றமேஸ், பிறேம் Sir

077 644 4160



# பாராட்டுவதில் மகிழ்வடைகின்றோம்

யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையின் அதிபரும் எமது நண்பருமாகிய

## திரு.பேரம்பலம் தனபாலசிங்கம் (B.Ed,B.A,SLPS)



அவர்கள் 2018 ஆம் ஆண்டு தேசிய ரீதியில் நல்லதிபருக்கான "குரு பிரதீபா பிரபா" விருதினை பெற்றுள்ளதையிட்டு பாராட்டுவதுடன் மேலும் பல உயர்வுகளை பெற்றுக் கொள்ள வாழ்த்துகின்றோம்

Best Wishes

கல்விப்புலம்சார் நண்பர்கள்.

(5972)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா:33 - சூரி செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:காசாளர்<br>தொ.இ: B/8941 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>சூரி செவ் 8 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BFA<br>தொ.இ: G/8972 |
| பிறப்பு: 1982 NRC<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:AAT/தனியார் தொழில்<br>தொ.இ: B/8945 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 4<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:MBA<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/8977 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 11செவ் 2 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: B/8946 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 36<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/8984 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>சூரிசெவ் 5 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:HNDM/சொந்த தொழில்<br>தொ.இ: B/8949 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>செவ் 2 இல்<br>தகைமை/தொழில்:HNDA/அரச தொழில்<br>தொ.இ: G/8986 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# புதிய வீட்டுத்திட்டங்களை வழங்குவது குறித்து ஆராய இந்தியக்குழு கிளிநொச்சி விஜயம்



(கண்டாவளை)

**கிளிநொச்சி மாவட்டத்தில் புதிய வீட்டுத்திட்டங்களை வழங்குவது தொடர்பில் ஆராய இந்திய குழுவொன்று கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தது.**

குறித்த குழுவினர் நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரை சந்தித்தனர். இதன்போது கிளிநாச்சி மாவட்டத்தில் இதுவரை முன்னெடுக்கப்பட்ட வீட்டுத்திட்டங்கள், அவை முன்னெடுக்கப்பட்ட வகைகள், ஏற்பட்ட சிக்கல்கள் ஆகியவை தொடர்பிலும், குறித்த குழுவினர் கிளிநொச்சி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடம் கேட்டறிந்து கொண்டனர்.

குறித்த குழுவினருடனான சந்திப்பு தொடர்பில் ஊடகவியலாளர்கள் அரசாங்க அதிபரிடம் வினவியபோது,

இன்று (நேற்று) விஜயம் மேற்கொண்ட இந்தியக் குழுவினர் கிளிநாச்சி மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட வீட்டுத்திட்டங்கள், அவற்றின் முறைகள் தொடர்பில் கேட்டறிந்தனர். தற்போது கிளிநொச்சி மாவட்டத்திற்கு 16ஆயிரத்திற்கு மேற்பட்ட வீடுகள்தேவையாக உள்ளமை தொடர்பில் அவர்களிடம் தான் குறிப்பிட்டதாகவும் தெரிவித்தார்.

முன்னெடுக்கப்படவுள்ள வீட்டுத்திட்டம் 18 மாதங்களில் நிறைவு செய்வதற்காக திட்டமிடப்பட்டுள்ளதாக குறித்த குழுவினர் குறிப்பிட்டதாகவும், குறித்த வீட்டுத் திட்டங்கள் அமைப்பது தொடர்பில் ஆராய்வதற்கே தாம் வந்ததாகவும், ஆய்வு செய்ததன் பின்னர் மீண்டும் சந்திப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டதாக அரசாங்க அதிபர் தெரிவித் தார்.

இந்தியாவின் அனுசரணையோடு கிடைக்கும் வீட்டுத் திட்டத்துடன் கிளிநொச்சி மாவட்ட மக்களின் கணிசமான வீட்டு பிரச்சினைக்கு தீர்வு காணப்படும்.

வீட்டுத் திட்டங்களை கிளிநாச்சி மாவட்ட செயலகமும், பிரதேச செயலகங்களுமே நேரடியாக கண்காணிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, எமது மாவட்டத்தில் நீண்டகாலமாக குடிநீர் பிரச்சினை நிலவி வருகின்றது. அவற்றை தீர்ப்பதற்கு நாம் தொடர்ந்தும் பல்வேறு வழிகளில் சிரமங்களிற்கு மத்தியில் குடிநீரை வழங்கி வருகின்றோம்.

இந்த நிலையில் 700 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படுவதற்காக பூநகரி குளம் என்ற திட்டம் வரையப்பட்டு உள்ளது. குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் குறித்த குழுவினர் ஆராய உள்ளதாகவும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.

தொடர்ந்து குறித்த குழுவினர் கிளிநொச்சியில் மேற்கொள்ளப்பட்ட வீட்டுத்திட்டங்கள் தொடர்பில் நேரடியாக பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது. (2-315)




# ஒட்டுசுட்டான் வைத்தியசாலையை தரமுயர்த்துங்கள் முல்லை.பிரதேச அபிவிருத்திக்குழு கூட்டத்தில் கோரிக்கை

(பனிக்கன்குளம்)



முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் வைத்தியசாலையைத் தரமுயர்த்துமாறு அந்த பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்தி குழு கூட்டம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் வைத்தியகலாநிதி சி.சிவமோகன் , திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா ஆகியோரின் இணைத்தலைமையில் ஆரம்பமாகி இடம்பெற்றது. இதன்போதே பிரதேச மக் கள் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இதுதொடர்பில்மேலும் தெரியவருவதாவது.

ஆண்டுக்கு இரண்டு வைத்தியசாலையை தரமுயர்த்தல் செயற்றிட்டத்தின் கீழ் இந்த வருடம் இரண்டு வைத்தியசாலைகள் தரமுயர்த்தப்பட்டுள்ளதாக கடந்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் முல்லைத்தீவு சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்திருந்தார்.

ஆதலால் தமது பகுதியில் காணப்படும் வைத்தியசாலையையும் தரமுயர்த்தும்படியும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் இந்த வைத்தியசாலைக்கு வைத்தியர்கள் குறிப்பிட்ட நாட்களில் மட்டுமே வருகைதந்து நோயாளர்களை பார்வையிடுவதாகவும், போதிய வசதிகள் இல்லாததால் இப்பகுதி மக்கள் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கே நீண்ட தூரம் செல்லவேண்டியுள்ளது எனவும் தெரிவித்தனர்.

அத்துடன் தற்போது மகப்பேற்று தாதியர்கள், ஊசிபோடும் தாதியர்கள் இந்த வைத்தியசாலைக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் பிரதேச மக்களால் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது.

அதேபோல் அங்கு தரித்து நின்று வைத்தியர்கள் தமது சேவைகளை செய்யக் கூடிய வசதிகளையும், வைத்தியசாலைக்கு ஏனைய வசதிகளையும் செய்து தரும்படியும் கோரிக்கை விடுத்தனர்.

இது முத்தையன்கட்டு இடதுகரை மற்றும் வலது கரை மக்களுக்கு உதவியாக இருக்கும் எனவும் அவர்கள் தமது கோரிக்கையை முன்வைத்தனர்.

மேலும் குறித்த வைத்தியசாலை தரமுயர்த்த நடவடிக்கை எடுப்பதாக தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# கணித,விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்ற மாணவன் கௌரவிப்பு



(பனிக்கன்குளம்)

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய பாடசாலை சார்பாக சர்வதேச ரீதியில் இடம்பெற்ற விஞ்ஞான, கணித பாடத்தில் வெண்கலப்பதக்கத்தைப் பெற்றுக்கொண்ட மாணவன் ஜெயக்குமார் லெவிந் மற்றும் இப்போட்டியில் பங்குபற்றிய பத்மநாதன் ஆவினன் ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று பாடசாலை காலைப்பிரார்த்தனையின்போது பாடசாலை அதிபர் த.அமிர்தலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய சமூகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் சீனா நாட்டில் இடம்பெற்ற கணித விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் வெண்கலப்பதக்கத்தை வென்ற மாணவன் மற்றும் பங்கு பற்றிய மாணவன் ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வில் வவுனியா தெற்கு கல்வி வலய உதவிப்பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர்கள் கணிதம், விஞ்ஞானம், மாணவர்களை பயிற்றுவித்த ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள்கலந்துகொண்டு மாணவனைக் கௌரவித்தனர்.

மலர் மாலை அணிவித்து நுழைவாயிலிலிருந்து பாண்ட் வாத்தியங்களுடன் காலைப் பிரார்த்தனை மைதானத்திற்கு மாணவர்கள் அழைத்து வரப்பட்டு நிகழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# ஒட்டுசுட்டானில் மணல் அகழ்வு; பல மணிநேரம் வாத,பிரதிவாதங்கள்



(பனிக்கன்குளம்)



ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் இடம்பெறுகின்ற மணல் அகழ்வு தொடர்பில் பல மணிநேரம், வாத, பிரதிவாதங்கள் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்திக்குழு கூட்டம் நேற்றுக்காலை 9.30 மணிக்கு பாராளுமன்ற உறுப்பினர்களான வைத்திய கலாநிதி சி.சிவமோகன்,திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா ஆகியோரின் இணைத்தலைமையில் ஆரம்பமானது.

இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான வைத்தியகலாநிதி சி.சிவமோகன், திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா, வடக்கு மாகாண விவசாய அமைச் சர் க.சிவநேசன் வடக்கு மாகாண சபை உறுப்பி னர்களான ஆ.புவனேஸ்வரன்துரவிகரன் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் செ.பிறேமகாந்த்,பிரதேச சபை உறுப்பினர்கள்,பிரதேச செயலாளர் ம.பிரதீபன், உதவி பிரதேச செயலாளர் இ.ரமேஸ் உள்ளிட்ட திணைக்கள தலைவர்கள்,அரச அதிகாரிகள் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

கூட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் இடம்பெறும் மணல் அகழ்வு தொடர்பில் பலமணிநேரம் வாத பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

இதில் குறிப்பாக உள்ளூர் விண்ணப்பங்களை பிரதேச செயலகம் சிபார்சு செய்து அனுப்பிய பின்னரும் ஏனைய திணைக்களங்கள் இழுத்தடித்து செய்வதா கவும் ஏனைய வெளி மாவட்ட விண்ணப்பதாரிகளுக்கு உடனடியாக அனுமதிகள் வழங்குவதாகவும் இவற்றை நிறுத்தி உள்ளூர் மக்களுக்கு குறித்த அனுமதியை வழங்குமாறும் மணல் அகழ்வு தொடர்பில் நடைபெறும் பல்வேறு சட்டவிரோத செயற்ப்பாடுகள் தொடர்பிலும் கருத்து தெரிவிக்கப்பட்டது

வெளிமாவட்டங்களுக்கு வழங்கப்படும் அனுமதிகளை நிறுத்துமாறு பிரதேச அபிவிருத்தி குழு கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்ட போதும் அதைமீறி இந்த அனுமதிகள் எவ்வாறு வழங்கப்பட்டது என கேள்வி எழுப்பப்பட்டது. இருப்பினும் குறித்த விடயம் தொடர்பில் தீர்க்கமான முடிவுகள் எதுவும் நடைமுறைப்படுத்தப்படாதது இருப்பதும் இன்னும் தொடர்ந்தும் வருவதும் குறிப்பிடத்தக்கது. (2-281)

# ஞாயிற்றுக்கிழமைகளில் வர்த்தக நிலையங்களை மூடி ஊழியர்களுக்கு விடுமுறை வழங்குங்கள்

## கரைச்சி பிரதேசசபை தவிசாளர் அறிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சியிலுள்ள உணவகங்கள், மருந்தகங்கள், டயர் ஒட்டும் கடைகள் தவிர்ந்த அனைத்துக் கடைகளும் ஞாயிற்றுக்கிழமைகளில் முழுமையாக மூடப்பட்டு தொழிலாளர்களுக்கு விடுமுறை வழங்கப்படவேண்டும் என கரைச்சி பிரதேச சபை வர்த்தக நிலையங்களுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதாக கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி நகரப் பகுதிகளில் இரண்டிற்கு மேற்பட்ட வர்த்தக சங்கங்கள் இயங்கி வருகின்றன. கிளிநொச்சி வர்த்தக சங்கம், சேவைச் சந்தை வர்த்தக சங்கம், பரந்தன் வர்த்தக சங்கம் என்பன கிளிநொச்சி நகரை மையப்படுத்தி இயங்கி வருகின்றன. 2ஆயிரத்திற்கும்மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் இச் சங்கத்திலேயே உறுப்புரிமை வகிக்கின்றன.

கடந்த மாதங்களில் பிரதேச சபை அவதானிப்பின்படியும் அந்த கடைகளில் சிறப்பந்தியாக தொழில் புரியும் தொழிலாளர்களுடைய முறைப்பாட்டின் அடிப்படையிலும் இந்த அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

ஞாயிற்றுக்கிழமைகளில் ஒரு வர்த்தக நிலையத்தை திறப்பதாக இருந்தால் திருத்த வேலைக்காகவோ அன்றி இருப்பினை மதிப்பீடு செய்வதற்காகவோ வேறு வியாபார நோக்கத்துக்காகவோ வர்த்தக நிலையத்தை திறப்பதாக இருந்தால் வர்த்தக சங்கத்தின் அல்லது பிரதேச சபையின் முன் அனுமதி பெறப்பட்டே திறக்கப்பட வேண்டும்.

இது வர்த்தக சங்கங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. பண்டிகைக் காலங்களின் போது பண்டிகை நாட்களுக்கு முன்னர் வருகின்ற ஞாயிற்றுக்கிழமைகளில் வர்த்தக நிலையங்களை திறந்து வியாபாரம் செய்ய அனுமதிக்க முடியும்.

எனவே எதிர்வரும் காலங்களில் நடைமுறைகளை பின்பற்ற தவறும் வர்த்தக நிலையங்களுக்கு தொழிலுரிமை, தொழில்புரிவோர் பாதுகாப்பு சட்டம் என்பவற்றின் கீழும் நடவடிக்கை எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

எனவே ஞாயிற்றுக்கிழமைகள் பூரணமாக அனைத்துக்கடைகளும் மூடப்பட்டு தொழிலாளர்களுக்கு விடுமுறை விட்டு ஓய்வும் வழங்க வேண்டும் என்று பிரதேச சபை வர்த்தக சங்கங்களை கேட்டுக்கொள்கிறது. இதற்கான நடவடிக்கைகளை வர்த்தக சங்கங்கள் தீவிரமாக மேற்கொள்ள வேண்டும் என்று அவர்களை வலியுறுத்தி கேட்டுக்கொள்கின்றோம். (2-315)

## மாபெரும் டெங்கு ஒழிப்பு சிரமதானம் மன்னாரில் இரு தினங்கள் நடைபெறும்

(மன்னார்)

இராணுவத்தின்69 ஆவது ஆண்டு நிறைவையொட்டி மன்னார் தள்ளாடி 54 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்டத்தில் மாபெரும் டெங்கு ஒழிப்பு சிரமதானப்பணி தள்ளாடி 54 ஆவது படைப்பிரிவு அதிகாரி பிரிகேடியர் சேனரத் பண்டார தலைமையில் நேற்றுக் திங்கட்கிழமை காலை 8 மணியளவில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்ப நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது.

இதன்போது பிரதம விருந்தினராக மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, விருந்தினர்களாக மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார், சர்வமதத் தலைவர்கள், மன்னார் நகர சபையின் செயலாளர் பிரிட்டோ லெம்பேட், மன்னார் வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி சுகந்தி செபஸ்தியன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

மன்னார் மாவட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் டெங்கு ஒழிப்பு சிரமதானப்பணி எதிர்வரும் இரு தினங்கள் இடம்பெறவுள்ளன. பாடசாலைகள், பொது இடங்களில் குறித்த சிரமதானப்பணிகள் இடம் பெறவுள்ளதோடு. குறித்த பணியில் 70 அதிகாரிகள், 800 இராணுவ வீரர்கள் ஆகியோர் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-285)

## உழவனூர் கமக்கார அமைப்பிற்குட்பட்ட விவசாயிகளுக்கு மானிய உரம் வழங்கல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தர்மபுரம் உழவனூர் கமக்கார அமைப்பிற்குட்பட்ட பெரும்போக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு எதிர்வரும் 12 ஆம் திகதி அரச மானிய உரம் வழங்கப்படவுள்ளது.

புளியம்பொக்கணையிலுள்ள கமநல திணைக்களத்தில் வைத்து வழங்கப்படும் என உழவனூர் கமக்கார அமைப்பின் தலைவர், செயலாளர் ஆகியோர் அறிவித்துள்ளனர். (2-60)

## மோட்டார் சைக்கிள்களை ஏற்றி பயணித்த வாகனம் தடம்புரள்வு

### பனிக்கன்குளத்தில் சம்பவம்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிள்கள் ஏற்றிப்பயணித்த வாகனம் ஒன்று தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்று அதிகாலை 3.30 மணியளவில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி மோட்டார் சைக்கிள்களை ஏற்றிப் பயணித்துக்கொண்டிருந்த வாகனம் ஒன்று தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

இதன்போது சாரதி, நடத்துநர் காயங்கள் எதுவுமின்றி தெய்வாதீனமாக தப்பியுள்ளனர்.

இருப்பினும் குறித்த வாகனம் மற்றும் அதில் ஏற்றி வரப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் சேதமடைந்து பாரிய சொத்துச்சேதம் ஏற்பட்டுள்ளது. விபத்து தொடர்பில் மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர் (2-281)

# ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஆட்சியில் விவசாயிகள் சிறப்பாக வாழ்ந்தனர்

## வடக்கு விவசாய அமைச்சர் சிவநேசன் சுட்டிக்காட்டு



(பனிக்கன்குளம்)

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க நாட்டை ஆட்சி செய்த காலத்தில் விவசாயிகள் சிறந்தவர்களாகவும் விவசாயத்தின் மூலம் பல நன்மைகளைப் பெற்று சிறப்பாக வாழ்ந்த காலகட்டங்கள் இருக்கின்றன என வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் தெரிவித்துள்ளார்.

விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர, விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டிருந்தனர். "நாம் பயிரிட்டு நாம் உண்போம்" எனும் தொனிப்பொருளில் "வடக்கின் துரித விவசாய மீளெழுச்சி" எனும் எண்ணக்கருவில் கமத்தொழில் அமைச்சின் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் பல்வேறு திட்டங்களையும் ஆரம்பித்து வைத்தனர்.'

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

விவசாய நவீனமயமாக்கல் ஒரு சிறப்பான திட்டம். ஒட்டுசுட்டான் முத்தையன் கட்டு பிரதேசத்தை தெரிவு செய்திருப்பது ஒரு வரப்பிரசாதமாக பார்க்கின்றோம். 950 மில்லியன் ரூபாய் செலவில் ஐந்து ஆண்டுகளுக்கு இது செலவீடு செய்யப்பட்டு சிறப்பான திட்டமாக செயற்படுத்த இருக்கின்றது.

முத்தையன் கட்டு பிரதேசத்தை பொறுத்த மட்டில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க இந்த நாட்டை ஆட்சி செய்த காலத்தில் மிகச்சிறப்பாக இந்த மக்கள் சிறந்த விவசாயிகளாகவும் சிறப்பாக விவசாயத்தின் மூலம் பல நன்மைகளைப் பெற்று சிறப்பாக வாழ்ந்து வந்த காலகட்டம் இருக்கின்றது.

ஆனால் இன்று இத் திட்டம் நலிவடைந்து மாறி மாறி வருகின்ற அரசுகளின் திட்டங்கள் வருகின்ற போது பல வீனப்பட்டு போனது சகலரும் அறிந்த விடயமாக இருந்தாலும் கூட மிக சிறப்பாக சிறு தானியங்களை பயிரிட்டு அதன் மூலம் பல நன்மைகளைப் பெற்று வந்துள்ளார்கள்.

ஆறாயிரம் ஏக்கர் நிலப்பரப்பிற்கு நீரினை வழங்குகின்ற முத்தையன்கட்டுக் குளம் அபிவிருத்தி செய்யப்பட்டு உள்ளபோதும் உட்கட்டமைப்பு வசதிகள் திருத்தப் படாமல் இருப்பது நீரினை பயன்படுத்துவதில் பல இன்னல்கள் இருக்கின்றன.

இவ்வாறான உட்கட்டமைப்பு வசதிகள் சிறப்பாக செயற்படுத்தப்படுமாக இருந்தால் இன்னும் மிக சிறப்பாக செய்து விவசாயிகள் உச்ச பலனினைப் பெறுவார்கள்.

நவீனமயமாக்கல் என்பது தனியாக உற்பத்தியை நோக்காகக் கொண்டது அல்ல. நாங்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களை விவசாயிகள் கூடிய இலாபத் தை பெற்றுக்கொள்ளக் கூடிய வசதிகளும் ஏற்படுத்தப்பட இருக்கின்றது.

அது மட்டுமல்ல ஆயிரம் கிராமங்கள் ஆயிரம் குளங்கள் என்ற திட்டமும் வகுக் கப்பட்டுள்ளது. எங்கள் மாவட்டங்கள் வரட்சியான பிரதேசம். இங்கு மழை வீழ்ச்சி குறைந்துள்ளது.

இங்குள்ள விவசாயிகள் இரண்டு போகங்கள் பயிர்ச்செய்கையை செய்யக்கூடிய குளத்தை கொண்டிருந்தாலும் கூட கடந்த மூன்று ஆண்டுகளாக ஒருபோகமே தங்கள் பயிரை செய்கையாகச் செய்துள்ளார்கள். இதனால் வறுமைக்கோட்டின் கீழ் இந்த விவசாயிகள் சென்றுள்ளார்கள்.

ஆதலால் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கும் மேலதிகமான நிதிகளை ஒதுக்கி அபிவிருத்தித் திட்டங்களை சிறப்பாக செயற்படுத்துவதற்கு ஆவன செய்தால் இங்கு இருக்கின்ற மக்கள் சிறப்பாக விவசாயத்தை மேற்கொண்டு சிறந்த பலனை அடை யக்கூடிய நிலைமை இருக்கி ன்றது. கடந்த கால வரலா றுகளிலும் இவர்கள் சிறப் பான விவசாயத்தினை ஆற்றி இருக்கின்றார்கள் என்பதை கருத்தில் கொண்டு அதற்கான நடவடிக்கையினை மேற் கொள்வார் என்ற நம்பிக்கை உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (2-281)





## மணல் ஏலவிற்பனை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடைமையாக்கப்பட்ட மணல் ஏல விற்பனை எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு முல்லைத்தீவு நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (2)

# முல்லை. மாவட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு

## எதிர்கால கல்வி நடவடிக்கைக்கு நிதியுதவி



(பனிக்கன்குளம்)


தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்ற மு/பழம்பாசி பாடசாலை மாணவி இ.துஷ்சாதனா மற்றும் இறுதி யுத்தத்தில் தனது ஒரு கையை இழந்தும் மேற்படி பரீட்சையில் சித்திபெற்று சாதனை நிலை நாட்டிய முல்லைத்தீவு முள்ளியவளை கலைமகள் வித்தியாலய மாணவியான ஞானசீலன் ராகினி ஆகிய இருவரும் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த இரண்டு மாணவர்களும் நேற்று காந்தள் அமைப்பின் புதுக்குடியிருப்பிலுள்ள கைவேலி மருதநகர் அலுவலகத்தில் வைத்து பாடசாலை உபகரணங்கள் மற்றும் மாணவர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபாய் நிதியுதவியும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு இரண்டு மாணவர்களுக்கும் எதிர்கால கல்வி நடவடிக்கைக்காக மாதாந்தம் ஆயிரத்து 500 ரூபா வழங்குவதாக மாணவர்களுக்கு உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது. (2-281)

# இராணுவத்தின் 69வது ஆண்டு நிறைவையொட்டி அணிவகுப்பு





இராணுவத்தின் 69 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அணிவகுப்பு நிகழ்வு வவுனியாவில் இடம்பெற்றது.

வவுனியா- மன்னார் வீதியில் பட்டானிச்சூர் பகுதியில் நேற்றுக் காலை 9 மணியளவில் ஆரம்பமான இராணுவத்தின் அணிவகுப்பானது மன்னார் வீதி ஊடாக கண்டி வீதியை சென்றடைந்து நகரின் ஊடாக மூன்றுமுறிப்பு சந்தியில் இராணுவ தல்லைமையகம் முன்றலில் நிறைவடைந்தது.

இந்த அணி வகுப்பு நிகழ்வில் இராணுவத்தின் வன்னி கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் குமுது பெரேரா, இராணுவ அதிகாரிகள், இராணுவத்தினர், பொலிஸார் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

# பாடசாலை மாணவர்களுக்கு சித்திரம் பல்லூடக போட்டிகள்

நீரிழிவு, உயர் குருதியமுத்தம் மற்றும் அசாதாரண கொழுப்பு நிலை ஆகியன சமூகத்தில் உயர்மட்டத்தில் பரவியுள்ளன. இவை அனைத்தும் எதிர்கால இருதய நோய் மற்றும் பக்கவாதம் ஆகியவற்றை அதிகரிக்கச் செய்யக்கூடிய காரணிகளாகும். எனவே இவ்வாறான ஆபத்தை வருவிக்கக்கூடிய காரணிகளை முன்பிள்ளைப் பருவத்திலிருந்தே தடுக்க இயலுமானால் எதிர்காலத்தில் இவ்வாறான பேரழிவு நோய்களை தடுக்க இயலும். இவ்வாறான வருமுன் காக்கும் தடுத்தல்களை ஆரோக்கியமான உணவு, ஆரோக்கியமான நிறை மற்றும் உடற்பயிற்சிகள் அடங்கிய வாழ்க்கை முறைகளை மாற்றுவதன் மூலம் அடைந்து கொள்ளலாம்.

இலங்கை உட்சுரப்பியலாளர்கள் கல்லூரியின் வலுவூட்டும் பொதுக்கையான இலங்கை நீரிழிவு சம்மேளனமானது பல எண்ணிக்கையான செயற்பாடுகளின் மூலமாக ஊக்குவிப்பதுடன் அவற்றில் ஒன்றாக ''ஆரோக்கிய குடும்பம்- வளமான நாடு'' என்ற தொனிப்பொருளுடன்-2018 உலகநீரிழிவுதினத்தைகொண்டாடவுள்ளது.

இவ்வாறான கட்டுரைப் போட்டிகள் பாடசாலை பிள்ளைகளின் மத்தியில் இந்த நோக்ககங்களை அடைவதற்கான ஒரு உந்து சக்தியாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. அனைத்துசமர்ப்புக்களும் பின்வரும் வழிகாட்டிகளுக்கு அமைந்தொழுகுவதுடன் 2018 ஒக்டோபர் 30ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் இலங்கை நீரிழிவு சம்மேளனம், இலங்கை உட்சுரப்பியலாளர்கள் கல்லூரி, இல.6, விஜேராம மாவத்தை, கொழும்பு 7 என்ற முகவரிக்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் தாமதமான சமர்ப்பிப்புக்கள் ஆகியன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இவ்வாறான பதிவுகள் இலங்கை நீரிழிவு சம்மேளனத்துடன் பதிப்புரிமையாக ஆக்கப்படுவதுடன் இலங்கை நீரிழிவு சம்மேளனமானது அவைகளை டிஜிற்றல் மற்றும் அச்சிடல் மூலமாக விழிப்புணர்வொன்றை உருவாக்குவதற்காக பயன்படுத்தும்.

* தொனிப்பொருள்:- "ஆரோக்கியமான குடும்பம்- வளமுள்ள நாடு"
* நோக்கம்:- நீரிழிவு மற்றும் ஏனைய தொற்றாநோய்களை தடுப்பதற்காக தேவைப்படும் மாற்றங்களில் மையப்படுத்தல்.
* வயது வகுதிகள்

➢ கனிஷ்ட வகுதி:- 2019.01.01 ஆம் திகதியன்று 5 இற்கும் 10 வயதிற்குமிடைப்பட்டது.

➢ இடைநிலை வகுதி:- 2019.01.01 ஆம் திகதியன்று 11 இற்கும் 15 வயதிற்குமிடைப்பட்டது.

➢ சிரேஷ்ட வகுதி:- 2019.01.01 ஆம் திகதியன்று 16 இற்கும் 18 வயதிற்குமிடைப்பட்டது.

* அனைத்து மூன்று வயது வகுதிகளின் மாணவர்கள் சித்திரம் மற்றும் கட்டுரைப் போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.
* இடைநிலை மற்றும் சிரேஷ்ட வகுதிகளிலுள்ள மாணவர்கள் மாத்திரம் பல்லூடக போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்.
* சமர்ப்பிப்புக்கள்

01. கட்டுரைப் போட்டி/சித்திர வேலை மற்றும் பல்லூடக வேலை ஆகியன பதிவுத் தபாலில் மேலேயுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். அல்லது முழுமையான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்படிவத்துடன் நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும்.

02. கட்டுரைப் போட்டியானது தட்டெழுத்தில் பொறிக்கப்படல் வேண்டும். அல்லது கையெழுத்தில் எழுதப்படல் வேண்டுமென்பதுடன் சிங்களம்-தமிழ் அல்லது ஆங்கில மொழிகளில் எழுதப்படலாம்.

03. சித்திர வேலையானது ஏ3 அளவுத்தாளில் மொழி மூலம்-எதுவாகவுமிருக்கலாம்.(நிலக்கரி, டிஜிற்றல், கிரையன்ஸ், நீர் பெயிண்ட், எண்ணெய் பெயிண்ட் அல்லது வேறேதாவது)

04. பல்லூடகமானது சீடி/டிவிடி அல்லது வேறேதாவது storage device இல் இருத்தல் வேண்டும்.

05. அனைத்து கட்டுரைகளும் மூலப்பிரதியாகவும் எப்பாங்கிலுமான கருத்து திருட்டு ஆக இருப்பது கூடாது.

**கட்டுரைப் போட்டி**

* சொற்களின் எல்லை

| | |
|---|---|
| கனிஷ்ட வகுதி:- | 250 சொற்கள் |
| இடைநிலை வகுதி:- | 1000 சொற்கள் |
| சிரேஷ்ட வகுதி:- | 1500 சொற்கள் |

**பல்லூடக போட்டி**

**விபரக் குறிப்புக்கள்:-** Short video with a maximum duration of 5 minutes on above topic, Format mp4, mov, fiv wmv, avi

**பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள்**
**(அனைத்து வகுதிகளுக்குமானது)**

1 ஆம் பரிசு: 25,000ரூ.
2 ஆம் பரிசு: 15,000ரூ.
3 ஆம் பரிசு : 10,000ரூ.

சான்றிதழ்கள் மற்றும் ஆறுதல் பணப்பரிசுகள் முதலாவது 10 இடங்களுக்கு வழங்கப்படும் .

**இலங்கை நீரிழிவு சம்மேளனம்,**
**இலங்கை உட்சுரப்பியலாளர் கல்லூரி மே/பா.,**
**இல .6, விஜேராம மாவத்தை, கொழும்பு- 7**

**பாடசாலை பிள்ளைகளுக்கான கட்டுரை/ சித்திரம் மற்றும் பல்லூடக போட்டி**

முழுப்பெயர் (பெயர் பெரிய எழுத்துக்களில்)
:.......................................................................
முதலெழுத்துக்களுடனான பெயர் :....................................
பிறந்ததிகதி :..........................................................
வயது :..................................................................
வகுப்பு :................................................................
பாடசாலைப் பெயர் மற்றும் முகவரி :...............................
பாடசாலை தொலைபேசி இலக்கம் :...................................
அலைபேசி :.............................................................
இல்லம் :................................................................
மின்னஞ்சல் முகவரி :..................................................

**போட்டியாளரின் ஒப்பந்தம்:-**

இப்போட்டியின் விதிகளை நாம் அறிவோம். அத்துடன் மேலேயுள்ள அனைத்து நிபந்தனைகள் மற்றும் நியதிகளுக்கு கட்டுப்படுகின்றோம். டிஜிற்றல் மற்றும் அச்சிடல் முறையில் விழிப்புணர்வை உருவாக்குவதற்காக எமது செயற்றிட்ட வேலையை இலங்கை நீரிழிவு சம்மேளனமானது பாவிக்கலாம் என்பதனை நாம் அறிவோம். இலங்கை நீரிழிவு சம்மேளனத்தின் தீர்மானமே இறுதியானது என்பதை நாம் அறிவோம். இத்துடனுள்ள பதிவானது எமது சொந்த உருவாக்கம் என்பதை நாம் சான்றுப்படுத்துகின்றோம்.

கையொப்பம் :............................ திகதி :....................

**அதிபரின் பிரகடனம்:-**

இப் பணியானது மேலே குறிப்பிட்டுள்ள பாடசாலையின் சொந்த வேலையென்பதும் நாம் அனைத்து தகுதித் தன்மை தகவுத் திறனை பூர்த்தி செய்துள்ளோம் என்பதையும் இக்கட்டுரையானது இதற்கு முன்னர் பிரசுரிக்கப்படவில்லையென்பதையும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

பெயர் மற்றும் கையொப்பம்:.......................................
இறப்பர் இலட்சினை :................ திகதி :.................

# அரசு எடுக்கும் தவறான முடிவுகளால் 'தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்'

## மகிந்தானந்த எம்.பி.குற்றச்சாட்டு



(கொழும்பு)

இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்பதையே, ஐக்கிய அமெரிக்காவின் உப ஜனாதிபதி மைக் பென்ஸ் எடுத்துரைத்திருக்கிறார் எனத் தெரிவித்துள்ள ஒன்றிணைந்த எதிரணி, நாட்டின் தேசிய பாதுகாப்பைக் கருத்திற் கொள்ளாது, நல்லாட்சி அரசாங்கம் எடுக்கும் தவறான முடிவுகளாலேயே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளது.

அம்பாந்தோட்டைத் துறைமுகம், சீனக் கடற்படைத் தளமாகும் என, ஐக்கிய அமெரிக்க உபஜனாதிபதி மைக்பென்ஸ் தெரிவித்திருந்த கருத்துத் தொடர்பில் நேற்று முன்தினம் வினவியபோதே, ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், "அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீனாவுக்கு விற்பனை செய்ய வேண்டாம் என, ஒன்றிணைந்த எதிரணியினரான நாம் வீதியில் இறங்கிப் போராடினோம்.

ஆனால் அரசாங்கம், எங்களது பேச்சுகளைக் கண்டு கொள்ளாது, சீனாவுக்கு அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை விற்பனை செய்தது" எனத் தெரிவித்தார்.

இதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கிடையில், இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகள் தொடர்பில் வினவியமைக்கு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை வீட்டுக்கு அனுப்பும் காலம் வந்துவிட்டதெனவும், பிரதமரின் தவறான பொருளாதாரக் கொள்கையே, நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்படக் காரணம் எனவும் தெரிவித்தார். (இ-7)

# அனர்த்த நிலைமைகளை எதிர்கொள்ளத்தயார்

## அமைச்சர் வஜிர தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் எத்தகைய அனர்த்த நிலைமைகளையும் எதிர்கொள்வதற்குத் தயாராகவுள்ளதாகவும் மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் அதற்கான தயார் நிலையில் உள்ளதாகவும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

தொடரும் மோசமான காலநிலையினால் நாட்டில் வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக பல்வேறு பகுதிகளில் அனர்த்த நிலை உருவாகியுள்ளது எனவும் இதிலிருந்து மக்களை பாதுகாக்கவும் அவர்களுக்கு தேவையான நிவாரணங்களை வழங்குவதற்கும் மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்குத் தேவையான பணிப்புரைகளை வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

வெள்ளத்தினால் பாதிப்புற்ற பகுதிகளில் அனர்த்தங்களிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு இடர் முகாமைத்துவ அமைச்சு மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு ஆகியன இணைந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. இதற்கிணங்க பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உலருணவு, குடிநீர், சமைத்த உணவு மற்றும் மருந்துப் பொருட்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான செயற்பாடுகளை மாவட்ட செயலகங்கள் மேற்கொண்டு வருகின்றன என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

மோசமான காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தமது பிரதேச, கிராம சேவை அதிகாரிகளுக்கு உடனடியாக அறிவிக்குமாறும் அவர் பொது மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

நாட்டின் மேற்கு திசை அரேபியக்கடல் பிரதேசத்தில் நிலைகொண்டுள்ள தாழமுக்கம் காரணமாக நாட்டில் நிலவும் மழையுடன் கூடிய காலநிலை மேலும் சில தினங்களுக்கு நீடிக்கும் என வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. (இ-7)

# நவராத்திரி விழா ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகை சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய நவராத்திரி விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகும்.

எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விஜயதசமியன்று பிற்பகல் 1.30 மணிக்கு கும்ப பூஜையுடன் ஆரம்பமாகி கண்ணகி அம்மன் எழுந்தருளி நெடு வீதி வலம் வந்து வட்டுக்கோட்டை மத்திய கல்லூரிக்கு முன்பாகவுள்ள இலுப்பையடி ஞானவைரவர் ஆலயத்தில் வாழை வெட்டும் இடம் பெறும். (இ

# இரு நூல்கள் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வேலணைதுறையூர்கலை இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் வேலணையூர் ரஜிந்தனின் "நிலா நாழிகை", "பொற் கனவு" ஆகிய இரு நூல்கள் வெளியீட்டு விழா எதிர்வரும் 14அம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் வேலணை துறையூர் தாளையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலய கலாசார மண்டபத்தில் யாழ். இலக்கிய குவியத் தலைவர் கவிஞர் வேலணையூர்தாஸ்தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் செயலக உதவிச் செயலாளர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் கலந்து கொள்வார். (இ

# புலமைப்பரிசில் பெறுபேறுகள்

யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை சுன்னாகம்

ச.சாலரசி-188, சி.பவித்திரா-186, நெ.கிருபாஸ்னி-184, தி.ஹரிப்பிரியன்-182, சி.மாருதி-182, சு.ஜட்சனன்-180, வி.லக்ஸனா-178, ம.பபினகா- 175, ம.நிறோஸ்-173, ந.கிருசிகா-173, மு.மாதுளா-173, செ.வேணுமிதன்-171, த.தனுஜா-170, கோ.தமிழினி-169, அ.அஸ்வினி-168, க.பிரியாஸ்- 166, கோ. கனிவிழி-166, தே.ரக்சனா-166, சு.நதீஸா- 165, ம.காவியா -165, சு.விவேகன்-164.




யாழ்.குடத்தனை கரையூர் றோ.க.த.க.பாடசாலையின் ஆசிரியர் தின நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் பொற்பதி மக்களாலும் புலம்பெயர்ந்த உறவுகளாலும் பாடசாலை மண்டபத்தில் கொண்டாடப்பட்டது.
(படங்கள்:-பொற்பதி செய்தியாளர்)

# ஒருவரின் நல்ல குணங்களைப் பாராட்டும் குணம் எம்முள் உதிக்க வேண்டும்

## சத்திரசிகிச்சை நிபுணர் முகுந்தனின் மதிப்பளிப்பு விழாவில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

பிறரின் நல்ல குணங்களையும் நல்ல செயல்களையும் பாராட்ட எமக்குப் பிடிப்பதில்லை "யார் உவர்? அவருக்கு என்ன தெரியும்?" என்று எந்த நேரமும் மற்றவர்களை இழுக்குடன் குறிப்பிடும் வழக்கமே மேலோங்கியுள்ளது.

ஒருவரின் நல்ல குணங்களை, திறமைகளை, திறன்களை கண்டவுடன் பாராட்டும் குணம் எம்முள் உதிக்க வேண்டும்என வடக்குமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இருதய நெஞ்சறை சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி சிதம்பரநாதன் முகுந்தனின் மதிப்பளிப்பு விழா சாவகச்சேரி சிவன் கோவிலடி தென்மராட்சி கலாசார மண்டபத்தில்நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குப் பெருமை சேர்க்கும் வகையிலும் இப்பிரதேசத்தில் வறுமை நிலையிலுள்ள இருதய நோயாளிகளின்நீண்டகாலத்தேவையை நிறைவேற்றும் வகையிலும் யாழ்.போதனா வைத்தியசாலையில்தாமாகவே முன்வந்து இருதய சத்திரசிகிச்சைக்கான விசேட சத்திரசிகிச்சைக்கூடம் ஒன்றை அமைத்தவர் இன்றைய பாராட்டுக்கு உள்ளாகும்வைத்திய கலாநிதி முகுந்தன். அதற்கு ரிய விசேட ஆளணியையும் உருவாக்கி அவர்களுக்கான பயிற்சிகளைத் தமது நேரடி ஒழுங்கில் கொழும்பில் உள்ள இவ் வாறான சத்திரசிகிச்சைக் கூடங்களில் பெற்றுக் கொடுத்தவரும் அவரே.

யாழ்.போதனா வைத்தியசாலையில் இருதய மாற்று சிகிச்சை முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற உயரிய நோக்கில் ஒரு வருடத்திற்கு மேலாக முனைப்புடன் பல ஆயத்தங்களை செய்து 2017 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் யாழ்.போதனா வைத்தியசாலையில் மிகக் குறைந்த உபகரண, ஆளணி வசதிகளுடன் இருதய மாற்று சத்திரசிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளார் அவர். எமது மக்களிற்கும் இந்த மண்ணிற்கும் வலுச்சேர்த்துள்ளார் எங்கள் அன்பிற்குரிய இருதய சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி சிதம்பரநாதன் முகுந்தன் . அவரைப் பாராட்டிக் கௌரவிக்கின்ற இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உங்கள் முன் உரையாற்றுவதில் மகிழ்வடைகின்றேன்.

நல்ல மனிதர்களின் நற்பணிகளை வாழ்த்தும் சமூகமே நலமுற்று வாழும். நன்றி உணர்வு தமிழ் மக்களுடைய பண்பாடுகளில் மிக முக்கியமானது. இதனால்தான் "உய்வில்லை செய்ந் நன்றிகொன்ற மகர்க்கு" என்று வள்ளுவப் பெருந்தகை குறிப்பிட்டார்.

இன்றைய காலகட்டத்தில் சுயநல மேலீட்டால் எங்களுள் பலர் நன்றி மறந்து வாழத் தலைப்பட்டு விட்டோம். கடந்த போர்க்காலம் அதற்கொரு காரணமோ நான் அறியேன். பிறரின் நல்ல குணங்களை, நல்ல செயல்களைப் பாராட்ட எமக்குப் பிடிப்பதில்லை. "யார் உவர்? அவருக்கு என்ன தெரியும்?" என்று எந்த நேரமும் மற்றவர்களை இழுக்குடன் குறிப்பிடும் வழக்கமே மேலோங்கியுள்ளது. ஒருவரின் நல்ல குணங்களை, திறமைகளை, திறன்களை கண்டவுடன்பாராட்டும் குணம் எம்முள் உதிக்க வேண்டும். பாராட்டு வேண்டுமிடத்தில் பாராட்டைப் பொழிய வேண்டும் என்றே எமது பாரம்பரியம் கூறுகின்றது.

மட்டுவில் கிராமத்தில் நடுத்தர குடும்பத்தில் அவதரித்த வைத்திய கலாநிதி முகுந்தன் சிறுவயதில் இருந்தே தனது கல்வியில் ஆர்வம் காட்டி க.பொ.த. உயர்தர கற்கை நெறியில் முதல் ஒரு வருடம் கணிதத்துறையில் கல்வி கற்று அதன் பின்னர் மருத்துவத்துறைக்கு மாறி க.பொ.த உயர்தரப் பரீட்சையில் முதற் தடவையிலேயே மருத்துவத் துறைக்கு தேர்வாகி யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் தமது மருத்துவ கற்கை நெறிகளை சிறப்பாக நிறைவு செய்தார்.

அதன் பின் கொழும்பு பல்கலைக்கழகம், நியூசிலாந்து பல்கலைக்கழகம் ஆகியவற்றில் விசேட பட்டப் பின்படிப்புக்களை நிறைவு செய்து இன்று ஒரு துறைசார்ந்த விற்பன்னராக விளங்குகின்றார் என்றால் அது அவரின் தொடர்ச்சியான விடா முயற்சிக்கும் எதிர்பார்ப்பிற்கும் கிடைத்த ஒரு வெற்றி என்றே கூற வேண்டும்.

இந் நிலையில் அவருக்கு இன்று வழங்கப்படுகின்ற கௌரவம் ஒரு நிறைவான கௌரவமாக அனைத்து மக்களின் உள்ளக்கிடக்கைகளை வெளிக்காட்டுகின்ற உணர்வு பூர்வமான ஒருநிகழ்வாக அமைந்திருப்பதையிட்டு நான் பெரிதும் மகிழ்வடைகின்றேன்.

"விளையும்பயிரை முளையிலே தெரியும்" என்பதற்கு ஒப்பாக வைத்திய கலாநிதி முகுந்தன் யாழ்.மருத்துவ பீடத்தில் மருத்துவத் துறையில் மாணவனாக இருந்த காலத்திலேயே அவரின் அதீத திறமைகள் பற்றி அக் காலத்தில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அறுவைச் சிகிச்சை நிபுணர்களாக இருந்த வைத்திய நிபுணர்கள் தம்மிடையே பேசிக் கொண்டதாக சிலர் எனக்குத் தெரிவித்திருந்தனர்.

இவ் உலகில் அவதரிக்கின்ற மக்களில் ஒரு தொகுதியினரே செல்வச் செழிப்புடன் வாழ்கின்றார்கள். அவ்வாறு செல்வ மிகுதியில் வாழும் மக்களில் மிகச் சொற்பமானவர்களே தம்மிடம் இருக்கக் கூடிய செல்வத்தில் ஒரு பகுதியை ஏழை எளியவர்களுக்கு வழங்கக்கூடிய நல்ல மனதைக் கொண்டிருக்கின்றார்கள். அறிவும் திறமையும் கூட அவ்வாறு தான். சிலரே தமது அறிவையும் திறமைகளையும் மற்றோருக்கு உதவி செய்யும் விதத்தில் பாவிக்க வேண்டும் என்று நினைக்கின்றார்கள்.

வைத்திய கலாநிதி முகுந்தன் பணம் உழைக்கின்ற எதிர்பார்ப்பை முதன்மைப் படுத்தி இருப்பாரேயாயின் உலகில் உள்ள எந்தவொரு நாட்டிலும் இவர் தனது சேவையைத் தொடர்ந்திருக்க முடியும் அங்கு கோடி கோடியாக பணஞ் சம்பாதித்திருக்க முடியும்.

ஆனால் அவர் இவற்றையெல்லாம் விரும்பாது தனது மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும்என்ற உயரிய நோக்கிலே கொழும்பில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அவரின் குடும்ப உறுப்பினர்களை அங்கேயே விட்டு விட்டு தனி ஒருவராக இந்த மண்ணில் சேவை ஆற்றிவருகின்றார்.

அவர் ஆற்றும் சேவையின் பிரதிபலிப்பே இவ்வளவு மக்களின் இன்றைய பிரசன்னம். மக்கள் மனங்களை வென்ற அவரை இன்று தென்மராட்சி மக்கள், தமது மண்ணின் மைந்தன் என்று உரிமையுடன் பாராட்டிக் கௌரவிக்க முன்வந்திருக்கின்றார்கள். இதுவே அவரின் உழைப்பிற்குக் கிடைத்த மதிப்பிட முடியாத ஊதியமாகும்.

நல்ல பணிகளை ஆற்றுகின்ற மக்களுக்கு சில எதிர்ப்புக்கள் வரத்தான் செய்யும். வடமாகாண முதலமைச்சர் அதற்கொரு உதாரணம். எனினும் தடைகளைத் தாண்டி முனைப்புடன் முன்னேற இந்தளவு பெரிய மக்கட் கூட்டமும் சமூக அமைப்புக்களும் தனக்குப் பின்னால் இருப்பதை வைத்திய கலாநிதி முகுந்தன் மறந்து விடமாட்டார் என்று நம்புகின்றேன்.

வைத்திய கலாநிதி முகுந்தன் யாழ்.போதனா வைத்தியசாலையில் 2017 மார்கழி 20ஆம் திகதி திறந்த இருதய சத்திர சிகிச்சைக் கூடத்தை வெற்றிகரமாகத் திறந்து அதை நடத்திச் சென்றதைப் பாராட்டும் முகமாக கொழும்பிலிருந்து சுகாதார சேவைகள் அமைச்சர் ராஜித சேனாரட்ன மற்றும் வைத்திய சேவைகள் பணிப்பாளர் நாயகம் இருவரும் நேரடியாக இங்கு சமுகமளித்து சத்திர சிக்சைக்கு உட்படுத்தப்பட்ட நோயாளர்களுக்கு பழக்கூடைகளை வழங்கியும் வைத்திய நிபுணருக்கு மலர்க்கொத்துக்கள் வழங்கியும் கௌரவித்துச் சென்றமையை அனைத்துப் பத்திரிகைகளும் பிரசுரித்திருந்தன.

இவ்வாறு திறமை மிக்கவர்கள் கொழும்புத் தலைமைகளினால் மதிப்புடன் உற்று நோக்கப்படுகின்றார்கள். எம்மவராலோ அவர்கள் பொறாமையுடன் நோக்கப்படுகின்றார்கள். ஆனால் உலகம் கூட திறமை மிக்கவர்களை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கும் பல செய்திகளை நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம்.

சில காலத்திற்கு முன்பு இலங்கையின் புகழ்பூத்த வைத்திய நிபுணர் ஒருவர் அமெரிக்காவுக்கு சென்று வருவதற்காக விமானப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். இடையில் இரண்டாவது விமானத்திற்காக காத்திருந்த வேளையில் அவரை ஒரு வெளிநாட்டவர் அணுகி பேச்சுக் கொடுத்திருக்கின்றார்.

சிநேகபூர்வமாக ஆரம்பித்த பேச்சு பின்னர் இவரின் விபரங்களைத் துழாவுகின்ற பேச்சாக மாறி "ஏன் நீங்கள் அமெரிக்காவில் நிரந்தரமாக குடியேறக்கூடாது?" என்ற பாணியில் சென்றதாம். அந்த வைத்திய நிபுணர் தமது பிள்ளைகள் இலங்கையில் கல்வி கற்கின்றார்கள். அதனால் குடிபெயர்வுக்குச் சாத்தியமில்லை என்று தெரிவித்த போது அந்த குறிப்பிட்ட வெளிநாட்டவர் இவரின் பிள்ளைகளின் பெயர்கள் முதற்கொண்டு அவர்களின் கல்வித் தராதரம், தற்போதைய நிலை, மொழி அறிவு ஆகிய சகல விடயங்களையும் அடுக்கிச் செல்ல வைத்திய நிபுணருக்கு மலைப்பு ஏற்பட்டுவிட்டது.

பின்னர் விசாரித்ததில் அவர் ஒரு அமெரிக்க உளவு அதிகாரி என்பது தெரிய வந்ததாம். அதாவது சாதாரணமாகப் பயணம் செய்கின்ற ஒரு கல்விமானைப் பற்றிக் கூட அவர்கள் எவ்வளவு தூரம் அறிந்து வைத்திருக்கின்றார்கள் என்று தெரிய வந்தது. ஆனால்எமக்கு இந்த அருமை பெருமைகள் தெரிவதில்லை.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 20ஆம் திகதியில் இருந்து இன்று வரை 65 பேருக்கு திறந்த இருதய அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக நிறைவேற்றியிருக்கின்றார் வைத்திய கலாநிதி முகுந்தன். அதிலும் இருவரின் நிலை மிக மோசமாக இருந்தது.

அச் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ள கொழும்பில் உள்ள பிரத்தியேக வைத்தியசாலைகளில் உள்ள வைத்திய நிபுணர்கள் தயக்கம் காட்டினார்கள். இவர் தனியொருவராக அந்த இரண்டு சத்திர சிகிச்சைகளையும் வெவ்வேறு திகதிகளில் மிகத் திருப்திகரமாக மேற்கொண்டு வெற்றிவாகை சூடினார்.

அன்பான வைத்திய நிபுணரே!

உங்கள் சேவைக்காக மக்கள் காத்துக் கிடக்கின்றார்கள். இருதயம் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நிலையிலும் அறுவைச் சிகிச்சைக்கு பணமின்றி பலர் எம்மிடம் வருகின்றார்கள். முடிந்தளவு சிறுசிறு உதவிகளைப் புரிகின்றோம். முழுமையாக உதவ முனைகின்ற போது போதுமான நிதி கையிருப்பில் இல்லை என்பது வருத்தத்திற்குரியது.

இவ்வாறான வறுமை நிலையில் உள்ளவர்களைக் காப்பாற்ற ஒரு நிதியை ஏற்படுத்தினால் என்ன என்று தோன்றுகின்றது. அரசாங்க வைத்தியசாலைகளில் இலவசமாக சிகிச்சை அளித்தாலும் உங்களால் சிகிச்சை வழங்க முடியுமான நோயாளர்கள் ஒரு குறிப்பிட்ட தொகையினரே. மற்றவர்கள் தனியார் வைத்தியசாலைகளில் பணம் கட்டியே சிகிச்சை பெற வேண்டும். அதற்கேதுவாக குறிப்பிட்ட நிதியம் பண உதவி செய்யலாம்.

நம்பிக்கை நட்சத்திரமாக திகழக்கூடிய உங்கள் சேவை எமது இருதயம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொடர்ந்தும் கிடைக்க வாழ்த்தி இலங்கையில் கிடைக்கக்கூடிய அதி உயர் கௌரவமான ஜனாதிபதியின் அதியுயர் விருது தங்களுக்கு கிட்ட வேண்டும் எனவும்வாழ்த்தி எனது உரையை நிறைவு செய்கின்றேன் என அவர் மேலும்தெரிவித்தார். (இ-7-30)

## மூன்று மாடுகள் பறிமுதல்



(கரணவாய்)

கொடிகாமத்திலிருந்து நெல்லியடிக்கு மூன்று பசு மாடுகள் மற்றும் ஒரு கன்றுக்குட்டியை வடிவாகனத்தில் கொண்டு செல்லும் போது நெல்லியடி பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டது.

அத்துடன் மாடுகளைக் கொண்டு சென்றவர்களிடம் எந்தவித அனுமதி பத்திரமும் இல்லாத காரணத்தால் மேலதிக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். (இ-60)

## வர்த்தக நிறுவனங்களை உடன் பதிவு செய்யுங்கள்

### யாழ்.மாநகர முதல்வர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் கடந்த மாதம் 28 ஆம் திகதி 6 ஆம் அமர்வில் பின்வரும் தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படுவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது. தீர்மானமாவது "யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வர்த்தக நோக்கிலான அல்லது சேவை நோக்கிலான நிரந்தர குடியிருப்பாளர்கள் அல்லாத சுற்றுப்பயணிகளுக்கு அல்லது பயணிகளுக்கு தங்குமிட வசதியை செய்து கொடுப்போர் தங்களது வர்த்தக அல்லது சேவை நிறுவனங்களை மாநகர சபையின் நடைமுறைகளுக்கமைவாக பதிவு செய்து கொள்ளல் அவசியமாகும்.

அந்த வகையில் வர்த்தக அல்லது சேவை நோக்கில் நீண்டகால மற்றும் குறுகிய கால அடிப்படையில் நடத்தப்படுகின்ற ஹோட்டல், லொட்ஜ், வீடுகள், தங்குமிடங்கள், Boardings, ரெஸ்ரோரன்கள் அனைத்தும் எதிர்வரும் 30 ஆம்திகதிஅல்லதுஅதற்குமுன்னர் மாநகர சபையின் நடைமுறைகளுக்கமைவாக பதிவு செய்யப்படுதல்வேண்டும் என யாழ்மாநகரமுதல்வர் இ.ஆனல்ட் அறிவித்துள்ளார். (இ-9)

## சேக்கிழார் மன்ற கிளைதிறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.அராலி மத்தியிலுள்ள வண்ணபுரம் சிவாலயத்தில் அகில இலங்கை சேக்கிழார் மன்றத்தின் கிளை கடந்த மாதம் 30 ஆம் திகதி அருள்மொழி அரசு இறைபணிச் செம்மல் ச.கா. சபாநாதன் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. (இ




# 7 தமிழர்கள் விடுதலை விவகாரம்

## ஆளுநரை விரைந்து முடிவெடுக்க வலியுறுத்தி ஒரு இலட்சம் அஞ்சல் அட்டைகளை அனுப்ப திட்டம்

### திருமாவளவன் தெரிவிப்பு



முருகன் பேரறிவாளன் சாந்தன்



நளினி ரவிச்சந்திரன் ராபர்ட் பயாஸ் ஜெயக்குமார்



(சென்னை)

7 பேர் விடுதலை விவகாரத்தில் ஆளுநர் விரைந்து முடிவெடுக்க வலியுறுத்தி ஒரு இலட்சம் அஞ்சல் அட்டைகளை ஆளுநர் மாளிகைக்கு அனுப்ப திட்டமிடப்பட்டுள்ளதாக திருமாவளவன் தெரிவித்தார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

துணைவேந்தர் பதவி நியமனங்களில் லஞ்சம் புகுந்தது தொடர்பாக விசாரிக்க ஆணையம் அமைக்கப்பட வேண்டும்.

7 பேர் விடுதலை விவகாரத்தில் ஆளுநர் விரைந்து முடிவெடுக்க வலியுறுத்தி ஒரு இலட்சம் அஞ்சல் அட்டைகளை ஆளுநர் மாளிகைக்கு அனுப்ப திட்டமிட்டுள்ளதாக மேலும் தெரிவித்தார். (7)

# இந்தோனேசியாவில் இயற்

# பலி எண்ணிக்கை 200

(ஜகார்த்தா)

இந்தோனேசியா நாட்டில் ஏற்பட்ட நிலநடுக்கம் மற்றும் சுனாமியில் சிக்கி இதுவரை 2000 பேர் பலியானதோடு சுமார் 5000 பேர்வரை காணாமல் போயுள்ளதாக் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவில் கடந்த மாதம் 29 ஆம் திகதி சுலவேசி தீவில் நிலநடுக் கம் ஏற்பட்டதை தொடர்ந்து அங்குள்ள கடற்கரை நகரமான பலுவை சுனாமி தாக்கியது.

இதனால் அந்த நகரம் கிட்டத்தட்ட அழிவுநிலைக்கு தள்ளப்பட்டது. அங்கிருந்த





# பாகிஸ்தானில் ஊழல் அரசியல்வாதிகளை ஒழிப்பதற்கு புதிய சட்டம் இயற்றப்படும்

## பிரதமர் இம்ரான் கான் தெரிவிப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் ஊழல் அரசியல்வாதிகளை ஒழிக்க புதிய சட்டம் இயற்றப்படும் என்று பிரதமர் இம்ரான் கான் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் கடந்த ஜூலை மாதம் நடந்த பாராளுமன்ற தேர்தலில் பாகிஸ்தான் தெக்ரிக் இ இன்சாப் கட்சி வெற்றி பெற்று ஆட்சியை பிடித்தது. இம்ரான் கான் பிரதமராக பதவி ஏற்றார்.

இந்த நிலையில் பிரதமர் இம்ரான்கானை லாகூரில் சமூக ஆர்வலர்கள் நேற்று சந்தித்தனர். அதன் பின்னர்



அவர் ஊடகவியலாளர்களிடம் கூறியதாவது.

பாகிஸ்தான் கடுமையான பொருளாதார நெருக்கடியில் உள்ளது. இதற்கு முன்பு இருந்தவர்கள் பல ஆண்டு காலமாக நாட்டை கொள்ளையடித்து நாசமாக்கிவிட்டனர்.

அவர்கள் பொது மக்களின் வரிப்பணத்தை கொள்ளையடித்து சேர்த்த சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும்.

அதற்கான புதிய சட்டம் இயற்றப்படும் இந்த சட்ட வரைவு விரைவில் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும்.

அதில் ஊழல் அரசியல் வாதிகள் பற்றி தகவல் கொடுக்கும் சமூக நல ஆர்வலர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் அம்சங்களும் இடம் பெறும் என்றார்.

இந்த சட்டம் குறித்து வேறு விளக்கம் எதுவும் அவர் அளிக்கவில்லை. (7)

# போர்த்துக்கலில் காட்டுத் தீ



(சின்ட்ரா)

போர்த்துக்கல் நாட்டின் சின்ட்ரா பகுதியில் பரவி வரும் காட்டுத் தீயை கட்டுப்படுத்த சுமார் 700 தீயணைப்பு வீரர்கள் கடுமையாகப் போராடி வருகின்றனர். போர்த்துக்கல் நாட்டின் தலைநகர் லிஸ்பன் அருகில் உள்ள சின்ட்ரா மலைப் பகுதியில் கடந்த சனிக்கிழமை இரவு திடீரென தீப்பிடித்தது.

சின்ட்ரா-காஸ் காயிஸ் இயற்கை பூங்காவில் பிடித்த தீ, காற்றின் வேகம் காரணமாக அருகில் உள்ள பகுதிகளுக்கும் வேகமாக பரவியது.

இதுபற்றி வனத்துறை மற்றும் தீயணைப்புத்துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து வனத்துறை அதிகாரிகள் மற்றும் தீயணைப்பு படையினர் ஏராளமான தீயணைப்பு வாகனங்களுடன் சம்பவ இடத்திற்கு வந்து தீயை கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர்.

முதல் சில மணி நேரங்கள் மலைப்பகுதிக்கு செல்ல முடியாத அளவிற்கு நெருப்பின் தாக்கம் இருந்தது என அவர்கள் தெரிவித்தனர். (7)

# வெள்ளை மாளிகை ஜெ

## மாற்றியமைக்க ஜனாதிபதி

(வோஷிங்டன்)

அமெரிக்க இராணுவம் தொடர்பாக ஆலோசனை வழங்கும் வெள்ளைமாளிகை ஜெனரல்களை, ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மாற்றியமைக்கவுள்ளார்.

குறித்த பதவிகளுக்கு, இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரிகளின் பெயர்கள் கவனத்திற்கொள்ளப்பட்டுள்ளதாக வெள்ளை மாளிகை தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதிய தளபதிகள் தொடர்பான சிபாரிசுகளை மேற்கொள்பவர்களின், அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் ஜேம்ஸ் மட்டிஸ் முக்கியமானவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. குறித்த சிபாரிசுகளை அமெரிக்க செனட் சபை அங்கீகரித்த பின்னரே நியமனங்கள் உறுதிப்படுத்தப்படும்.

இதேவேளை எதிர்வரும் 2019ஆம் ஆண்டு ஆரம்பத்தில் ஓய்வுபெறவுள்ள அமெரிக்க வான்படையின் நான்கு நட்சத்திர அந்தஸ்து கொண்ட தளபதி போல் செல்வாவும் இப்பதவிக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. செல்வாவிற்கு பதிலாக, தென்கொரியாவிலுள்ள அமெரிக்கா



இராணுவத்திற்
வின்செட் புரூக்
கப்படுகிறது.

இதேவேளை
2019ஆம் ஆண்
மிக்கவும் ஜனாதி

அமெரிக்காவி
கும் இடையில் ஏ
இந்த மறுசீரமை
வுள்ளமை குறிப்

# பயங்கரவாதத்து

## அளிப்பதை தடுக்கும்

### ஈரான் பாராளுமன்றில் நி

(தெஹ்ரான்)

ஈரான் பாராளுமன்றத்தில் பயங்கரவாதத்துக்கு நிதி அளிப்பதை தடுக்கும் மசோதா நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டது.

சர்வதேச அளவில் பணமோசடி மற்றும் பயங்கரவாதிகளுக்கு நிதியுதவி செய்வதை கண்காணித்து வரும் சர்வதேச நிதி நடவடிக்கை செயற்குழு ஐக்கிய நாடுகளின் பயங்கரவாதிகளுக்கு நிதியளிப்பதை தடுக்கும் கூட்டமைப்பில் ஈரானும் இணைய வலியுறுத்தியது.

இதற்காக நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் 143 வாக்குகள் பயங்கரவாதத்துக்கு நிதி அளிப்பதை தடுப்பதற்காக அளிக்கப்பட்டன. இதையடுத்து, ஈரானுக்கு 3 மாதங்

கள் காலஅவகாச

இந்த விவகா
உரையாற்றிய ஈ
முகமது ஜவாத்
நிதி அளிப்பதை
இணைந்துவிட்ட
இருப்பினும், தற்
எங்கள் மீது பழி
வாக்கு கிடைத்து

இந்நிலையில்
வாதிகளுக்கு நிதி
நேற்று முன்தின

# ற்கையின் கோரம்

# 00 ஆக உயர்வு



வீடுகள், கட்டடங்கள், ஹோட்டல்கள், வணிக வளாகங்கள் என அனைத்தும் இடிந்து தரைமட்டமானது.

சுனாமி தாக்குதலில் பாதித்த பலு நகரில் நடைபெறும் மீட்புப் பணியில் இராணுவமும், பொலிஸாரும் ஈடுபட்டுள்ளனர். இடிபாடுகள் அகற்றப்பட்டு வருகின்றன. தோண்ட தோண்ட சடலங்கள் வந்து கொண்டே இருக்கின்றன.

மேலும் பலர் மாயமாகி போயுள்ளனர். அதே நேரத்தில் உள்ளே சிக்கி தவிப்பவர்களும் மீட்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)



# பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு- 2018 இரு விஞ்ஞானிகளுக்கு

(ஸ்டாக்ஹோம்)

பருவநிலை மாற்றத்துடன் தொடர்புடைய பொருளாதார ஆய்வுக்காக வில்லியம் நார்தாஸ், பால் ரோமர் ஆகிய இரு விஞ்ஞானிகளுக்கு பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

இயற்பியல், மருத்துவம், பொருளாதாரம், அமைதி, இலக்கியம் ஆகிய துறைகளில் மகத்தான சாதனை படைத்தவர்களுக்கு ஆண்டுதோறும் நோபல் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்படுகிறது.



அவ்வகையில், 2018ஆம் ஆண்டு பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு ஸ்டால்ஹோம் நகரில் நேற்று அறிவிக்கப்பட்டன. பருவநிலை மாற்றத்துடன் தொடர்புடைய பொருளாதார ஆய்வு மேற்கொண்ட வில்லியம் டி நார்தாஸ், பால் எம் ரோமர் ஆகிய இருவருக்கும் நோபல் பரிசு பகிர்ந்து அறிவிக்கப்பட்டுள்ளது. (7)

# ஈரானில் கனமழை; 10 பேர் உயிரிழப்பு

(தெஹ்ரான்)

ஈரானில் பெய்த கன மழை மற்றும் வெள்ளம் தொடர்பான சம்பவங்களில் 10 பேர் உயிரிழந்தனர்.

ஈரான் நாட்டில் கடந்த 5ஆம் திகதியிலிருந்து கன மழை பெய்து வருகிறது.

மஜந்தரன், கிலான், கோலஸ்டான் மாகாணங்களில் இந்த மழை, வெள்ளத்தால் பெருத்த சேதம் ஏற்பட்டுள்ளது. வீதிகள், பாலங்கள், வீடுகள் பலத்த சேதம் அடைந்தன.

வெள்ளத்தில் கார்கள் உள்ளிட்ட வாகனங்கள் அடித்துச்செல்லப்பட்டன. மின் விநியோகம் தடைப்பட்டுள்ளது. எரிவாயு விநியோகம் பாதித்துள்ளது. மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கிப்போயுள்ளது. இந்த மழை, வெள்ளம் தொடர்பான சம்பவங்களில் 10 பேர் உயிரிழந்தனர்.

கடந்த 20 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மழை பெய்து வருவதாக அங்கு இருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

மழை, வெள்ளம் பாதித்த பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப்பணிகளில் முழு வீச்சில் ஈடுபடுவதற்கு குழுக்களை ஈரான் மீட்பு மற்றும் நிவாரண அமைப்பு அனுப்பி வைத்துள்ளது. (7)



# ஜெனரல்களை
# தி ட்ரம்ப் முடிவு



...திற்கு பொறுப்பாகவுள்ள ஜெனரல் ...ருக் நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்...

...ளை, கூட்டுப்படைகளின் பிரதானியாக ...ஆண்டின் இறுதியில் புதிய ஒருவரை நிய... ...னாதிபதி ட்ரம்ப் தீர்மானித்துள்ளார்.

...காவிற்கும் ஏனைய வல்லரசு நாடுகளுக் ...ல் ஏற்பட்டுள்ள பதற்றத்தைத் தொடர்ந்து ...மைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட ...குறிப்பிடத்தக்கது. (7)

# ...துக்கு நிதி
# ...ம் மசோதா
## ...நிறைவேற்றம்

...வகாசம் வழங்கப்பட்டது.

...வகாரம் குறித்து வாக்கெடுப்பின்போது ...ய ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் ...ாத் ஷரிப், ஐ.நா. பயங்கரவாதிகளுக்கு ...தை தடுக்கும் கூட்டமைப்பில் ஈரான் ...விட்டால் மட்டும் எல்லாம் சரியாகி விடாது. ... தற்போது தாங்கள் இணையாவிட்டால் ... பழி சொல்ல அமெரிக்காவுக்கு அதிக ...த்துவிடும் என தெரிவித்தார்.

...யில், ஈரான் பாராளுமன்றத்தில் பயங்கர... நிதி அளிப்பதை தடுக்கும் சட்ட மசோதா ...தினம் நிறைவேற்றப்பட்டது. (7)

## சவுதி ஊடகவியலாளர் கொலை

# உரிய விசாரணை நடத்தப்பட வேண்டுமென ஐ.நா. வலியுறுத்து

(றியாத்)

சவுதியைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவர் துருக்கியில் கொலைசெய்யப்பட்டதாக நம்பப்படும் நிலையில், இவ்விடயம் தொடர்பாக உரிய விசாரணை நடத்தப்பட வேண்டுமென ஐ.நா. வலியுறுத்தியுள்ளது.

கருத்துச்சுதந்திரத்தை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல் தொடர்பான ஐ.நா.வின் சிறப்புத் தூதுவர் டேவிட் காயே இதனை வலியுறுத்தியுள்ளார்.

இஸ்தான்புல்லிலுள்ள சவுதி தூதரகத்திற்கு கடந்த செவ்வாய்க்கிழமை சென்ற சவுதி ஊடகவியலாளர் ஜமால் கஷோகி அதன் பின்னர் காணாமல் போனார்.



எனினும், அவரை துருக்கி கொலை செய்துள்ளதாக சவுதி குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்நிலையில், குறித்த ஊடகவியலாளர் காணாமல் ஆக்கப்பட்டமை மற்றும் கொலைசெய்யப்பட்டமை தொடர்பாக உரிய விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டுமென ஐ.நா. தூதுவர் வலியுறுத்தியுள்ளார்.

ஊடகவியலாளர்களுக்கு எதிரான அடக்குமுறைகளை சர்வதேசத்திற்கு எடுத்துக் காட்ட குறித்த விசாரணை உதவுமென்றும் அவர் தெரிவித்தார்.

எனினும், சவுதி ஊடகவியலாளர் உயிருடன் உள்ளாரென தான் நம்புவதாக குறிப்பிட்டுள்ள துருக்கி ஜனாதிபதி தையீப் எர்டோகன், துருக்கி மீதான குற்றச் சாட்டுக்களை நிராகரித்துள்ளார். (7)

# பிரேசில் ஜனாதிபதித் தேர்தல்
## முதற்சுற்றில் தீவிர வலதுசாரி வெற்றி

(பிரேசிலியா)

பிரேசில் ஜனாதிபதி தேர்தலில் தீவிர வலதுசாரி கட்சியின் வேட்பாளர் ஜயிர் பொல்சொனாரோ வெற்றிபெற்றுள்ளார்.

முதற்சுற்றில் பொல்சொனாரோ 46 வீத வாக்குகளையும் இடதுசாரி தொழிலாளர் கட்சி வேட்பாளர் பெர்னாண்டோ ஹதாத் 29 வீத வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

எனினும், வெற்றிபெறுவதற்கு 50 சதவீத வாக்குகள் அவசியம். இந்நிலையில், எதிர்வரும் 28ஆம் திகதி இரண்டாம் கட்ட வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

இரண்டாம் சுற்று வாக்கெடுப்பில் இரு வேட்பாளர்களுக்கும் இடையில் கடுமையான போட்டி நிலவுமென கருத்துக்கணிப்புக்கள் தெரிவிக்கின்றன.

எனினும் பிரேசிலின் அடுத்த ஜனாதிபதி யாரென நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவே தெரியும் என்றும், இலத்திரனியல் வாக்குப்பதிவில் கோளாறு இல்லையென்றால் தான் வெற்றிபெற சாத்தியமுண்டு என்றும் பொல்சொனாரோ குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், பிரேசில் ஜனாதிபதி தேர்தல் வாக்கெடுப்பில் எவ்வித பிரச்சினையும் இன்றி சுமுகமாக தேர்தல் இடம்பெற்றதாக அந்நாட்டு தேர்தல் அதிகாரிகள் தெரிவித்தனர். (7)


# நீதியைக் கோரி மிகக் கடுமையான நடவடிக்கையில் நான் ஈடுபடுவேன்

## தலதாமாளிகை முன் சந்தியா எக்னெலிகொட சத்தியாக்கிரகம்

(கொழும்பு)

எனது கணவர் தொடர்பான விடயத்தில் நீதி வழங்கப்படாவிட்டால் நான் நீதியைக் கோரி மிகக் கடுமையான நடவடிக்கைகளில் ஈடுபடுவேன் என காணாமல்போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட எச்சரித்துள்ளார்.

இதன் முதல்கட்டமாக எனது கணவர் தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்தக்கோரி நாளை பத்தாம் திகதி கண்டி தலதாமாளிகையின் முன்னாள் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அவர் தெரிவித்துள்ளார்.




சந்தியா எக்னெலிகொட முன்னெடுக்கவுள்ள இந்த போராட்டத்தில் காணாமல் போனவர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

கடந்த 28 ஆம் திகதியிலிருந்து நான் ஆரம்பித்துள்ள 60 நாள் போராட்டத்தின் ஒரு பகுதியே இதுவென குறிப்பிட்டுள்ள அவர் எனக்கு நீதி கிடைக்காவிட்டால் பாரதூரமான நடவடிக்கைகளில் இறங்குவேன் எனவும் எச்சரித்துள்ளார்

நான் எதிர்கொண்டுள்ள அவலத்தினை வெளிப்படுத்தி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு கடிதமொன்றை இந்த வாரம் அனுப்பவுள்ளேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனது துயரத்தினை வெளிப்படுத்தி ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதங்களுக்கு இதுவரை பதில் எதுவும் கிடைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# எத்தடைவரினும் உங்கள் பிள்ளைகளின் கல்விக்கு முக்கியத்துவம் கொடுங்கள்

## கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன்



உங்களுக்கு எத்தனை துன்பங்கள், துயரங்கள் பொருளாதார ரீதியான பின்னடைவுகள் ஏற்பட்டாலும் பிள்ளைகளின் கல்விக்கு தடையாக இருக்காமல் அவர்களின் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கி செயற்படுங்கள் என கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா கந்தப்பளை கோட்லோஜ் தோட்டத்திலும், நோனா தோட்டம் மேல் பிரிவிலும் அமைக்கப்பட்ட 40 வீடுகள் நேற்று முன்தினம் மக்களிடம் கையளிக்கப்பட்டன. இதனை மலையக புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு சமூக அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம், மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான இராதா கிருஷ்ணன் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய கல்வி இராஜாங்க அமைச்சர்,

நான் இலங்கை தொழிலாளர் காங்கிரசை விட்டு வெளியே வருகின்ற பொழுது என்னுடைய அரசியல் வாழ்க்கை முடிந்துவிட்டதாக பலரும்கூறினார்கள். ஆனால் நான் மக்களுடன் இருந்த காரணத்தால் அவர்கள் என்னை கைவிடவில்லை. நான் அதற்கு பின்பு தற்பொழுது கல்வி இராஜாங்க அமைச்சர் என்ற பதவிக்கு உயர்ந்திருக்கின்றேன்.

மத்திய மாகாண சபையின் ஆட்சிக் காலம் நிறைவிற்கு வருகின்றது. எங்களை கடந்த காலங்களில் மத்திய மாகாண சபையில் வேலை செய்ய விடாமல் சில முட்டுக்கட்டைகள் போடப்பட்டன. ஆனால் இனிமேல் நாங்கள் நேரடியாகச் சென்று வேலை செய்யக்கூடிய நிலைமை தற்பொழுது ஏற்பட்டுள்ளது. கடந்த காலங்களில் அவர்கள் வேலை செய்யவுமில்லை. எங்களை வேலை செய்ய விடவுமில்லை. இது எங்களுடைய கல்விக்கு ஒரு பெரும்பின்னடைவாகும்

நாங்கள் கல்வி அமைச்சில் இருந்து நிதி வழங்கி மத்திய மாகாணத்தில் அபிவிருத்தி செய்த பல பாடசாலைகளை எங்களுக்கு தெரியாமல் வேறு சிலர் திறப்பு விழா செய்கின்றார்கள். ஆனால் இனிவரும் காலங்களில் நாங்கள் இந்த பகுதியில் இருக்கின்ற பாடசாலைகளில் குறைபாடுகளை கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க இருக்கின்றோம்.

பிள்ளைகளை நீங்கள் நன்றாக படிக்க வைத்தால் மாத்திரமே அது உங்களுக்கு ஒரு நிரந்தர சொத்தாக அமையும். தயவு செய்து மாணவர்களை இடை நடுவில் பாடசாலையை விட்டு விலக்கி தொழிலுக்காக அனுப்பி விடாதீர்கள்.

இன்று தோட்டத்தில் பிறந்து வளர்ந்த எங்களுடைய பிள்ளைகள் வைத்தியர்களாக, பொறியியலாளர்களாக பல்வேறு துறைகளிலும் வளர்ச்சி அடைந்து வருகின்றார்கள். இது தான் எங்களுடைய முன்னேற்றம். இந்த முன்னேற்றத்தைத் தான் நான் எதிர்பார்க்கின்றேன். இதற்காக உங்களை அர்ப்பணித்து செயற்படுங்கள்.

நான் என்றுமே பிறந்து வளர்ந்த இடத்தை மறப்பவன் அல்ல. நான் எந்தளவு உயர்ந்த இடத்திற்கு சென்றாலும். இந்த இடத்தை மறக்க மாட்டேன். அதே போல எங்களுடைய தாய் நாடு. அதேபோல எங்களுடைய தாய் தோட்டம். இப்படி வாழ்ந்த வாழ்க்கை, பழகிய மக்கள் இது எதையுமே மறக்க முடியாது. அப்படி மறந்தவர்கள் யாரும் தங்களுடைய வாழ்வில் முன்னேற்றமடைய முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# கூட்டு எதிரணியின் ஆட்சி மாற்ற முயற்சி தோல்வி ஜனாதிபதி மைத்திரி மீது ஐ.தே.கவுக்கு நம்பிக்கை

## அமைச்சர் ஹரின் தெரிவிப்பு

ஒன்றிணைந்த எதிரணி, ஆட்சி மாற்றத்துக்காக மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியிலேயே முடிந்தனவெனத் தெரிவித்த அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது, ஐக்கிய தேசியக் கட்சிக்கு நம்பிக்கை உள்ளதெனவும் தெரிவித்தார்.

இடைக்கால அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பில், ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஒன்றிணைந்த எதிரணிக்கும் இடையில் நிகழும் பேச்சுவார்த்தைகள் குறித்து வினவியபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில், "ஒன்றிணைந்த எதிரணியினர், ஆட்சி மாற்றம் செய்யப்போவதாகப் பலமுறை கூறியிருந்தனர். ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருந்தனர். அவை அனைத்தும் தோல்வியிலேயே நிறைவடைந்தன" என்றும் தெரிவித்தார். தற்போது, இடைக்கால அரசாங்கமொன்றை அமைப்பது குறித்து மேற்கொள்ளப்படும் பேச்சுவார்த்தைகளும், அவ்வாறானதேயாகும் என்று குறிப்பிட்ட அவர், எவ்வாறாயினும், நாட்டின் வளங்களை விற்பனை செய்தவர்களுடன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூட்டணி அமைக்கமாட்டார் என்ற நம்பிக்கை உள்ளது எனவும் ஹரின் தெரிவித்தார்.

அத்துடன், இந்த பேச்சுவார்த்தைகளால், நாடாளுமன்றத்தில் எவ்விதக் குழப்ப நிலைமைகளும் ஏற்படாதெனத் தெரிவித்த அவர், தேசிய அரசாங்கத்தின் பயணத்துக்கும், இதனால் நெருக்கடி ஏற்படாதெனவும் தெரிவித்தார்.(இ-7)

# இன்று ஒரு தகவல்

## கரன்சிகள் காகிதங்களாகும் நேரம்

ரூபாயின் மதிப்பு 25 பைசா என்கிறார்கள். சில நேரங்களில் இது கூட அதிகம் என்றுபடுகிறது. ஆமாம் ரூபாய்க்கு அதே அளவுள்ள ஒரு வெள்ளைத்தாளுக்கு என்ன மதிப்போ அதே மதிப்புத்தான்.

நம்மிடம் உள்ள மற்றவர்களின் பணத்திற்கு மதிப்புக் கிடையாது. இதை வெறும் காகிதமாகக் கருதினால் தான் நம்மிடம் கொஞ்சமாவது நாணயம் மிஞ்சும். மற்றவர்களின் பணத்திற்கு ஆசைப்பட்டு அதைக் கரன்சியாக நினைத்தால் அந்தப் பணத்திற்கு மட்டுமல்ல நமக்கேகூட மதிப்பு இல்லாமல் போய்விடும்.

ஒரு மனிதன் திருமணம் ஆகும் வரை பெற்றோருக்கு மட்டும் கடமைப்பட்டவனாக இருக்கிறான். திருமணத்திற்குப் பிறகு அவனுக்கு ஒரு தொகை வருமானமாக வந்தால் உடனே அவனுக்கு மனைவியின் நினைப்பும் சேர்ந்து வருகிறது. அவள் அதைக் கேட்டாலே என்று ஞாபகம் வருகிறது. கேட்டதை வாங்கிப் போகிறான்.

பிள்ளைகள் பிறந்ததும் அவர்களுக்காக வாழ. ஆரம்பித்து விடுகிறார்கள் இத் தம்பதியினர்.

அந்தப் பிள்ளைகள் ஒன்றின் மீது பிரியப்பட்டு விட்டால் அதன் பிறகு கரன்சியின் மதிப்பு காலி! வாழ்வில் ஒரு கட்டத்திற்குப்பின் நாம் நமக்காக வாழ்வதில்லை. நம் தலைமுறைக்காக வாழ்கிறோம். அத்தகைய தருணத்தில் கரன்சிகள் காகிதங்களே! ஆமாம் இந்த நேரத்தில் கரன்சிகளுக்கு அதிக முக்கியத்துவம் தந்து விடக் கூடாது.

(அதற்காகப் பிள்ளைகளைக் கஷ்டம் தெரியாமல் வளர்த்து காசி அருமை தெரியாமல் உருவாக்கி அவர்களைக் குட்டிச் சுவராக்க வேண்டும் என்று சொல்லவில்லை).

நம் அன்பிற்குரியவர்களுக்கு ஓர் அவசரம்; அவர்களுக்கு ஒரு மோசமான அல்லது இக்கட்டான நிலைமை ஆகிய நேரங்களில் கரன்சிகளை வெறும் காகிதங்களாகவே பார்க்க வேண்டும். நமக்கு ஒரு கௌரவப்பிரச்சினை; சொன்ன சொல்லை காப்பற்ற வேண்டிய தேவை. இத்தருணத்திலும் கரன்சிகள் என்பவை வெறும் காகிதங்களே.

கரன்சிகளை அவசியமான போது மிகுந்த மதிப்புடைய பொருளாகவும் அதேநேரத்தில் மேற்கூறிய சில நேரங்களில் அவற்றை வெறும் காகிதங்களாகவும் பார்க்கக் கற்றுக் கொள்ளாதவர்கள் வாழும் கலையை முழுமையாக அறியாதவர்கள் என்று துணிந்து முத்திரை குத்தி விடலாம்.

**லேனா தமிழ்வான்**

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 4.10.2018 முதல் 28.10.2019 வரை

## சகாய ஸ்தானத்தில் குருபகவான்! தடைகள் அனைத்தும் இனி விலகும்!

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



மகத்தான வாழ்க்கை அமைய மனதில் உறுதி வேண்டுமென்று சொல்லும் கன்னி இராசி வாசகர்களே!

'பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது' என்பார்கள். அந்தப் பொன்னான கிரகமான புதனின் ஆதிக்கத்தைப் பெற்ற இராசியைப் பெற்றவர்கள் நீங்கள். சுறு சுறுப்புக்குச் சொந்தக்காரர்களாக இருப்பீர்கள். தன் திறமையை யாரும் புரிந்து கொள்ளவில்லையே என்ற கவலையும் உங்களுக்கு இருக்கும். மதிநுட்பம் மிக்கவர்களாக இருந்தாலும் மனக் குழப்பமும் உங்களுக்கு அடிக்கடி வந்து அலைமோதும். பிறருக்கு அறிவுரை கூறுவதில் உங்களுக்கு நிகர் யாருமில்லை. நீங்கள் மற்றவர்களுக்கு என்ன உதவி செய்தாலும் அவர்கள் நன்றி காட்ட மாட்டார்கள். அசுர குரு மற்றும் தேவ குருவின் பலத்தைப் பொறுத்தே உங்களது இல்லற வாழ்க்கை அமைகின்றது.

இதுவரை 2 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான் புரட்டாதி 18 முதல் வெற்றிகள் ஸ்தானமான 3 ஆம் இடத்தில் அடியெடுத்து வைக்கின்றார். 3 இல் குரு வந்தால் முன்னேற்றம் இருக்குமா? என்று நீங்கள் நினைக்கலாம். வேண்டிய நற்பலன்களை வியாழன் அவருடைய பார்வை பலத்தால் கொடுப்பார். திசாபுத்தி பலம் பெற்றிருந்தால் சுய ஜாதக அடிப்படையில் உங்களுக்கு நன்மைகள் கிடைக்கும்.

### விருச்சிக குருவின் சஞ்சாரம்!

4.10.2018 இல் விருச்சிக இராசியில் சஞ்சரிக்கும் குரு பகவான் 28.10.2019 வரை மூன்றாமிடத்தில் சஞ்சரித்து, நீங்கள் முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைக்க வழிகாட்டப் போகின்றார். இடையில் 13.3.2019 இல் தனுசு இராசிக்கு அதிசாரமாகச் செல்கின்றார். பிறகு 10.4.2019 இல் தனுசு இராசியிலேயே வக்கிரம் பெறுகின்றார்.

மீண்டும் 19.5.2019 இல் விருச்சிக இராசியில் சஞ்சரித்து வக்கிர கதியிலேயே இருக்கின்றார். 7.8.2019 இல் விருச்சிக குரு வக்கிர நிவர்த்தியாகின்றார். 28.10.2019 இல் தனுசு இராசிக்கு முறையாகச் செல்கின்றார்.

### குரு பார்வை தரும் பலன்கள்!

குருப்பெயர்ச்சியின் பொழுது 7, 9, 11 ஆகிய இடங்கள் அவர் பார்வையால் புனிதமடைகின்றது. எனவே நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வர வழிவகுக்கும். தீயசக்திகளை தூய சக்திகளாக மாற்றும் ஆற்றல் குருவின் பார்வைக்கு உண்டு. உங்கள் இராசிக்கு களத்திர ஸ்தானத்திலும் பிதுரார்ஜித ஸ்தானத்திலும் இலாப ஸ்தானத்திலும் பதியும் குருவின் பார்வையால் கல்யாண வாய்ப்பு முதல் கடல் தாண்டிச் செல்லும் யோகம் வரை படிப்படியாக நடைபெறப் போகின்றது.

குருவின் பார்வை சப்தம ஸ்தானத்தில் பதிவதால் கெட்டிமேளம் கொட்டும் வாய்ப்பு இல்லத்தில் உருவாகும். மகனுக்கோ மகளுக்கோ மணமாலை சூடும் வாய்ப்புக் கிட்டும். கணவன்-மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். பூப்புனித நீராட்டு விழா போன்ற புனிதச் சடங்குகளும் இல்லத்தில் நடைபெறலாம்.

களஸ்திர தோசத்தின் பிடியில் சிக்கியிருந்தவர்கள் இப்பொழுது அதிலிருந்து விடுபட்டு இனிய இல்லறத்தை ஏற்கச் செய்ய பரிகாரங்களும் வழிபாடுகளும் பலன்தரும் விதம் அமையும். 'ஏழினைக் குரு தான் பார்த்தால் இல்லறம் சிறப்பாய் வாய்க்கும்' என்பது நியதியாகும்.

'ஒன்பதைக் குரு தான் பார்த்தால் உன்னத வாழ்க்கை கிட்டும்' என்பதற்கேற்ப நல்ல பலன்கள் ஏராளமாக நடைபெறப்போகின்றது. வியாபாரம் விரிவடையும். வீடு கட்டுவது, வாகனம் வாங்குவது போன்றவற்றில் அதிக கவனம் செலுத்துவீர்கள். பூர்வீக சொத்துகளில் முறையான பங்கீடுகள் கிடைக்கும். இலாப ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால் பணப்புழக்கம் அதிகரிக்கும். இலாபங்கள் நூறு வரும், நல்ல வாய்ப்புகள் கோடி வரும். பல ஆண்டுகளாக வசூலாகாத பாக்கிகள் வந்து சேரும். கருத்து வேறுபாடு கொண்டிருந்த இளைய சகோதரம் இப்பொழுது இணக்க மாகி, எல்லா வழிகளிலும் உறு துணையாக இருப்பர். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வும் ஊதிய உயர்வும் தானாக வந்து சேரும்.

உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் சனியோடு கேது இணையும் நேரத்தில் கொஞ்சம் கூடுதல் கவனத்துடன் இருப்பது நல்லது. 10 ஆம் இடத்திற்கு இராகு செல்வதால் நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்ய இயலும். மேலதிகாரிகளின் ஆதரவோடு சலுகைகள் பலவற்றையும் பெறுவீர்கள். கடந்த சில வருடங்களாக உங்களுக்கு வரவேண்டிய முன்னேற்றத் தடை இப்பொழுது அகலும். வி.ஆர்.எஸ்ஸில் வெளிவந்து சொந்தத் தொழில் தொடங்கும் வாய்ப்புக் கூட ஒருசிலருக்கு உருவாகலாம். அதே நேரத்தில் பிள்ளைகளால் ஒரு சிலருக்கு பிரச்சினைகள் ஏற்படலாம். வெளியூரில் படிக்கும் பிள்ளைகளை அடிக்கடிப் போய்ப் பார்த்துக்கொள்வது நல்லது.

### குருவின் பாதசார பலன்கள்!

குருப்பெயர்ச்சியானவுடன் குரு பகவான் தன் சுயசாரத்தில் சஞ்சரிக்கின்றார். அப்பொழுது தொட்ட காரியங்கள் துளிர்விடும். துணையாக இருப்பவர்கள் தோள்கொடுத்து உதவுவர். வெற்றிக்குரிய செய்தி வீடு தேடி வந்து கொண்டே இருக்கும். உற்றார், உறவினர்கள் உங்கள் குடும்பத் தேவைகளைப் பூர்த்திசெய்ய முன்வருவர். உடன்பிறப்புகளும் கருத்து வேறுபாடுகளை மறந்து பணியாற்றுவர். வீடு, இடம் வாங்கும் யோகம் உண்டு. கட்டிய வீட்டைப் பழுது பார்க்க முடியவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கும் வெற்றிடத்தில் தோட்டம் போடலாமா? அல்லது கட்டடம் கட்டி கடைகளாக்கி வாடகைக்கு விடலாமா? என்று நினைத்தவர்களுக்கு இப்பொழுது நினைத்தபடி செயற்படும் நேரமிது.

21.10.2018 முதல் 19.12.2018 வரை குரு அனுச நட்சத்திரக் காலில் சஞ்சரிக்கின்றார். சனி சாரத்தில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது பொருளாதாரப் பற்றாக்குறை ஏற்படும். ஒருசிலர் கைமாற்று வாங்கும் சூழ்நிலை கூட உருவாகலாம். தொழிலுக்கு மூலதனம் போதுமானதாக இல்லையே என்று சுயதொழில் புரிபவர்கள் நினைப்பர். அதற்கு ஏற்ப புதிய கூட்டாளிகள் வந்திணைய வருவர். அதே நேரம் தொழில் பங்குதாரர்களின் ஜாதகத்தை உங்கள் ஜாதகத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து சேர்த்துக் கொள்வது நல்லது. புதிய உத்தியோகத்திற்கு விண்ணப்பித்திருந்தவர்களுக்கு வேலை கிடைக்கும்.

20.12.2018 முதல் 12.3.2019 வரை மற்றும் 18.5.2019 முதல் 27.10.2019 வரை கேட்டை நட்சத்திரக் காலில் குரு சஞ்சரிக்கின்றார். புதன் சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது புதிய பாதை உங்களுக்குப் புலப்படும். தொழில் வியாபாரத்திலிருந்த சரிவுநிலை அகலும். பூர்வீகச் சொத்துப் பிரச்சினைகள் சுமுகமாக முடியும். பணிபுரியும் இடத்தில் மாறுதல்கள் கேட்க வேண்டாம். முன்கோபத்தைக் குறைத்துக்கொண்டு செயற்படுவது நல்லது. நரம்பு,




எலும்பு சம்பந்தப்பட்ட கோளாறுகள் வந்து சேரும்.

13.3.2019 முதல் 17.5.2019 வரை மூல நட்சத்திரக் காலில் குரு பகவான் சஞ்சரிக்கின்றார். கேது சாரத்தில் குரு பகவான் சஞ்சரித்தாலும் தனுசு இராசிக்குள் அவர் பிரவேசிப்பதால் அவரது பார்வை 8, 10, 12 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே தொழில் புரிபவர்களுக்கு எந்த இடையூறும் வராது. பணியாளர்களால் வந்த தொல்லை அகன்று, அவர்கள் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பர். உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது. எந்த நாளையும் இனிய நாளாக மாற்றுகிற ஆற்றல் வழிபாட்டிற்கு உண்டு என்பதால் அப்போதைக்கப்போது அருளாளர்களின் ஆலோசனைப்படி வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது.

### செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!

உங்கள் இராசிநாதன் புதன் என்பதால் திருமால், லட்சுமி வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. யோகபலம் பெற்ற நாளில் தஞ்சை பெரிய கோவில் சென்று ஏழு தெய்வங்களுக்கு அர்ச்சனை செய்வதோடு நந்தி மற்றும் வராஹி வழிபாட்டை முறையாக மேற்கொண்டால் தடைக்கற்கள் எல்லாம் படிக்கற்களாக மாறும்.

### குருவின் வக்கிர காலம்!

இந்தக் குருப்பெயர்ச்சிக் காலத்தில் விருச்சிக இராசிக்குள் சஞ்சரிக்கும் போதும், தனுசு இராசிக்குள் சஞ்சரிக்கும் போதும் வக்கிரம் பெறுகின்றார். இதுபோன்ற வக்கிர காலத்தில் விரயங்கள் கூடுதலாக இருக்கும். வீடு மாற்றங்கள், இட மாற்றங்கள் தானாக வந்து சேரும். அடிப்படை வசதிகளைப் பெருக்கிக்கொள்ள அதிக செலவுகள் செய்யும் சூழ்நிலை உருவாகும். ஒரு தொகை செலவழிந்த பின்னரே அடுத்த தொகை கைக்கு வந்து சேரும். குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டு மனக்கலக்கம் அதிகரிக்கும். பத்திரப்பதிவில் தடைகளும் தாமதங்களும் ஏற்படலாம். வாங்கிய சொத்தில் வில்லங்கம் இருக்கின்றதே என்று சொல்லி மீண்டும் அதை விற்க முன்வரலாம். எச்சரிக்கையோடு செயற்பட்டால் இனிய காலமாக இக்காலம் அமையும்.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

கன்னி இராசியில் பிறந்த பெண்களுக்கு இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். இனிய வாழ்க்கை மலரும். கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும். இருப்பினும் குடும்ப ஸ்தானத்தில் சனி இருப்பதால் திடீர் திடீரெனப் பிரச்சினைகள் தலைதூக்கலாம். அப்போதைக்கப்போது ஆலய வ்ழிபாடுகளை திசாபுத்திக்கேற்ப தேர்ந்தெடுத்துச் செய்வதோடு ஆன்மிகப் பெரியவர்களின் ஆலோசனைகளையும் கேட்டு நடப்பது நல்லது. தாய்வழி ஆதரவு ஓரளவே கிடைக்கும். சகோதர விரோதங்கள் வளரும். வாங்கிய நகைகளை அடகு வைக்கும் வாய்ப்பும் பிறகு மீட்கும் வாய்ப்பும் மாறி, மாறி வந்து கொண்டே இருக்கும். பிள்ளைகளால் தொல்லைகள் ஏற்படாமலிருக்க உங்கள் கண்காணிப்பிலேயே வைத்துக் கொள்வது நல்லது. ஆரோக்கியத் தொல்லையில் எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட பாதிப்புகள் ஏற்படலாம். நோய்களை குணமாக்க மாற்று வைத்தியம் வழிவகுத்துக் கொடுக்கும். வாகனங்களில் செல்லும் பொழுது கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உழைப்பிற்கேற்ற பலன் கிடைப்பது அரிது. பௌர்ணமி கிரிவல வழிபாடும் ஆஞ்சநேயர் வழிபாடும் நாக சாந்திப் பரிகாரமும் நன்மைகளை வழங்கும்.

(தொடரும்)



யாழ்.குடத்தனை வடக்கு அ.மி.த.க.பாடசாலையின் இந்த ஆண்டுக்கான ஆசிரியர் தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் பாடசாலையின் பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது. (படங்கள்:-பொற்பதி செய்தியாளர்)

# தமிழ் மக்களின் விடயத்தில் முன்னேற்றம்; நல்லாட்சியை நாம் பலப்படுத்த வேண்டும்

## கூட்டமைப்பு எம்.பி.கோடீஸ்வரன் கூறுகிறார்

(அம்பாறை)

தற்போது பதவியிலிருக்கும் அரசாங்கத்தின் காலத்தில், தமிழ் மக்களின் விடயத்தில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன எனக் குறிப்பிட்டுள்ள, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன், தற்போதைய ஆட்சியைப் பலப்படுத்த வேண்டியது அனைவரது பொறுப்பாகும் எனவும் தெரிவித்தார்.

உலக குடியிருப்பு வாரத்தை முன்னிட்டு, அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேச செயலகத்துக் குட்பட்ட தாண்டியடி திருப்பதி கிராமத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள. 25 வீடுகளுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் பிரதம விருந்தினராக நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

"நல்லாட்சியிலே, 75 சதவீதமான தமிழ் மக்களின் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. கடந்த கால ஆட்சியிலே இச் செயற்பாடு மந்த கதியில் இடம் பெற்றிருந்த போதிலும் இந்த ஆட்சியில், பெரும்பாலான காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

இதனை நான் பாராட்டுகின்றேன்" எனத் தெரிவித்தார்.

கடந்த 3ஆம் திகதி, கனகர் கிராம மக்களின் காணி விடயம் தொடர்பாக, ஜனாதிபதியுடன் கலந்துரையாடியதன் பயனாக, அவற்றை உடனடியாக மக்களுக்கு வழங்குமாறு அவர், மாவட்ட செயலாளரைப் பணித்துள்ளார் என்று குறிப்பிட்ட கோடீஸ்வரன் எம்.பி. இவ்வாறான செயற்பாடுகளையும் தான் பாராட்டுவதாகவும் தெரிவித்தார். (இ-7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

## பிறப்பு எண் 7 விதி எண் 5


கேது புதன் ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் தர்மத்திற்குக் கட்டுப்பட்டு நடப்பார்கள். உயர்ந்த கற்பனை வளமிக்கவர்கள். எந்நேரமும் முன்னேற்றத்திற்கான முயற்சியிலேயே ஈடுபட்டிருப்பார்கள். தேவையில்லாத விடயங்களில் ஒருபோதும் தலையிட மாட்டார்கள். ஓரளவு உயரமானவர்கள். ஏறிய நெற்றியும் கூர்மையான காந்தப் பார்வையும் இருக்கும். எந்நேரமும் சுறுசுறுப்பாகவே இயங்கிங் கொண்டிருப்பார்கள். இயற்கையையும் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களையும் சுற்றிப்பார்ப்பதில் ஆர்வம் அதிகம். எக்காரியத்தையும் விரைவிலேயே முடிக்கக் கூடியவர்கள். மின்னல் வேகத்தில் செயற்படுவார்கள். குழந்தைகளைப் போலவே நடந்து கொள்வார்கள். புதுமையை விரும்பக்கூடியவர்கள்.

லீலாவிநோதம் இருக்கும். தன்னம்பிக்கை கொண்டவர்கள். தொழில் செய்து உழைத்து வாழ்க்கையில் உயர்ந்த நிலைக்கு வருவார்கள். கண்ணியமானவர்கள். தனது சொந்த முன்னேற்றத்திற்காக எப்போதும் திட்டம் தீட்டிக்கொண்டேயிருப்பார்கள். தனது வருமானத்தைப் பெருக்குவதற்குப் பல வழிகளில் முயற்சிகளை மேற்கொள்வார்கள். பிறர் செய்யும் காரியம் வேகமாக நடக்காவிட்டால் சோம்பேறிகள் என்று திட்டுவார்கள். ஆன்மீக நெறிகளை அறிந்தவர்கள். குதூகலமாக இருக்கக்கூடியவர்கள். இன வேறுபாடு காட்டாதவர்கள். ஞான மார்க்கம் அறிந்தவர்கள். தெய்வ நம்பிக்கை அதிகமுள்ள இவர்களின் கனவுக்காட்சிகள் பலிதமாகும். தெய்வீகமான கற்பனைக்கு எட்டாத காட்சிகளை கனவில் காண்பார்கள்.

மனோவசியம் பிறவியிலேயே இருக்கும். எம்மதத்தையும் மதிப்பவர்கள். எளியவர்கள் மீது இரக்க குணமுடையவர்கள். மந்திர சித்தியும் மனோவசியமும் கைவல்யமாகும். சந்நியாசம் பெறாத வாழ்வே இவர்களைக் கவரும். குடும்ப வாழ்க்கையில் இருந்து கொண்டே ஞானத்தைப் பெறுவார்கள். வாழ்க்கை வாழ்வதற்கே என்ற கொள்கையுடையவர்கள். மனம் எப்பொழுதும் நிலைகொள்ளாமல் அலைபாய்ந்து கொண்டேயிருக்கும். சில நேரங்களில் சில விடயத்திற்காக மனதில் பெரிய அளவில் கற்பனை செய்து கொண்டிருப்பார்கள். மனதிற்குக் கட்டுப்பட்டு வாழ்வார்கள்.

தனது மனதிற்குப் பிடிக்காத காரியத்தில் பின்வாங்கி விடுவார்கள். அது எத்தனை பெரிய பலன் கிடைப்பதாக இருந்தாலும் மறுத்து விடுவார்கள். உடல், பொருள், ஆவி அனைத்தையும் இலட்சியத்தின் மீது செலுத்தி வெற்றி பெறுவார்கள். உயர்ந்த இலட்சியத்துடன் வாழ்வார்கள். சந்தர்ப்பமும் சூழ்நிலையும் சரியாக அமைந்து விட்டால் பிறரால் செய்ய முடியாத செயற்கரிய செயல்கள் செய்து வெற்றியான வாழ்க்கை வாழ்வார்கள். மகான் என்று பெயரெடுப்பார்கள். எப்போதும் சுறுசுறுப்புடன் ஏதாவது வேலையை இழுத்துப்போட்டு செய்து கொண்டேயிருப்பார்கள். எவ்வளவு பெரிய காரியத்தையும் வெகு சுலபமாக செய்து வெற்றி பெறக் கூடியவர்கள். சமுதாயம் இவர்களை வெகுவாகப் பாராட்டும். இவர்களின் துணிச்சல் மிக்க நடவடிக்கை இவர்களுக்கு வெற்றியைக் கொடுக்கும். மக்கள் மத்தியில் இவர்களுக்கு நல்ல செல்வாக்கு இருக்கும். பல தொழில் செய்து பணம் சம்பாதிக்கும் யோகமுடையவர்கள். வயது ஏற ஏற இவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்து கொண்டு தான் இருக்கும்.

எந்தவொரு காரியத்தைச் செய்தாலும் தன்னுடைய நேரடிப் பார்வையில்தான் செய்ய வேண்டும் என்று கூறுவார்கள். இவர்களின் தொழில் வெற்றி பெற இதுவே மூல காரணம் ஆகும். இவர்கள் பலவிதமான நல்ல குணங்களைப் பெற்றிருப்பார்கள். அழகின் மீது மனதைப் பறிகொடுப்பார்கள். திறமைசாலிகள். மற்றவர்களைத் தன் பேச்சால் கவர்ந்திழுக்கும் ஆற்றலுடையவர்கள். எளிமையைக் கடைப்பிடிப்பார்கள். தெய்வ பக்தி நிரம்பியவர்கள். சட்டம், அரசியல், சாஸ்திர முறைகளை நன்கு அறிந்து வைத்திருப்பார்கள். எந்நேரமும் சுறுசுறுப்புடன் செயற்படுவார்கள்.




தர்மவான்கள். தன்னிச்சையாகச் செயற்பட்டுப் பெரிய மக்கள் இயக்கத்திற்குத் தலைமை தாங்கி நடத்தக்கூடியவர்கள். ஆட்சி செய்யும் திறனுடையவர்கள். சிலநேரங்களில் முன்கோபம் காரணமாகச் செய்வதறியாது செய்துவிட்டுப் பின்னர் வருந்துவார்கள். புனித பயணங்களை மேற்கொள்வார்கள். இவர்களுக்கு எவ்வளவு முன்னேறினாலும் மனத்திருப்தி இருக்காது. மன அமைதியிருக்காது. எப்பொழுதும் மனம் வாய்மையையே நாடும். பொது அறிவு நிரம்பப் பெற்றவர்கள். புதுமையை விரும்புவார்கள். தைரியசாலிகள் போலத் தோன்றினாலும் உள்ளூரப் பயப்படுவார்கள். கலைகளில் இரசனை மிக்கவர்கள். எல்லாவற்றிற்கும் அழகு பார்ப்பார்கள்.

குருவருள் நிறைந்திருக்கும். பேச்சாலும் எழுத்தாலும் முன்னேறக் கூடியவர்கள். சோதனைகள் அனைத்தையும் சாதனைகளாக மாற்ற முயல்வார்கள். அயராத உழைப்பின் மூலம் அதிர்ஷ்டம் பெறக் கூடியவர்கள். நற்புகழ், கீர்த்தி, நற்பெயர் பெறுவார்கள். தனக்கு மிஞ்சிய ஏதோவொரு சக்தியிருப்பதாக எண்ணி அதைப்பற்றியே ஆராய்வார்கள். தன்னை உயர்த்தத் தகுதியில்லாத வர்கள், மற்றவர்களை உயரத் தகுதியில்லாதவர்கள் என்று பேசுவார்கள். இவர்கள் மனம் போலிச் செயல்களை வெறுக்கும். தான் செய்யும் தவறுகளைத் தனிமையில் நினைத்து வருந்துவார்கள். இவர்களின் முன்கோபத்தைக் கண்டு பலர் அஞ்சி நடுங்குவார்கள். எந்தவொரு புதுமையான பொருளைப் பார்த்தாலும் உடனே ஆராயத் தொடங்கி விடுவார்கள்.

தான் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் ஆண்டவன் தான் காரணம் என்று கூறுவார்கள். குறுக்குக் கேள்விகள் கேட்பதிலும் வேதாந்தம் பேசுவதிலும் ஆர்வமிருக்கும். பிறருக்கு உதவுவதால் எந்தச் சிக்கலிலும் மாட்டிக் கொள்ளக்கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருப்பார்கள். எதிலும் தனித்து நின்று வெற்றி பெறும் ஆற்றல் உடையவர்கள். எதிர்க்கட்சி தொடங்கி அதன் பலத்தைக் கூட்டி வலுமிக்க ஆளுங்கட்சியாக மாற்றும் திறமை மிக்கவர்கள். மக்கள் மட்டுமே தன் பக்கம் என்பதில் தீவிர நம்பிக்கை கொண்டவர்கள். அதிர்ஷ்டக் குறிப்புகளை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

**அதிர்ஷ்ட திகதிகள்**

1,10,19,28,6,15,24,5,14,23, 2,11,20,29.

**துரதிர்ஷ்ட திகதிகள்**

8,17,26,7,16,25.

**அதிர்ஷ்ட நிறங்கள்**

வெளிர் நீலம், மஞ்சள், பச்சை, பொன்னிறம், சாம்பல் நிறம், சிமெண்ட் நிறம்.

**துரதிர்ஷ்ட நிறங்கள்**

கறுப்பு, சிவப்பு, இருண்ட நிறங்கள்.

**அதிர்ஷ்ட இரத்தினங்கள்**

வைரம், சிர்க்கான், முத்து, வைடூரியம், ஓபல், ஜேட், டைகர்ஸ்ஐ.

(தொடரும்....)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

64




“சங்கிலி ஆட்சிப்பொறுப்பை ஏற்றதிலிருந்து போர்த்துக்கீசரின் தலையீடுகளினால் வரும் பாதிப்புகளை எதிர்கொள்ள வேண்டியவனாகக் காணப்படுகின்றான். போர்த்துக்கீசரின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்குக் கருவியாகக் கைக்கொள்ளப்பட்ட கத்தோலிக்க மதத்தை சங்கிலி மன்னன் முற்று முழுதாக வெறுத்தான். கடல் வாணிபத்தின் மூலம் அதிகளவு வருமானத்தைப் பெற்ற யாழ்ப்பாண இராச்சியம், கடற்பலம் கொண்ட போர்த்துக்கீசரின் வருகையினால் பாரிய விளைவுகளைச் சகல துறைகளிலும் சந்திக்க நேரிடும் என்பதனையும் சங்கிலி மன்னன் நன் றாக அறிந்திருந்தான்”

இதனால் இலங்கையின் வட பாகம் மிக முக்கியமாக யுத்த தந்திரத்துக்குரியதும் வர்த்தக நடவடிக்கைக்கு உரியதுமான கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பகுதியாக விளங்கியது. தோமஸ் பீரிஸ் (Thome pires) என்ற போர்த்துக்கீச நோக்கர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

“மலபார் கரைகளிலிருந்து தென்கிழக்காசியாவுக்கோ, வங்காளத்துக்கோ புறப்பட்ட கப்பல்கள் (இலங்கை) தீவைச் சுற்றிச் செல்வதையே விரும்பிய போது, கோரமண்டலக் கரைகளோடு வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த சிறிய மலபார் கலங்கள், இலங்கைக்கும் (இந்திய) பெருநிலத்திற்கும் இடையே உள்ள தூரம் குறைவான (கடற்) பாதையையே விரும்பின.”அத்துடன் குவைறோஸ் (Queiroz) என்பவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

“மன்னாரிலிருந்து இராமேஸ்வரம் வரையிலான பாக்கு நீரிணையில் காணப்பட்ட தொடர்ச்சியான தீவுகளும், ஆழமற்ற பகுதிகளும்; மன்னார் வளைகுடாவிலிருந்து கோர மண்டலக் கரைக்கான கடற் பயணத்துக்குத் தடையாய் அமைந்ததால் இரண்டு கால்வாய்களினூடாகவே இப் பயணம் மேற்கொள்ளப்பட்டது. இவற்றில் ஒன்றான இராமேஸ்வரத்துக்கு அண்மித்ததான கால்வாய், இரண்டு பாகை (Fathoms) ஆழமே கொண்டிருந்தமையால், ஏனையவற்றை விடப் பெரியதான துடுப்புச் செலுத்திக் கப்பல்கள், பாதுகாப்பாகச் செல்வதற்குப் பொதிகளை இறக்க வேண்டியிருந்தன. ஆயினும் மன்னாருக்கு அருகிலிருந்த இரண்டாவது கால்வாய், கலங்கள் பயணிப்பதற்கு உகந்த ஆழம் கொண்டதாக இருந்தது. ஆகவே, பெரும்பான்மையான கப்பல்கள் மன்னாருக்கு அண்மித்ததான கால்வாயையே தமது பயணத்துக்கு தெரிவு செய்திருத்தல் வேண்டும்.

இதன் காரணமாக, இப் பிராந்தியத்தின் கடற்பயணம் தொடர்பாக, மன்னாரில் மேலாண்மை பெற்றிருந்த யாழ்ப்பாண ஆட்சியாள ரே கேந்திர தானத்தை வகித்தனர்.” எனவே போர்த்துக்கீச ஆட்சியாளருக்கு, மன்னார் துறைமுகத்தின் முக்கியத்துவம் மிகவும் நன்றாகத் தெரிந்திருந்தது.

இலங்கையின் தெற்குப் பிராந்தியத்தில் காணப்பட்டதுபோல், ஐரோப்பியர்களுக்கு மிக விருப்பமான கறுவா போன்ற வாசனைத் திரவியங்கள் இலங்கையின் வட பகுதியில் இல்லாத போதும், மேற்படி மன்னாரின் கேந்திர முக்கியத்துவம் அவர்களின் இராணுவ வர்த்தக நடவடிக்கைகளுக்கு மிக முக்கிய மையப்பகுதியாகக் காணப்பட்டது.

அத்தோடு, மன்னார்க் குடாவிலுள்ள விலைமதிப்பற்ற உயர்ரக முத்துக்களால் போர்த்துக்கீசர் வெகுவாகக் கவரப்பட்டனர். உலகிலேயே பிரதானமாக முத்து உற்பத்தி ஆகும் இடங்களாக

## போர்த்துக்கீசர் ஆக்கிரமிப்பும் தமிழர் பிரதேசங்களின் அழிவும் (கி.பி. 1505-கி.பி. 1658)

இலங்கையின் மன்னார்க் குடாவும், சீனாவிலுள்ள ஹைனன் (Hainan) தீவுமே இடம் பெறுகின்றன. எனவே இயற்கையாகவே, போர்த்துக்கீசரை மன்னார் குடாவிலுள்ள, முத்தும் சங்கும் விளையும் இடமாகிய காரைதீவு ஈர்த்திருக்கும்.

அத்துடன் இந்திய மேற்குக் கரையில் முத்து வர்த்தகம் நடைபெறும் இடங்களாகிய பழையகாயல், கீழக்கரை ஆகிய இரு துறைமுகங்களும் போர்த்துக்கீசரின் எதிரிகளான முஸ்லிம் சிற்றரசர்கள் வசம் இருந்தன. அதனால், போர்த்துக்கீசருக்கு அங்கு வர்த்தக வாய்ப்பு அரிதாகவே காணப்பட்டது.

அத்தோடு இலங்கையின் சிலாபத்திலுள்ள முத்து வர்த்தகம் கோட்டை மன்னனின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. ஆனால், அங்கும் போர்த்துக்கீசருக்கு வாய்ப்புகள் இருக்கவில்லை. ஆனால் மன்னாரில் முத்து உற்பத்தி செய்யப்பட்டது போல் சிலாபத்தில் இருந்திருக்கவில்லை. போர்த்துக்கீசர் ஆரம்பத்திலிருந்தே மன்னார் முத்து உற்பத்தியிலும், அதனால் வரும் அதிக வருமானத்திலும் மிக்க ஆர்வமாக இருந்திருக்கின்றார்கள்.

உதாரணமாக அந்தோனியோ த மிரண்டா த அசவெடோ (Antonio de Mirsnda de Azevedo) கார்த்திகை 1519 ஆம் ஆண்டில் போர்த்துக்கீச ஆட்சியாளருக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

“இந்தத் தீவில் முத்து உற்பத்தியிடம் ஒன்று உண்டு. தங்களுடைய அனுமதியின்றி இங்கே முத்துக் குளிக்கக் கூடாதெனத் தடைசெய்ததால், மாட்சியம் தாங்கிய உங்களால் பாரிய இலாபத்தைப் பெறமுடியும்.”

மேற்படி கூற்று போர்த்துக்கீசருக்கு மன்னார் வளைகுடாவில் முத்துக்களின் மேல் உள்ள அவாவினைத் துல்லியமாக எடுத்துக்காட்டுகின்றது. இருந்த போதிலும், போர்த்துக்கீசர் முதல் நான்கு தசாப்தங்களில் இலங்கையின் வடபிரதேசத்திலோ அல்லது யாழ்ப்பாண இராச்சியத்திலோ தமது தலையீடுகளை ஏற்படுத்தவில்லையென்று கூறலாம்.

1540களில் போர்த்துக்கீசர் இலங்கையின் வடபிரதேசத்தில் தமது பார்வையைத் திருப்புகின்ற ஒரு நிலைமை ஏற்பட்டது.

இவ்வாறு ஒரு பின்னணியை வைத்துக்கொண்டு, மேற்படி காலப் பகுதியில் யாழ்ப்பாண இராச்சியம், வன்னி அரசுகள், யாழ்ப்பாண இராச்சியப் பிரதேசம் என்பவற்றில் போர்த்துக்கீசரின் வல்லாதிக்கம் எவ்வாறு நிகழ்ந்தது என்பது பற்றிய அரசியல் நிலைமை குறித்து ஆராய்வது முக்கியமாகின்றது.

பரராசசேகரனுக்குப் பின் யாழ்ப்பாண இராச்சிய மன்னனாக முதலாம் சங்கிலியன் ஆட்சி பீடம் ஏறுகின்றான். சங்கிலிய மன்னன் 1519ஆம் ஆண்டு தொடங்கி 1561 ஆம் ஆண்டுவரை சுமார் 40 ஆண்டுகள் தொடர்ச்சியாக யாழ்ப்பாண இராச்சிய மன்னனாக ஆட்சி செய்துள்ளான். இவன் யாழ்ப்பாண மன்னனாகப் பதவியேற்றபோது, செகராசசேகரன் எனும் சிம்மாசனப் பெயரையும் தனக்குச் சூட்டிக் கொண்டான்.

மிகவும் தைரியமுள்ள, கடும்போக்குள்ள மன்னன் என வரலாற்று ஆசிரியர்கள் இவனை வர்ணித்துள்ளனர். அத்தோடு அந்நியர்களான போர்த்துக்கீசர் தனது இராச்சியத்துக்குள் காலடி எடுத்து வைப்பதை விரும்பாதவனாகவும், சைவசமயத்தின்மேல் இறுக்கமான நம்பிக்கை கொண்டவனாகவும், காணப்பட்டான் என்பதனை அவனுடைய செயற்பாடுகள் காட்டி நிற்கின்றன.

அவனுடைய செயற்பாடுகளிலிருந்து, அவன் ஆளுமைமிக்க, நாட்டுப்பற்றுக் கொண்ட அரசன் என்று கொள்ளமுடிகின்றது. சங்கிலி ஆரம்பத்திலிருந்தே போர்த்துக்கீசரின் வருகையையும், அவர்கள் நடவடிக்கைகளையும், மதப்பரப்பலையும் எதிர்த்தவனாகவும், போர்த்துக்கீசருடன் உறவு கொண்டவர்களைத் தண்டிப்பவனாகவும் காணப்பட்டான்.

இதன் விளைவாகப் போர்த்துகீச நூல்கள் சங்கிலியைப் பற்றிக் கடுமையாக விமர்சித்து எழுதுகின்ற ஒரு நிலையும் காணப்பட்டது. போர்த்துக்கீசரான அந்நியர் எவ்வளவு தூரம் சங்கிலி மன்னனைத் தூற்றி எழுதினார்களோ அந்த அளவுக்கு சங்கிலி மன்னன் நாட்டுப்பற்று உள்ளவனாகவும், அந்நியர் ஆதிக்கத்தை வெறுப்பவனாகவும் இருந்திருக்கின்றான் என்பதனையே இவை காட்டுவதாகக் கருத முடியும்.

சங்கிலி ஆட்சிப்பொறுப்பை ஏற்றதிலிருந்து போர்த்துக்கீசரின் தலையீடுகளினால் வரும் பாதிப்புகளை எதிர்கொள்ள வேண்டியவனாகக் காணப்படுகின்றான். போர்த்துக்கீசரின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்குக் கருவியாகக் கைக்கொள்ளப்பட்ட கத்தோலிக்க மதத்தை சங்கிலி மன்னன் முற்று முழுதாக வெறுத்தான். கடல் வாணிபத்தின் மூலம் அதிகளவு வருமானத்தைப் பெற்ற யாழ்ப்பாண இராச்சியம், கடற்பலம் கொண்ட போர்த்துக்கீசரின் வருகையினால் பாரிய விளைவுகளைச் சகல துறைகளிலும் சந்திக்க நேரிடும் என்பதனையும் சங்கிலி மன்னன் நன்றாக அறிந்திருந்தான்.

(தொடரும்)

# பருவ நிலையில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றனவா

# காற்றாலைகள்



மரபுசாரா ஆற்றல் மூலங்கள் தான் புவிவெப்பமயமாதல், பருவ நிலை மாற்றம் போன்றவற்றுக்குத் தீர்வு என்கின்றனர் சூழலியலாளர்கள். ஆனால், அதையும் மறுக்கும் விதமாகவும் வியப்பூட்டும் வகையிலும் இருக்கிறது புதிய ஆய்வு ஒன்று.

உலகம் தற்பொழுது எதிர்கொள்ளும் மிக முக்கிய சுற்றுச்சூழல் பிரச்சினைகளில் ஒன்று பருவ நிலை மாற்றம். கடந்த 100 வருடங்களில் அதன் விளைவால் ஏற்படும் பாதிப்புகள் பல்வேறு இடங்களில் உணரப்பட்டு வருகின்றன. துருவப் பகுதிகளில் உள்ள பனிப்பாறைகள் உருகுகின்றன. அதன் காரணமாக கடல் நீர மட்டம் உயர்கிறது. மற்றொரு பக்கம் மழைப் பொழிவு குறைகிறது. சில இடங்களில் வழக்கத்துக்கு மாறாக அதிகமாக மழை பெய்கிறது. இதுபோல திடீர் இயற்கை சூழலியல் மாற்றங்களுக்கு விஞ்ஞானிகள் பருவநிலை மாற்றத்தைத் தான் காரணமாகக் கூறுகிறார்கள்.

பூமியின் சராசரி வெப்பநிலையானது தொடர்ந்து உயர்ந்து கொண்டே வருவதுதான் பருவ நிலை மாற்றங்களுக்கு மிக முக்கியமான காரணமாகக் கருதப்படுகிறது. ஆனால், பூமியின் வெப்ப நிலை திடீரென உயரவில்லை. அதற்குக் காரணமாக இருப்பது மனிதர்களின் செயற்பாடுகள்தாம். அதிலும் புதைபடிம எரிபொருள்கள் பயன்பாடு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. கடந்த நூற்றாண்டிலிருந்து புதைபடிம எரிபொருள்களின் பயன்பாடு உலகம் முழுவதும் அதிகரித்தது. ஒவ்வொரு நாளும் பல தொன் நிலக்கரி எரிக்கப்படுகிறது. அவற்றில் பெரும்பாலானவை மின்சாரம் தயாரிக்கவும் தொழிற்சாலைகளிலும் பயன்படுத்தப்படுகின்றன. பல மில்லியன் கணக்கான வாகனங்கள் உலகம் முழுவதிலும் இயக்கப்படுகின்றன. ஆனால், புதைபடிம எரிபொருள்களின் பயன்பாட்டை ஒரே நாளில் நிறுத்துவது சாத்தியமில்லை. எனவே, இதுபோன்ற சிக்கல்களுக்கு மாற்றாக இருப்பது புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்கள்தாம். இதன்மூலமாகக் கணிசமான அளவில் புதைபடிம எரிபொருள்கள் பயன்பாட்டைக் குறைக்க முடியும்.

இருக்கும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்களில் முதன்மையாகப் பரிந்துரைக்கப்படுவது காற்றுதான். உலகம் முழுவதிலும் பல்வேறு பயன்பாடுகளுக்காகக் காற்றாலைகள் பயன்படுத்தப்படுகின்றன. இதன் மூலமாகக் கணிசமான அளவில் மின்சாரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதன்மூலமாகச் சுற்றுச்சூழலுக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படுவதில்லை என்பது இதன் சிறப்பு. ஆனால், பருவநிலை மாற்றத்தில் காற்றாலைகளுக்கும் முக்கிய பங்குண்டு என அதிர்ச்சியளித்திருக்கிறது ஓர் ஆய்வறிக்கை.

காற்றாலைகளால் பருவநிலை மாற்றம் ஏற்படுவது உண்மையா?

காற்றாலைகளை ஓரிடத்தில் நிறுவிய பிறகு அது இயங்குவதற்குக் காற்று மட்டுமே போதுமானதாக இருக்கும். அதன் பிறகு நீண்ட காலத்துக்கு வேறு ஆற்றல் எதுவும் தேவையின்றி அது செயற்படும். ஆகவே இதன் மூலம் சுற்றுச்சூழலுக்கு எந்தவிதப் பாதிப்புகளும் ஏற்படாது. ஆனால் உண்மையில் அப்படி நடப்பதில்லை என்கிறார்கள் டேவிட் கீத் மற்றும் லீ மில்லர் என்ற இரு ஆராய்ச்சியாளர்கள். ஹார்வர்டு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இவர்கள் இந்தப் புதிய தகவலை ஆய்வுக்கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இவர்கள் நடத்திய ஆய்வின்படி காற்றாலைகளில் பொருத்தப்பட்டுள்ள இறக்கைகள் வெப்பம் மற்றும் ஈரப்பதத்தை மீண்டும் வளிமண்டலத்துக்குத் திருப்பி அனுப்புகின்றன. இந்த நிகழ்வு பருவ நிலை மாற்றத்தில் குறிப்பிட்ட பங்கு வகிக்கிறது என்கிறார்கள் இவர்கள். உதாரணத்திற்கு ஒட்டுமொத்த அமெரிக்காவுக்கும் காற்றாலை மூலமாகப் பெறப்படும் மின்சாரத்தை அளித்தால் காற்றாலையைச் சுற்றியுள்ள நிலப்பரப்பின் வெப்பநிலை 0.54 செல்சியஸ் அளவுக்கு அதிகரிக்கும். அதேநேரத்தில் அமெரிக்கக் கண்டத்தின் வெப்பநிலை 0.24 செல்சியஸ் அளவுக்கு அதிகரிக்கும் எனவும் இவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த ஆய்வுக்காக இதற்கு முன்னர் நடத்தப்பட்ட ஆய்வின் முடிவுகளும் சேர்த்தே ஆராயப்பட்டுள்ளன. "காற்றின் மூலமாக நிலக்கரியால் உண்டாகும் சுற்றுச்சூழல் பாதிப்புகளைக் குறைக்க முடியும்தான். ஆனால், அதேநேரத்தில் காற்றாலைகளால் ஏற்படும் பாதிப்புகளையும் கணக்கில் கொள்ளாமல் இருக்க முடியாது" என்கிறார் டேவிட் கீத். சோலர் பனல்களைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும்போது 10 மடங்கு குறைவான தாக்கமே இருக்கும் என்கிறார்கள். அதேசமயத்தில் இந்த முடிவுக்குச் சிலர் எதிர்ப்பும் தெரிவித்திருக்கிறார்கள். "ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முடிவுகள் யூகத்தின் மூலமாகவே எடுக்கப்பட்டது. ஆகவே இது நடைமுறையில் சாத்தியமில்லாத ஒன்று" என்கிறார் நியூயோர்க்கில் இருக்கும் அல்பேனி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஜெஃப் பிரெட்மென். புதைபடிம எரிபொருள்களுக்கு மாற்றாகக் காற்றாலைகள் உலகம் முழுவதிலும் பயன்படுத்தப்பட்டு வரும் வேளையில் இந்தப் புதிய அறிக்கை பல்வேறு விவாதங்களைக் கிளப்பியிருக்கிறது. நிலக்கரி, பெற்றோலியம் போன்ற மரபுசார் ஆற்றல்மூலங்களைத் தாண்டி உலகம் முழுமையும் மரபுசாரா ஆற்றலை நோக்கிச் சென்று கொண்டிருக்கும்போது, இதுபோன்ற ஆய்வு அறிக்கைகள் வருவது சாதாரணமானதே. இதன் உண்மைத் தன்மையை விஞ்ஞானிகள்தான் கண்டறிந்து உறுதிப்படுத்த வேண்டும்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1525

### பிரஜின்



நண்பனோடு நடந்தால் எந்தத் தொலைவும் தூரமில்லை


### தினேஸ்

Cut பண்ணிட்டு Call பண்ணுறவன் காதலன்



Call பண்ணா Cut பண்ணுறவன் கணவன்

### கார்த்திக்



உலகம் உள்ளவரை கூட்டுக்குடும்பம் என்பது இதுதான்

### கதிர்

நம்மை ஏளனமாகப் பார்ப்பவரை அடிக்கடி சந்திக்க வேண்டும்



அப்போதுதான் வாழ்ந்து காட்டவேண்டும் என்ற எண்ணம் அதிகமாகும்

### மதன்பாண்டியன்

சொத்து எக்கச்சக்கமா இருந்து என்ன பிரயோசனம் டாக்டர்? கிட்னில கல்லு இருக்கே



ஒண்ணும் கவலைப்படாதீங்க ரெண்டையும் கரைச்சிடுவோம்

### அரவிந்த்

சம்பளம் வாங்கிய அந்த நாளில் மட்டும்தான்



வயிறு நிறையச் சாப்பிடுவார்கள் பல உழைப்பாளர்கள்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பாடநூல்களில் தமிழர் வரலாறு இருட்டடிப்பு பிரச்சினைக்கு டக்ளஸ் எம்.பியின் முயற்சியால் தீர்வு

(யாழ்ப்பாணம்)

திட்டமிட்ட வகையில் தமிழ் வரலாற்று பாட நூல்களில் இருட்டடிப்பு செய்யப்பட்டு வந்த தமிழர் வரலாறு தொடர்பிலான பிரச்சினைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா துறைசார் தரப்பினரூடாக மேற்கொண்ட முயற்சியால் தீர்வு எட்டப்பட்டுள்ளதாக துறைசார் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.



எமது நாட்டின் தமிழ் மூலப் பாடநூல்களைப் பொறுத்தவரையில், குறிப்பாக வரலாற்றுப்பாட நூல்களில் தமிழர் வரலாறானது தொடர்ந்தும் திரிபுபடுத்தல்களுக்கும், மூடி மறைப்புக்களுக்கும், புறக்கணிப்புக்களுக்கும் உட்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன.

இந்த நிலைமைகள் அகற்றப்பட்டு நாட்டின் உண்மையான வரலாற்றை எமது மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டியது அவசியமாகும்

அந்தவகையில் தமிழர் வரலாற்றுப் பாடநூல்கள் சிங்கள வரலாற்று ஆசிரியர்களால் சிங்களமொழியில் எழுதப்பட்டவை என்றும், அந்நூல்களே தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் அப்படியே மொழி பெயர்க்கப்படுகின்றன என்றும், இதில், தமிழ் வரலாற்று ஆசிரியர்களின் பங்களிப்பு எழுத்துப் பிழைகளைச் சரி பார்ப்பது மட்டுமே என்றும் இந்தநிலை மாற்றப்படவேண்டும் என்றும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அத்துடன் தமிழ் வரலாற்று பாடநூல்களை தயாரிப்பதற்கென தகுதிவாய்ந்த தமிழ் வரலாற்று ஆசிரியர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட வேண்டும்.

அதே நேரம் எமது நாட்டில் இடம்பெற்றுள்ள உண்மையான வரலாற்று நிகழ்வுகளை மூடிமறைக்காமல், திரிபுபடுத்தாமல் பாடநூல்களில்உள்ளடக்கப்பட வேண்டும்.

தமிழர்களின் பண்டைய இருப்பை வெளிப்படுத்தக் கூடிய ஆட்சிகள், ஆட்சியாளர்கள் தொடர்பிலான விடயங்கள் எவையும் பாடசாலை மாணவர்களுக்கான வரலாற்றுபாடநூல்களில் தெளிவாக இடம்பெறாமையானது பாரிய குறைபாடாகும். அத்தகைய குறைபாடுகளுடன் கூடிய வரலாறே எமது மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுகிறது.

இவ்வாறான மூடி மறைப்புகள்-திரிபுபடுத்தல்கள் என்பன பாடசாலை பாடங்களின் ஊடாக எமது மாணவர்களுக்கு புகுத்தப்படுகின்ற நிலையில், எமது நாட்டு மாணவர்கள், இளம்சந்ததியினரிடையே தாங்கள் இந்த நாட்டிலிருந்தும் அந்நியப்பட்டவர்கள் என்ற எண்ணக் கருவே ஆழமாக மனதுள் பதிந்து விடுகின்றது. அத்துடன் இது நாட்டின் இன நல்லிணக்கத்திற்கும் தாக்கத்தை ஏற்படுத்தி வந்திருக்கின்றது.

மக்களிடையே மேலும், மேலும் கசப்புணர்வுகளை வளர்க்கும் முகமாகவே இவ்வாறான பாடத்திட்டத் தயாரிப்புகள் காணப்படுவதாகத் தெரியவருகிறது. இது மிகுந்த அவதானத்தைச் செலுத்த வேண்டிய விடயமாகும் எனவும் சிங்கள மாணவர்கள் இந்நாட்டின் தமிழர் மற்றும் ஏனைய இனத்தவர் பற்றிய வரலாற்றையும், பண்பாட்டையும், தமிழர் மற்றும் ஏனைய இனத்தவர் சிங்கள மக்களின் வரலாற்றையும், பண்பாட்டையும் தெரிந்து கொள்ள வழியேற்படுத்த வேண்டும் என துறை சார்ந்தவர்களிடம் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான தமிழ் புத்திஜீவிகள் குழு சுட்டிக்காட்டியிருந்தது.

அத்துடன் புத்தகங்களில் உள்ள குறைபாடுகளையும், அவற்றை நிவர்த்தி செய்வதற்கான பரிந்துரைகளையும் துறைசார்ந்த தமிழ் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள் என பலதரப்பினரையும் அழைத்து நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா ஆராய்ந்திருந்தார்.

அத்துடன் தமிழ் மாணவர்களுக்கான வரலாற்றுப் பாட நூல்களில்சிங்கள பௌத்த மக்களின் வரலாறு தொடர்பான விடயங்களே மிகக் கூடுதலான அளவில் இணைக்கப்பட்டிருக்கின்றன.

தமிழர்களின் வரலாற்றுக்கு உரியவாறு இடம் கொடுக்கப்படவில்லை. மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எமது வரலாற்று நிகழ்வுகளுக்குக் கூட முக்கியத்துவம் வழங்காது புறக்கணிக்கப்பட்டுள்ளது என பல குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன.

இதனடிப்படையில் தமிழ் மூல வரலாற்றுப் பாடநூல்களில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள், குறைபாடுகள் தொடர்பில் சுட்டிக்காட்டி ஜனாதிபதி மைத்திரிபால, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் ஆகியோருக்கு ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா இது குறித்து தெரியப்படுத்தி இருந்ததுடன் அதற்கான ஆலோசனை கூட்டங்களும் துறைசார்ந்தவர்களுடன் ஆலோசிக்கப்பட்டது.

அதன்போது புத்தகங்களில் உள்ள குறைபாடுகளையும், அவற்றை நிவர்த்தி செய்வதற்கான பரிந்துரைகளையும் துறைசார்ந்த தமிழ் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள் ஆகியோரைக் கொண்டமைந்த குழு ஒன்றின் ஆலோசனைகள், பரிந்துரைகள் என்பவற்றைத் திரட்டித் தயாரிக்கப்பட்ட ஆவணச் சுருக்க இணைப்புக்களும் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டன.

இது தொடர்பாக டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்றத்தில்பலதடவைகள் கேள்வி எழுப்பியதும் பின்னர் கல்வி அமைச்சரது அனுசரணையுடன் இராஜாங்க அமைச்சரின் தலைமையில் தேசிய கல்வி நிறுவக பிரதிநிதிகள், கல்வி வெளியீட்டுத் திணைக்கள பிரதிநிதிகள், பரீட்சைத் திணைக்கள பிரதிநிதிகள் மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர்கள் உள்ளடங்கலாக ஒன்றுக்கு மேற்பட்ட கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு தவறுகள் சீர் செய்யப்படும் என பொது இணக்கம் காணப்பட்டது.

அதனடிப்படையில் அவை குறித்த திருத்தங்கள் தமிழ் வரலாற்று பாடப்புத்தகத்தில் கொண்டுவருவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. இதில் தமிழ் மன்னனான எல்லாள மன்னனின் வரலாறு உள்ளிட்ட பல வரலாறுகள் தனித்துவமானதாக உள்வாங்கப்படவுள்ளது.

தற்போது இது தொடர்பான மாற்றங்கள் கொண்டவரப்பட்டு அவை தேசிய கல்வி பேரவையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு தற்போது அவை நடைமுறைப்படுத்துவதற்கான இறுதி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கான நடவடிக்கைகளின் இறுதி வடிவமைப்பை தாம் உள்ளிட்ட குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பேராசிரியர் புஸ்பரத்தினம் தெரிவித்தார். (இ-7)

# வீதியை புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை



(பொற்பதி)

மிக நீண்டகாலமாக திருத்தப்படாமல் உள்ள இடமாக வெற்றிலைக்கேணியையும் ஆழியவளையினையும் பிரிக்கின்ற இடமான மண்டலாய் கட்டுப் பகுதி வீதி காணப்படுகின்றது.

இதிலுள்ள தாழ்வான பகுதி போக்குவரத்திற்கு பெரும் இடையூறாகவுள்ளதாக மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். வடமராட்சிக்கிழக்கின் சுண்டிக்குளம் தொடக்கம் ஆழியவளை வரைக்குமான கிராம மக்கள் ஏ-9 வீதியை அடைவதற்கு மிகவும் இலகுவானதும் தூரம் குறைந்த பாதையாகவும் இப் பாதை காணப்படுவதனால் அநேகமானவர்கள் இப் பாதையினையே பயன்படுத்துகின்றனர்.

மாரிகாலத்தில் இவ் வீதியில் காணப்படும் குழிகளில் மழை நீர் தேங்கி நிற்கிறது. இதனால் போக்குவரத்திற்கு பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

எனவே பருத்தித்துறை பிரதேசசபைக்கு உட்பட்ட இவ் வீதியால் பயணிக்கும் மக்களின் சிரமத்தை கருத்தில் கொண்டு மழை காலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் இவ் வீதியில் காணப்படும் குழிகளை சீர் செய்து மக்களின் போக்குவரத்தை இலகுவாக்க குறித்த பிரதேச சபையினர் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-64)

# அரசியல் கைதிகளின் விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே முழுப்பொறுப்பை ஏற்க வேண்டும்

## ஆனந்தசங்கரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

உண்ணாவிரதத்தினை மேற்கொண்டுள்ள அரசியல் கைதிகளின் விடயத்தில் இனியும் காலம் தாழ்த்தாது உடன் நடவடிக்கை எடுக்காவிடின் நிலைமைமிக மோசமாகிவிடும். இதனை கருத்திற் கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இதற்கான முழுப் பொறுப்பையும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தாங்கள்தான் என தம்பட்டம் அடிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே ஏற்க வேண்டும்.

இரண்டுமுறை பேச்சுவார்த்தையில் ஈடுபட்டும் எதுவித பலனும் கிடைக்கவில்லை. உயிர்கள் ஊசலாடிக் கொண்டிருக்கும் நிலையில், அரசுக்கு இனியும் காலஅவகாசம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. அரசுக்கு அழுத்தத்தைக் கொடுத்து உயிர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பில் உள்ளதமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெறுமனே வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கின்றது. தாங்கள்தான் இந்த நல்லாட்சியை அமைப்பதற்கு காரணம் என வாய்ச்சொல் வீரம் பேசும் பேசினால் மட்டும் போதாது அதனை செயலிலும் காட்டவேண்டும்.

இந்த நல்லாட்சியை பாதுகாப்பதற்கு,எதிர்க்கட்சியாக இருந்தும் வரவு-செலவு திட்டத்தை, ஆதரித்து வாக்களித்தார்கள்.தற்போது அரசியல் கைதிகளின் உயிரை பாதுகாப்பதற்கு என்னசெய்யப் போகின்றார்கள். அரசுக்கு கொடுக்க வேண்டிய அழுத்தத்தை உரியமுறையில் கொடுத்து இந்த உயிர்களை பாதுகாக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தற்காலிகமாக என்ற போர்வையில் கொண்டுவரப்பட்ட, பயங்கரவாத தடைச்சட்டம் இன்றும் நீடிக்கின்றது. அந்தசட்டத்தில் இருக்கின்ற சரத்துக்களின் படிதுரிதமாக விசாரணை செய்திருந்தாலே அவர்கள் அனைவரும் தண்டனையை முடித்து வெளியேறி இருப்பார்கள். சிறையில் தண்டனைபெற்று இருந்தாலும் அவர்களின் நன்னடத்தையை கருத்திற் கொண்டு மனிதாபிமான அடிப்படையில் குறிப்பிட்ட காலத்தின் பின்னர் அவர்கள் விடுமுறையில் வீடு சென்று வருவதற்கு கூட அந்தச்சட்டத்தில் இடம் இருக்கின்றது. இவையனைத்தும் ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ.சுமந்திரனுக்கு தெரியாதா? ஏன் இப்படிநாடகம் ஆடிக்கொண்டிருக்கின்றார்கள்.

எனவே இவைகளைஎல்லாம் ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறி அவர்களை உடனடியாக பொது மன்னிப்புடன் கூடிய விடுதலையோ அல்லது புனர்வாழ்வுடன்கூடிய விடுதலையோ பெற்றுக் கொடுத்து, இனியும் காலம் தாழ்த்தாது அந்த உயிர்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு, தமிழ்த் தேசியக்கூட்டமைப்பைச்சார்ந்தது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 90 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 100 | 120 |
| தக்காளி | 80 | 20 | 50 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 35 | 50 | 60 |
| கோவா | 80 | 50 | 100 | 100 |
| கரட் | 100 | 130 | 140 | 160 |
| பூசணி | 40 | 30 | 40 | 60 |
| புடோல் | 60 | 30 | 60 | 80 |
| வாழைக்காய் | 80 | 50 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 70 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 140 | 130 | 140 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 35 | 60 | 100 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 120 | 120 | 140 | 160 |
| லீக்ஸ் | 60 | 70 | 100 | 100 |
| பீற்றூட் | 40 | 50 | 80 | 80 |
| கறிமிளகாய் | 80 | 80 | 100 | 120 |
| முருங்கைக்காய் | 140 | 50 | 60 | 80 |
| போஞ்சி | 150 | 130 | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | — | 60 |
| கீரை - 1பிடி | 50 | 30 | 50 | 40 |
| தேசிக்காய் | 250 | 300 | 280 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 50 | 30-50 |
| இராசவள்ளி | 150 | 110 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 150 | 90 | 140 | 160 |
| முள்ளங்கி | 50 | 30 | 60 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 50 | 30 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 100 | 60 | 100 |




## வாசிப்பு மாதம் ஒக்டோபர் - 2018

# சோக்கிரட்டீசும் இளைஞனும்



### கதை

ஓர் இளைஞன் சோக்கிரட்டீசிடம் வந்து வெற்றிக்கான இரகசியத்தைப் பற்றிக் கேட்டான். அதற்கு சோக்கிரட்டீஸ் அந்த இளைஞனிடம் அடுத்த நாள் காலையில் ஆற்றங்கரைக்கருகில் தன்னை வந்து சந்திக்கும்படி கூறினார். அடுத்த நாள் அவர்கள் ஆற்றங்கரையில் சந்தித்தனர்.

சோக்கிரட்டீஸ் அந்த இளைஞரிடம் தன்னுடன் ஆற்றை நோக்கி வரும்படி கேட்டுக் கொண்டார். தங்களது கழுத்தளவுக்கு ஆற்றுநீர் வந்தவுடன் சோக்கிரட்டீஸ் அந்த இளைஞனைத் திடீரென நீரினுள் பிடித்து அமிழ்த்தினார். அந்த இளைஞன் வெளியில் வரப் போராடினான்.

ஆனால் சோக்கிரட்டீஸ் மிக வலுவானவர். ஆதலால் அப்படியே அவனை அமுக்கியவாறு அவனது முகம் நீல நிறமாக மாறும்வரை வைத்திருந்தார்.

சற்றுப் பொறுத்து சோக்கிரட்டீஸ் அவனது தலையை நீரிலிருந்து வெள்ளியே இழுத்தவுடன் அந்த இளைஞன் செய்த முதல் வேலையே தன்னால் இயன்ற அளவு காற்றை மீண்டும் மீண்டும் உள்ளிழுத்ததுதான்.

அப்போது சோக்கிரட்டீஸ் அவனிடம் நீ நீருக்குள் இருந்த போது எதை அதிகம் விரும்பினாய், எதற்காக உன் சக்தி முழுவதையும் திரட்டிப் போராடினாய் என்று கேட்டார். அந்த இளைஞன் காற்று என்று பதிலளித்தான்.

சோக்கிரட்டீஸ் வெற்றியின் இரகசியமே அதுதான். நீ எவ்வளவு அதிகமாகக் காற்றை விரும்பினாயோ அது போன்றே வெற்றியையும் விரும்பினால் உனக்கு அதுகிட்டும் என்று சொன்னார்.

இதைத் தவிர வேறு எந்த இரகசியமும் இல்லை.

### கதை கூறும் கதை

'உங்கள் இலக்குகளை நேசியுங்கள். உங்கள் சக்தி முழுவதையும் அதற்காகவே செலவழியுங்கள், போராடுங்கள், இலக்குகள் உங்களிடமே சரணடையும்'

இக் கதை மூலம் நான் உங்களுக்குக் கூற நினைப்பது உங்கள் பிள்ளைகளின் மனதில் பரீட்சையில் சித்தி பெறவேண்டும்என்றஆசையை வளருங்கள். அதையே சிந்திக்க வையுங்கள். ஆசைகள் தான் சாதனைகளின் தொடக்கம். ஒரு விளையாட்டில் சாதித்த ஒருவர் முதலில் அவ் விளையாட்டின் பால் ஈர்க்கப் பட்டிருப்பார். பின்பு விளையாட ஆரம்பித்திருப்பார்.

மேலும் திறமையை வளர்க்க முயற்சி செய்திருப்பார். அதில் தான் ஏதும் சாதிக்க வேண்டுமென ஆசைப்பட்டிருப்பார்.

தனக்கு இஷ்டமான பலவற்றை அவ்விளையாட்டுப் பயிற்சியின் நிமித்தம் அவர் இழந்திருப்பார். கடினமான பலவற்றை விரும்பி ஏற்றுச் செய்திருப்பார். ஒவ்வொரு கணமும் அச்சாதனை பற்றியே சிந்தித்திருப்பார். விளையாட்டின் நுணுக்கங்களை ஆராய்ந்திருப்பார். தன்னுடைய சக்தி முழுவதையும் அதற்காகவே செலவு செய்திருப்பார்.

இவ்வளவிற்குப் பிறகு தான் ஒரு நாள் அவர் சாதனையை நிகழ்த்தியிருப்பார்.

எனவே பிள்ளைகளின் மனதில் நல்ல ஆசைகளை விதையுங்கள். தேவையற்ற ஆசைகளைக் களையுங்கள். பரீட்சை வெற்றிகளின் மகத்துவத்தைப் புரிய வையுங்கள். அதுவே நல்ல எதிர்காலத்திற்கான நிச்சயமான வழி என்பதைத் தெளிவுபடுத்துங்கள. நீருக்குள் மூழ்கி இருப்பவனுக்கு காற்று எவ்வளவு அவசியமோ அதேபோல் வாழ்வுக்கு கல்வி அவசியம். வாழ்க்கையே போராட்டம் தான். போராடாமல் எதுவும் கிடைக்கப் போவதில்லை.

உழைப்பும் தியாகமுமன்றி வெற்றி பெற முடியாது. ஒவ்வொரு கணமும் இலக்கையும் அதற்காக செய்ய வேண்டிய முயற்சிகளையும் பற்றிச் சிந்திக்க வையுங்கள். தொடர்ந்து ஓடிக் கொண்டிருந்தால் தான் விரைவாக வெற்றியின் எல்லையைத் தொடமுடியும்.

# ஓடி விளையாடு பாப்பா...



ஓடி விளையாடு பாப்பா-நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா,
கூடி விளையாடு பாப்பா-ஒரு
குழந்தையை வையாதே பாப்பா.

சின்னஞ் சிறுகுருவி போலே-நீ
திரிந்து பறந்துவா பாப்பா,
வண்ணப் பறவைகளைக் கண்டு-நீ
மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா.

கொத்தித் திரியுமந்தக் கோழி-அதைக்
கூட்டி விளையாடு பாப்பா,
எத்தித் திருடுமந்தக் காக்காய்-அதற்கு
இரக்கப் படவேணும் பாப்பா.

பாலைப் பொழிந்துதரும் பாப்பா-அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பர்
வாலைக் குழைத்துவரும் நாய்தான்-அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா.

வண்டி இழுக்கும்நல்ல குதிரை-நெல்லு
வயலில் உழுதுவரும் மாடு,
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு-இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா.

காலை எழுந்தவுடன் படிப்பு-பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு-என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா.

பொய் சொல்லக் கூடாது பாப்பா-என்றும்
புறஞ்சொல்ல லாகாது பாப்பா,
தெய்வம் நமக்குத்துணை பாப்பா-ஒரு
தீங்குவர மாட்டாது பாப்பா.

பாதகஞ் செய்பவரைக் கண்டால்-நாம்
பயங்கொள்ள லாகாது பாப்பா,
மோதி மிதித்துவிடு பாப்பா-அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா.

துன்பம் நெருங்கிவந்த போதும்-நாம்
சோர்ந்துவிட லாகாது பாப்பா,
அன்பு மிகுந்ததெய்வ முண்டு-துன்பம்
அத்தனையும் போக்கிவிடும் பாப்பா.

சோம்பல் மிகக்கெடுதி பாப்பா-தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா,
தேம்பி யழுங்குழந்தை நொண்டி-நீ
திடங்கொண்டு போராடு பாப்பா.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற-எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா,
அமிழ்தில் இனியதடி பாப்பா-நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா.

சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே-அதைத்
தொழுது படித்திடடி பாப்பா
செல்வம் நிறைந்த ஹிந்து ஸ்தானம்-அதைத்
தினமும் புகழ்ந்திடடி பாப்பா.

வடக்கில் இமயமலை பாப்பா-தெற்கில்
வாழும் குமரிமுனை பாப்பா,
கிடக்கும் பெரியகடல் கண்டாய்-இதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா.

வேத முடையதிந்த நாடு-நல்ல
வீரர் பிறந்த திந்த நாடு.
சேதமில் லாதஹிந்து ஸ்தானம்-இதைத்
தெய்வமென்று கும்பிடடி பாப்பா.

சாதிகள் இல்லையடி பாப்பா-குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி, உயர்ந்தமதி, கல்வி-அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்.

உயிர்களிடத்தில் அன்பு வேணும்-தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
வயிர முடைய நெஞ்சு வேணும்-இது
வாழும் முறைமையடி பாப்பா.

சுப்பிரமணிய பாரதியார்

தொகுப்பு:- கொக்குவில் பொது நூலகம்

அறியாதவனாகவும், தான் அறியாதவன் என்பதை அறியாதவனாகவும் உள்ளவன் முட்டாள்; அவனை உலகம் ஒதுக்கிவிடும். ~ *கீழைத்தேய பழமொழி*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# நீங்களே உங்களை இழிவு செய்தால்...

ஈழத் தமிழர்களின் சமகால அரசியல் போக்கு ஆரோக்கியமானதாக இல்லை. தமிழ் அரசியல்வாதிகள் தங்களைத் தாங்களே தூற்றி விமர்சிக்கின்ற வேலைகளைச் செய்கின்றனர்.

அதிலும் ஒரு சிலர் தரம் குறைந்த வேலைகளைச் செய்வதையும் பார்க்க முடிகிறது.

நான் வாழ வேண்டும்; என் குடும்பம் வாழ வேண்டும் என்பதற்காக அரசியல் பதவிகளை எப்படியெல்லாம் பயன்படுத்தலாம் என்று நினைப்பது அபத்தமானது.

எந்தக் காரியத்தைச் செய்ய முன்பும் அந்தக் காரியம் இறைவனுக்கும் தர்மத்துக்கும் ஏற்புடையதா? என்பதை ஒரு கணம் உறுதி செய்ய வேண்டும்.

மற்றவர்களைக் குறைகூறுவதும் மற்றவர்களை தரக்குறைவாக விமர்சிப்பதும் பண்பாடான செயலன்று.

அவர்கள் விமர்சிக்க மாட்டார் என்பதற்காக எப்படியும் விமர்சிக்கலாம் என்றால் அதன் விளைவு பாரதூரமானதாக இருக்கும்.

எதுஎவ்வாறாயினும் இன்றிருக்கக்கூடிய நம் அரசியலில் எங்களை நாங்கள் விமர்சிப்பதற்கான விடயங்களே நடக்கின்றன.

இதனால் தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் பற்றி எவரும் கவலை கொள்வதாக இல்லை.

மாறாக தேர்தல் வந்தால் அதில் வெற்றி பெற்றுப் பதவியை பிடிப்பது எங்ஙனம், அதற்காக எத்தகைய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்ற சிந்தனை ஓட்டத்தில் காலம் நகர்கின்றதே தவிர, தமிழ் மக்கள் பற்றி, தமிழினத்தின் நிலைமை பற்றிச் சிந்திப்பதற்கு யாரும் இல்லை.

அவ்வாறு ஒரு சிலர் சிந்தித்தாலும் அதனையும் அடியோடு அறுத்தெறிந்து விடுகின்ற காரியமும் கண்டபாட்டில் நடந்தாகின்றது.

இஃது எங்கள் நிலைமையாக இருக்க, தென்பகுதியில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இரகசியச் சந்திப்புக்களில் ஈடுபடுவதான தகவல்கள் வெளிவந்த வண்ணமுள்ளன.

அவ்வாறு சந்திக்கின்றார்கள் என்ற தகவல்களின் உண்மைத்தன்மைக்கு அப்பால், சிங்கள மக்களின் அரசியல் சமூகம் என்பது தன் நாடு, தன் இனம் என்ற சிந்தனையோடு நகர்கிறது.

வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழின அழிப்பு யுத்தம் நடந்த பின்பு நல்லாட்சி என்ற கோசத்துடன் மைத்திரி – ரணில் அரசு அமையப் பெற்றது.

இதற்கு தமிழ் அரசியல் தலைமையும் ஆதரவு கொடுத்தது. இந்த ஆதரவும் சேர்ந்து வன்னி யுத்தம் தொடர்பான போர்க்குற்ற விசாரணைகளை இல்லாமல் செய்ததுடன் சர்வதேசத்தின் அழுத்தத்தையும் இலங்கை அரசுக்கு வலுக்குறைப்புச் செய்தது. இந்நிலைமையானது, தமிழ் மக்களுக்கு மிகப்பெரும் பாதகமாக அமைந்தது.

நல்லாட்சி என்ற அவதாரத்தில் எல்லாக் குற்றங்களையும் சமாளித்த பின்பு இப்போது ஆட்சிமாற்றமடைவதற்கான முயற்சிகள் நடக்கின்றன. இந்த முயற்சி தமிழர்களுக்கு எந்த உரிமையையும் இல்லாமல் செய்வதற்கானது.

என்ன செய்வது! நாங்கள் எங்களைத் தூற்றிக் கொண்டிருக்க, அவர்கள் இராஜதந்திரத்துடன் செயற்படுகின்றனர்.

# 154 நிரந்தர உத்தியோகத்தர்களின் பணிநிலை வெற்றிடங்கள் நீண்டகாலம் நிரப்பப்படவில்லை

## முல்லை.மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத் தகவல்படி

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைகளத்தின் கீழ் கணக்காளர் உட்பட பல்வேறு தரங்களில் கடமையாற்றுவதற்கு 206 நிரந்தர உத்தியோகத்தர்கள் தேவையாகவுள்ள நிலையில் தற்போது 54 நிரந்தர உத்தியோகத்தர்கள் மட்டுமே கடமையாற்றி வருவதாகவும் 154 நிரந்தர உத்தியோகத்தர்களின் பணிநிலை வெற்றிடங்கள் நீண்டகாலமாக நிரப்பப்படாத நிலை காணப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் புள்ளிவிபரத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குட்பட்ட 10 கமநல சேவை நிலையங்கள் கீழ் பல ஆயிரக்கணக்கான விவசாயிகள் தமது வாழ்வாதாரத்திற்காக விவசாயத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த கமநல சேவை நிலையங்களிலும் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குட்பட்ட பல்வேறு தரங்களில் 152 நிரந்தர பணிநிலை வெற்றிடங்கள் நீண்டகாலமாக நிரப்பப்படாத நிலை காணப்படுகின்றது.

குறிப்பாக, இந்த வெற்றிடங்களில் கணக்காளர் பதவியில் கடமையாற்றியவர் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள நிலையில், நிரந்தர கணக்காளர் நியமிக்கப்படாத நிலையில், இடமாற்றலாகிச் சென்றவர தற்காலிகமாககிழமை நாட்களில் இரண்டு நாட்கள் மட்டும கடமையாற்றி வருகினறார்.

இதனால் நடப்பாண்டுக்குரிய நீர்ப்பாசனக் குளங்களின் புனரமைப்பு வேலைகள் துரித கதியில் நடைபெற்று வருவதாகவும் இதற்கான கொடுப்பனவுகள் உட்பட பல்வேறு வகையான நிதி கொடுப்பனவுகளை உரிய நேரத்தில் வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

அத்துடன், முல்லைத்தீவு மாவட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் கடமையாற்ற 134 விவசாய உற்பத்தி ஆராய்ச்சி உதவியாளர்கள் தேவையான நிலையில் தற்போது 06 பேர் மட்டுமே கடமையாற்றி வருவதுடன் 128 வெற்றிடங்களுக்கு நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ ஆளணி நிரப்பப்படாத நிலை காணப்படுகின்றது.

இந்நிலையில், இங்குள்ள 10 கமநல சேவை நிலையங்களில் 02 கமநல சேவை நிலையங்களில் மட்டுமே நிரந்தர கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கடமையாற்றி வருவதுடன், மிகுதி 08 நிலையங்களிலும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிநிலை உத்தியோகத்தர்களே தற்காலிகமாக கடமையாற்றி வருகின்றனர்.

இதேவேளை, அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 44 பேர் தேவையாகவுள்ள நிலையில் 33 பேர் கடமையாற்றி வருவதுடன் 11 வெற்றிடங்கள வெற்றிடமாகவே உள்ளது.

முகாமைத்துவ உதவியாளர்கள் 12 பேர் கடமையாற்ற வேண்டிய நிலையில் தற்போது 07 பேர் மட்டுமே கடமையாற்றி வருவதுடன் 05 வெற்றிடங்கள் நிரப்பப்படாத நிலையில் உள்ளது.

மேலும், தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் 03 பேர் தேவையாகவுள்ள நிலையில் தற்போது 02 பேர் மட்டும் கடமையாற்றி வருவதுடன் ஒரு வெற்றிடம் நிரப்பப்படாத நிலையில் உள்ளது.

காவலாளிகள் 3 பேர் தேவையாகவுள்ள நிலையில தற்போது 2 பேர் மட்டுமே கடமையாற்றி வருகின்றனர்.

அலுவலக உதவியாளர்கள் 3 பேர் தேவையாக உள்ள நிலையில் தற்போது ஒருவர் மட்டுமே கடமையாற்றி வருவதுடன் 2 பணிநிலை வெற்றிடங்கள் காணப்படுகின்றது.

சாரதிகள் 2 பேர் தேவையாகவுள்ள நிலையில் தற்போது கடமையில் ஒருவர் மட்டுமே உள்ளதுடன் ஒரு வெற்றிடம் நீண்ட காலமாக பூரணப்படுத்தப்படாமல் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

## ஜனாதிபதியை கொல்லச்சதி

### நாமல் குமார, நாலக சில்வா வெளிநாடு செல்லத் தடை!

ஊழல் ஒழிப்புப் பிரிவின் நடவடிக்கை பணிப்பாளர் நாமல் குமார மற்றும் பயங்கரவாத விசாரணைப் பிரிவின் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வா ஆகியோருக்கு வெளிநாடு செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த இருவரும் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜராகினர். இதன்போதே நீதவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரைக் கொலை செய்வதற்கு, சதித்திட்டம் தீட்டிய சம்பவம் தொடர்பில் தகவல்களை வெளிப்படுத்தினர் என இவ்விருவருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தினமும் நட்டத்தில் இயங்கிவரும் ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் நாட்டுக்குப் பெரும் சுமையாக மாறியுள்ளது

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

தினமும் நஷ்டத்தில் இயங்கி வரும் ஸ்ரீலங்கன்விமான சேவை நிறுவனம் நாட்டுக்குப் பெரும் சுமையாக மாறியுள்ளதாகவும் அந்த நிறுவனத்தில் பணியாற்றி வரும் 7 ஆயிரம் ஊழியர்களுக்கு இழப்பீடுகளை வழங்கி நிறுவனத்தை மூடி விடுவது சிறந்தது எனவும் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கன்விமான சேவை நிறுவனம் கடந்த மார்ச் மாதம் 31ஆம் திகதி வரையான காலத்தில் 18 ஆயிரத்து 400 கோடி ரூபாய் நட்டத்தையும் மிஹின் லங்கா ஆயிரத்து 900 கோடி நட்டத்தை சந்தித்துள்ளன.

இந்த இரண்டு நிறுவனங்களின் நட்டம் என்பது 20 ஆயிரம் கோடி ரூபாயை தாண்டியுள்ளது.

எரிபொருள் விலை அதிகரிப்பு போன்ற விடயங்களுடன் ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் இந்த வருடத்தில் மட்டும் 3 ஆயிரத்து 500 கோடி ரூபாய் நட்டத்தை சந்திக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டில் வாழும் அனைவரையும் தலா 10 ஆயிரம் ரூபாய் கடனாளியாக மாற்றியுள்ள ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தைத் தொடர்ந்தும் நடத்துவதா? இல்லையா? என்பதை உடனடியாகத் தீர்மானிக்க வேண்டும் எனவும் அமைச்சர் சம்பிக்க தெரிவித்தார். (இ-7)

# சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் செப்ரெம்பர் மாதத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்திருப்பதாக சுற்றுலா சபை தெரிவித்துள்ளது. இது 2.8 சதவீத அதிகரிப்பாகும். இந்த வருடத்தின் முதல் 9 மாத காலப்பகுதியில்பத்து இலட்சத்து 73 ஆயிரம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்திருந்தனர்.

இத்தொகை கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 11.6 சதவீத அதிகரிப்பாகும். சீனா, இந்தியா, பிரிட்டன், அவுஸ்திரேலியா, ஜேர்மனி ஆகிய நாடுகளைச் சேர்ந்த பயணிகளே பெரும் எண்ணிக்கையில் இலங்கைக்கு வருகை தந்திருந்தனர். (ம)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வவுனியா பிரதேசத்தில் அண்ணா நகர், சிறீநகர், பூந்தோட்டம் கைத்தொழிற்பேட்டை, லக்சபான வீதி, தோணிக்கல் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் மணல்குளம், இலந்தைமோட்டை, சூரியகட்டைக்காடு ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# நவராத்திரி பாமாலை

வீரத்திற்கு இன்று முதலாம் நாள்



## துயர் துடைக்கும் துர்க்கை

கொற்றவைத் தெய்வம்
கொடுமை தவிர்க்க
துர்க்கையாகத் தோன்றி
துயர் கொள்ளும் மக்களுக்கு
ஆறுதல் அளித்தாள்
சிங்க ரத்தில் அவள் ஏறி
சீக்கிரம் விடைகாண துடித்தாள்
வீரத்தை மக்களுக்கு கொடுத்தாள்
வேகத்தை மனதில் நிறுத்தினாள்
நவராத்திரியில் துர்க்கை புகழ் பாடிடுவோம்
நாடிவரும் பக்தர் துயர் தீர்த்திடுவாள்
நன்னெறியில் வாழ வழிகாட்டிடுவாள்
நமது வேண்டுதலுக்கு வழி சமைத்திடுவாள்

பா.கலாதேவி,
யாழ். சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

# வடக்கின் கில்லாடி உதைபந்தாட்டம்
# மக்கள் மனம் கவர்ந்த வீரரானார் றோயஸ் அணிகளின் கஜகோபன்



அரியாலை சரஸ்வதி விளையாட்டுக்கழகம் நடத்தி வரும் வடக்கின் கில்லாடியின், மக்கள் மனம் கவர்ந்த வீரனாக ஊரெழு றோயல் அணியின் தர்மகுலநாதன் கஜகோபன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அரியாலை சரஸ்வதி விளையாட்டுக்கழகம் தமது நூற்றாண்டு விழாவையொட்டி "வடக்கின் கில்லாடி யார்" என்னும் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் நடத்தி வருகின்றது.

போட்டிகள் ஒருபக்கம் நடக்க, போட்டிகளில் பங்குபற்றும் அணிகளில் எந்த வீரரை ரசிகர்களுக்கு அதிகம் பிடிக்கும் என்னும் முகப்புத்தகத்தின் ஊடாக வாக்களிக்கும் போட்டியொன்றையும் செப்டெம்பர் மாதம் 10 ஆம் திகதி முதல் அரியாலை சரஸ்வதி விளையாட்டுக் கழகம் நடத்தியது.

வாக்களிப்பு ஆரம்பித்த நாள் முதல் றோயல் அணியின் கஜகோபனுக்கும் குருநகர் பாடும் அணியின் கீதனுக்கும் இடையில் கடும் போட்டி நிலவியது. அதற்கு பின்னர் எந்த வீரருக்கும் இவர்கள் அளவுக்கு இணையான வாக்குகள் விழவில்லை.

இறுதி வரையில் இவர்களுக்கிடையில் கடுமையான போட்டி நிலவியபோதும், தொடர்ந்தும் கஜகோபன் முன்னிலை வகித்தார்.

7 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை 4 வரையில் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இந்நிலையில் வாக்களிப்பு முடிவடைந்து, வாக்குகள் எண்ணப்பட்டதில், ஊரெழு றோயல் அணியின் கஜகோபன் 3031 வாக்குகள் பெற்று முதலிடத்தைப் பெற்று, மக்கள் மனம் கவர்ந்த வீரராகத் தெரிவாகியுள்ளார். இவருக்கான விருது, வடக்கின் கில்லாடி இறுதிப் போட்டியில் வைத்து வழங்கப்படவுள்ளது. 2827 வாக்குகள் பெற்று கீதன் இரண்டாமிடத்தைப் பெற்றார்.

கஜகோபன், ஊரெழு றோயலில் நட்சத்திர மற்றும் பல வருட அனுபவம் கொண்ட வெள்ளை எனப்படும், தர்மகுலநாதனின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது. (க-26)

# இரண்டு கைகளாலும் பந்து வீசி இங்கிலாந்தை அசத்திய வீரர்





இங்கிலாந்து அணிக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தின் போது, இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் கமிண்டு மெண்டிஸ் இரண்டு கைகளிலும் பந்து வீசி துடுப்பாட்ட வீரர்களை மிரட்டினார்.

இங்கிலாந்து அணி, இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 ஒருநாள் போட்டிகள், ஒரு இருபது-20 போட்டிகள்மற்றும்3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது. இவ்விரு அணிகளுக்கிடையேயான முதல் ஒருநாள் போட்டி நாளை தொடங்கவுள்ளது. இதற்கிடையில் இங்கிலாந்து அணி இரண்டு பயிற்சி போட்டிகளில் விளையாடி வருகிறது.

இதில் முதல் பயிற்சி ஆட்டம் கடந்த 5ஆம் திகதி Sri Lanka XI அணியுடன் மோதியது. இதில் டக்வெர்த் லிவிஸ் முறைப்படி இங்கிலாந்து அணி 43 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த போட்டியின் போது இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் கமிண்டு மெண்டிஸ் இரண்டு கைகளிலும் பந்து வீசி அசத்தினார். குறிப்பாக இவர் ஒரே ஓவரில் வலது மற்றும் இடது கைகளில் மாற்றி பந்து வீசினார். அந்த வீடியோ தற்போது இணையத்தில் வெளியாகி வைரலாகி வருகிறது.

இவரின் பந்துவீச்சு திறமையைக் கண்டு இங்கிலாந்து வீரர்கள் மிரண்டு போயினர். கடந்த 2016 ஆம் ஆண்டு நடந்த 19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கோப்பை தொடரில் இவர் இரண்டு கைகளிலும் பந்து வீசி அனைவரையும் மிரட்டியுள்ளார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# இந்திய அணியில் நிலைத்து நிற்பார்; பிரித்வி ஷா குறித்து சச்சின் புகழாரம்



மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில், அதிரடியாக சதம் விளாசிய இளம் வீரர் பிரித்வி ஷா இந்திய அணியில் நிலைத்து நிற்பார் என சச்சின் டெண்டுல்கர் புகழ்ந்துள்ளார்.


ராஜ்கோட்டில் நடைபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான முதல் டெஸ்டில், இந்திய அணியின் இளம் வீரர் பிரித்வி ஷா, தான் அறிமுகமான முதல் போட்டியிலேயே 154 பந்துகளில் 134 ஓட்டங்கள் எடுத்து அசத்தினார்.

இதன்மூலம், முதல் டெஸ்டிலேயே சதம் விளாசிய இளம் வீரர் என்ற சிறப்பையும் அவர் பெற்றார். இந்நிலையில், பிரித்வி ஷாவின் ஆட்டம் குறித்து இந்திய முன்னாள் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் கூறுகையில்,

'பிரித்வி தன் வசம் அபரிதமான ஆட்டத்திறனை தன்னுள் கொண்டுள்ளார். அவருக்கு எதிர்காலம் மிகவும் சிறப்பாக அமையும். முதல் ஆட்டத்திலேயே பெரிய ஸ்கோரை அவர் எடுத்திருப்பது திருப்தி அளிக்கிறது.

இந்திய அணிக்காக விளையாடுவேன் என்று சிறுவயதில் அவரைச் சந்திக்கும் போதே சிந்தித்தேன் என அவர் தெரிவித்தார். (க)

# அசைவத்தை விட்ட விராட்



இந்திய அணியின் தலைவரான விராட் கோலி, மனைவிக்காக அசைவத்திலிருந்து, சைவ உணவுக்கு மாறிவிட்டாராம்.

இந்திய அணியில் பிட்டான வீரர்களில் விராட் கோலியும் ஒருவர், இந்நிலையில் கோலி அசைவத்திலிருந்து, சைவ உணவுப் பழக்கவழக்கத்துக்கு மாறியுள்ளார்.

அவருடைய மனைவியான அனுஷ்கா சர்மா ஏற்கனவே சைவத்திற்கு மாறிவிட்ட நிலையில், கோலியை நீண்ட நாட்களாக சைவத்துக்கு மாறும்படி கூறி வந்துள்ளார்.

இதனால் கோலி கடந்த 4 மாதங்களுக்கு முன்பு அசைவத்திலிருந்து சைவத்திற்கு மாறியுள்ளார். சைவத்திற்கு மாறியுள்ளதால், அவர் முன்பை விட தற்போது மிகவும் புத்துணர்ச்சியாகவும், ஆரோக்கியமாகவும் வலிமையாக இருப்பதாகவும் உணருகிறாராம்.

முன்பெல்லாம் புரோட்டீன் சத்துக்காக முட்டை, இறைச்சி எல்லாம் சாப்பிட்டு வந்த அவர், தற்போது அவை அனைத்தையும் கைவிட்டுள்ளார். (க)

# சூதாட்டத்தை சட்டபூர்வமாக்குங்கள்
## ப்ரீத்தி ஜிந்தா



இந்திய கிரிக்கெட் வாரியத்தால் தொடங்கப்பட்ட ஐபிஎல்இருபது-20 கிரிக்கெட் தொடர் உலகளவில் மிகப் பெரிய வளர்ச்சியை பெற்றுள்ளது. வளர்ச்சி பெற்ற ஐபிஎல் சூதாட்டம் என்ற வார்த்தையால் கடும் போராட்டத்தை சந்திக்க வேண்டியுள்ளது.

ஐபிஎல் மேட்ச் பிக்சிங் விவகாரத்தில் ஸ்ரீசாந்த் உட்பட சில வீரர்கள் தங்கள் வாழ்க்கையை இழந்தனர். இந்தியாவில் சூதாட்டம் சட்டப்பூர்வம் ஆக்கப்படாததால் மறைமுகமாக நடைபெற்று வருகிறது. இதில் சில வீரர்கள் தவறாக வழி நடத்தப்பட வாய்ப்பு உள்ளதால், ஊழல் கண்காணிப்பு பிரிவு ஐபிஎல் தொடர் நடைபெறும்போது மிகவும் விழிப்போடு கண்காணித்து வருகிறது.

இந்நிலையில் சூதாட்டத்தை சட்டப்பூர்வமாக்க வேண்டும் என்று ஐபிஎல் தொடரில் விளையாடும் அணிகளில் ஒன்றான கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் உரிமையாளர்களில் ஒருவரான ப்ரீத்தி ஜிந்தா விருப்பம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ப்ரீத்தி ஜிந்தா கூறுகையில், "அரசு சூதாட்டத்தை சட்டப்பூர்வமாக்கினால் அது சிறப்பானதாக இருக்கும் என்று நான் உணர்கிறேன். ஏனென்றால், வருமானத்திற்கு சிறந்ததாக இருக்கும். இரண்டாவது, அப்படி செய்தால் சூதாட்டம் போன்றவற்றை நிறுத்த முடியும். ஏனென்றால், உங்களால் எத்தனை மக்களை நிறுத்த முடியும்.

நான் பிடிபட்டு விடுவேன் என்று ரசிகர்கள் பயந்து கொண்டே இருக்க வேண்டும் என்றுதானே நீங்கள் நினைக்கிறீர்கள். அந்த அளவிற்கு பொலிஸால் மக்களை பயமுறுத்த முடியாது" என்று அவர் சூதாட்டத்தை சட்டபூர்வமாக்க ஆதரவு தெரிவித்தார். (க)

## முடிந்தால் இடைக்கால...

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், 'இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பிலான செய்திகள் தற்போது ஊடகங்களில் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

இதுகுறித்து நாளை ஜீ.எல்.பீரிஸ் இல்லத்தில் விசேட சந்திப்பொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த முயற்சிகளுக்கு ஐக்கிய தேசிய கட்சி ஒருபோதும் அச்சப்படாது.

இவ்வாறான முயற்சிகள் 2015ஆம் ஆண்டில் நாம் வெற்றி பெற்றதிலிருந்தே மேற்கொள்ளப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன.

குறிப்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்பட்டதோடு மகிந்தவை பிரதமராக்குவதற்கான பிரசாரங்களும் முன்னெடுக்கப்பட்டன.

மேலும், அரசாங்கத்தை கவிழ்ப்போம் என ஒருங்கிணைந்த எதிரணியினரால் ஆர்ப்பாட்டமும் முன்னெடுக்கப்பட்டது. இவையனைத்தையும் நாம் தோல்வியடைச் செய்துள்ளோம்.

ஒன்றிணைந்த எதிரணியோ மக்கள் மத்தியில் நாளாந்தம் புதிய கருத்தாடலை தோற்றுவிக்கும் நோக்கத்திலேயே இவ்வாறு செயற்பட்டு வருகிறது.

இவ்வாறானவர்களுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினர் இணைந்து கொள்வார்களாயின், அவர்கள் வெட்கமற்றவர்கள் என்பதே எமது நிலைப்பாடாகும்.

அத்தோடு, இடைக்கால அரசாங்கம் ஒன்றை ஸ்தாபிக்க இந்தத் தரப்பினர் முயற்சிகளை மேற்கொள்வார்களாயின், ஐக்கிய தேசியக் கட்சி தனி அரசாங்கம் ஒன்றை இலகுவாக ஸ்தாபிக்கும் என்பதையும் நாம் தெரிவித்துக்கொள்கிறோம்.

106 நாடாளுமன்ற உறுப்பினர்கள் எமக்கு தற்போது இருக்கிறார்கள். பெரும்பான்மை அரசாங்கம் ஒன்றை ஸ்தாபிக்க இன்னும் ஆறு, ஏழு உறுப்பினர்களே குறைவாக உள்ளது.

இந்தநிலையில் நாம், தனி அரசாங்கம் ஒன்றை ஸ்தாபிப்பதாயின், சுதந்திரக் கட்சியிலுள்ள சில உறுப்பினர்களே ஆதரவு வழங்குவார்கள். அவர்கள், இப்போதும் தயாராகத் தான் இருக்கிறார்கள்.

மகிந்த ராஜபக்ஷவின் ஊழல் ஆட்சிக்கு எதிராகத்தான் நாம் அன்று ஒன்றிணைந்தோம். இதற்கெதிராகத்தான் மக்களும் அன்று வாக்களித்தார்கள்.

மீண்டும் இந்தத் தரப்பினரை ஆட்சியதிகாரத்துக்குக் கொண்டுவர எவரேனும் முயற்சிப்பாராயின் அது 2015ஆம் ஆண்டு வாக்களித்த மக்களுக்கு இழைக்கும் பாரிய ஒரு துரோகமாகவே கருதப்படும்.

எனவே, முடிந்தால் இடைக்கால அரசாங்கம் ஒன்றை கொண்டுவர முயற்சிகளை எடுக்குமாறு நாம் சவால் விடுக்கிறோம்.

அவ்வாறான நடவடிக்கை எடுக்கப்படுமானால், நிச்சயமாக ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையிலான மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் கொண்ட தனி அரசாங்கம் ஒன்றை நாம் ஸ்தாபிப்போம் என தெரிவித்துள்ளார். (ம)

## 151 மனித எலும்பு...

154 மனித எச்சங்கள் அடையாளப்படுத்தப்பட்டு, அவற்றுள் 151 மனித எச்சங்கள் தோண்டி வெளியில் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் நகர நுழைவாயில் பகுதியில் அமைந்துள்ள "சதொச" விற்பனை நிலைய வளாகத்தில் கடந்த மார்ச் மாதம் புதிய விற்பனை நிலையத்துக்கான கட்டுமான பணி இடம்பெற்ற போது குறித்த வளாக பகுதியில் அகழ்வு செய்யப்பட்ட மண்ணில் இருந்து மனித எச்சங்கள் கண்டு பிடிக்கப்பட்டன

அதனைத்தொடர்ந்து குறித்த வளாகப் பகுதியில் தொடர்ச்சியாக நீதிமன்றத்தின் அனுமதியுடன் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம)

# தொடர் நிலமீட்பு போராட்டத்தில் ஈடுபடும் கேப்பாப்பிலவு மக்கள்

## ஜனாதிபதிக்கு மகஜர் கையளிப்பு

(பனிக்கன்குளம்)

இலங்கை இராணுவத்தினர் சுவீகரித்து வைத்துள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி கடந்த வருடம் மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பித்த நிலமீட்பு போராட்டம் இன்றும் கேப்பாபுலவு இராணுவ தலைமையக வாயிலுக்கு முன்னால் தொடர்கின்றது.

இந்நிலையில் தமது நிலைப்பாடுகளை வெளிப்படுத்தி எதிர்க்கட்சி தலைவர் ஊடாக ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை நேற்று மாலை பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜாவிடம் கையளித்துள்ளனர் நேற்று மாலை மக்கள் பிரதிநிதிகளை தமது போராட்ட காலத்துக்கு அழைத்த மக்கள் ஜனாதிபதிக்கான மகஜரினையும் அதன்பிரதிகளையும் கையளித்தனர்

அந்தவகையில் ஜனாதிபதி, பிரதமர் பாதுகாப்பு செயலாளர், எதிர்க்கட்சி தலைவர் ஆகியோருக்கான மகஜரினை பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜாவிடம் கையளித்ததோடு வடமாகாண முதலமைச்சருக்கான மகஜரினை வடமாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் அவர்களிடம் கையளித்தனர் அத்தோடு ஐ.நா செயலாளருக்கான மகஜரினை தேசிய மீனவர் சங்க பிரதிநிதியிடம் கையளித்தனர்

மக்களின் அழைப்பை ஏற்று பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா வடமாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் வடமாகாண சபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன், து.ரவிகரன் மற்றும் கரைதுரைப்பற்று பிரதேச சபை தவிசாளர் , உப தவிசாளர் உறுப்பினர்கள் உள்ளிட்டவர்கள் வருகைதந்து மக்களுடன் கலந்துரையாடினர். மக்கள் தமது நிலைப்பாடுகள் தொடர்பில் அனுப்பிவைக்கும் விடயங்களை தெளிவுபடுத்தினர்.

குறித்த மகஜரில் குறிப்பிடப்படும் விபரங்கள் வருமாறு,

ஜனாதிபதி மைத்திரிபாலா சிறிசேனா ஊடாக இரா.சம்பந்தன். பூர்வீகவாழ்விடம் தொடர்பானது கேப்பாபுலவு பூர்வீக மக்களாகிய நாம் இன்று நேற்றல்ல இராணுவ ஆக்கிரமிப்பிலிருக்கும் வேறுபிரதேசங்கள் காணிகள் விடுபடும் நிலையறிந்தல்ல இடம்பெயர்ந்து இடைத்தங்கல் நிவாரணக் கிராமத்திலிருக்கும் போது எமது வாழ்விடம் மறுக்கப்பட்டு மாற்றுக் காணியில் எம்மை குடியமர்த்தவிருக்கும் நிலையறிந்தநாம் மாற்று வாழ்விடத்தை மறுத்து 'எமது பூர்வீக வாழ்விடம் எமக்கு வேண்டும்' என மகஜர்கள். ஆர்ப்பாட்டங்கள். ஊர்வலங்கள். உண்ணாவிரதம் ஆகியவற்றின் மூலம் உரிமைக் குரல் கொடுத்து எமது வாழ்விடம் கிடைக்குமென எதிர்பார்த்திருந்த நாம் எமது வாழ்விடத்தை நாமே பெற்றெடுக்கப்படவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டோம்.

வாழ்விடத்திலிருந்து இடம் பெயர்ந்த ஒவ்வொரு குடிமகனும் அவரவரிடத்தில் குடியமர்த்தப்பட வேண்டியது சட்டக் கோவை. இருந்தும் பலதலைமுறை வழித்தோன்றல் வழி பூர்வீக மக்களாகிய நாம் பிறந்து வளர்ந்து வாழ்ந்து நாட்டின் அசாதாரண நிலை காரணமாக விட்டுச் சென்ற 282 ஏக்கர் காணியிலிருந்து வெளியேறிய 138 குடும்பங்களின் வாழ்விடம் நாமே பெற்றெடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்ட நாம் கடந்த 01.03.2017 அன்று "எமது பூர்வீக வாழ்விடம் எமக்குவேண்டும்" என்ற உரிமைக் குரல் கொடுத்து கவனயீர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்தோம்.

எம் தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தின் 303ஆவது நாள் தாங்கள் பெருமனதோடு ஒரு தொகுதி உறவுகளை குடியமர்த்தியமைக்கு எம் இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்வடைகின்றோம். இருந்தும் 2018ஆம் ஆண்டுக்குள் வடக்கு கிழக்கு காணிப் பிரச்சினைகளை முடிப்பேன் என அறிக்கையிட்ட நல்லாட்சினால் நாம் வாழ்ந்துவிட்டுச் சென்ற மிகுதி வாழ்விடத்தைக் கேட்டு ஆரம்பித்த கவனயீர்ப்பு போராட்டத் தொடரில் 566 நாட்களாகியும் இதுவரை நல்லாட்சியரசினால் ஒரு முழுமையான முடிவு எமக்கு கிடைக்கவில்லை.

தனிமையாக அமைந்த குக் கிராமத்தில் ஒன்றுபட்டு வாழ்ந்த எம்மை எமது கவனயீர்ப்பு போராட்டத்தின் 303ஆவது நாள் 01.01. 2018 அன்று விடப்பட்ட 65 நபர்களுக்கான 111 ஏக்கர் காணியில் 38 குடும்பங்கள் மட்டும் மீள்குடியமர்த்தப்பட்டன. இயற்கை வனம் சூழ்ந்த தனிமைப் புறத்தோடு இராணுவ அரண்கள் புடை சூழ இந்தக் குக்கிராமத்தில் 38 குடும்பங்கள் தனித்து வாழ முடியுமா.? அத்தோடு மக்களுக்கான பொது அமைவிடங்களான

1. பாடசாலை 2.பொதுநோக்குமண்டபம் 3.சனசமூகநிலையம். 4.முன்பள்ளி 5.பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் 6.பொதுமைதானம் 7.இந்துமயானம் 8.கிறிஸ்தவமயானம் 9.கிறிஸ்தவாலயம் என்பன இராணுவ ஆக்கிரமிப்பிலிருக்க 104 குடும்பங்களின் காணிகளும் இராணுவ ஆக்கிரமிப்பிலிருக்க மீள்குடியமர்த்தப்பட்ட நாளிலிருந்து 9ஆவது மாதத்தை எட்டிய நிலையிலும் எந்த முடிவுமில்லாமல் வாழ்விட நீதிகேட்டு குழந்தை குட்டிகளுடன் சொல்லணாத் துன்ப துயரங்களைச் சுமந்து தெருவில் கிடக்கும் எம்மை நல்லாட்சியரசு விரைவில் குடியேற்றாதோ என எதிர் பார்த்து தவிக்கும் எமக்கு இதுவரையும் அரசு முடிவு எடுக்கவில்லையென்றால் செய்யப்பட்ட மீள்குடியேற்றம் ஒருகண் துடைப்பு மீள்குடியேற்றமா? என எண்ணித் தவிக்கிறோம்.

எமது கிராமசேவையாளர் பிரிவுக்குள் "அகதி" வாழ்க்கை வாழும் எம் மூதாதையரின் முதுசமான வாழ்விடத்தை சொத்தாதனங்களை இராணுவத்தினர் ஆக்கிரமித்திருப்பதை எட்டிப் பார்த்துதவிக்கும் நிலையோ..? அத்தோடு கடந்த 23.08.2017அன்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அவர்களின் பாராளுமன்ற செயலகத்தில் காணிவிடயமாக கலந்துகொண்ட இராணுவ பேச்சாளர் அளித்த வாக்குறுதி ஒரு தொகுதி மீள்குடியேற்றம் செய்யப்பட்டு 06 மாதகாலத்துள் மிகுதி மக்களை மீள்குடியேற்றம் செய்வோம் என்று வாக்குறுதி தந்தனர்.

ஆனால் அளித்த வாக்குறுதிக்குமாறாக மக்கள் வாழ்விடம் என்று தெரிந்தும் வாழ்விட வுரிமை மக்கள் தெரு வோரத்தில் கிடக்கிறார்கள் என்றுஅரசிற்கோ இராணுவத்தினர்களுக்கோ தெரிந்தும் மீள்குடியேற்றம் செய்யப்படாத மக்களின் வாழ்விடத்தில் இராணுவ கட்டுமானப்பணிகள் மும்முரமாக நடப்பது நீதியானதா? நியாயமானதா? அரசு அறை கூவும் நல்லிணக்கத்திற்கும் சமாதானத்திற்கும் இச் செயல் வித்திடுமா? அல்ல தேசிய நல்லிணக்க சமாதான செயற்பாடா? இது நாம் அழிந்தொழிந்த சொத்துக்களைக் கேட்டோமா இராணுவத்தை கிராமத்தை விட்டு வெளியேறச் சொல்லிக் கேட்டோமா? எம் வாழ்விடத்தை விட்டு எம்மை சூழவுள்ள அரசகாணிகளில் அமரத்தானேகேட்டோம். இந்த 08 எட்டு வருடகாலமாக பலபல தலைமுறை வாழ் பழங்குடி மக்கள் தொழில் துறையிழந்து குழந்தை குட்டிகளுடன் 560 நாட்களாக அதாவது 18 மாதம் 10நாட்களாக வீதியில் கிடந்து காணியுறுதியோடு வாழ்ந்த வுரிமையோடுகேட்கும் உரிமைக்கு நீதி இல்லையா? எங்கள் மீது கருணையில்லையா? நீதியை கருத்தில் கொண்டு ஒரு தொகுதி எம் உறவுகளை மீள்குடியமர்த்திய ஜனாதிபதி மைத்திரிபாலா சிறிசேன எங்களை பாராமுகமாக இருக்கும் நிலையேனோ. நாம் எல்லா நிலையிலும் எம் நீதியை எடுத்துக்கூறிவாழுமுரிமையற்று 560 நாட்களாக வீதியில் கிடக்கும் நாம் தங்களையும் பிரதமர் அவர்களையும் நேரில் சந்திக்க விரும்புகிறோம். அதற்கு தங்கள் அனுமதியை மிகவும் பணிவாகநாடி நிற்கின்றோம்.

அத்தோடு நாமும் எம் வாழ்விடத்திற்கு செல்வோம். எம் தொழில் துறை வாழ்வாதாரத்தை பெருக்குவோம் என்ற ஆதங்க எதிர்பார்ப்புடன் இருந்தநாம் கவனயீர்ப்பு போராட்டக் காலத்தில் இரண்டாவது காலபோக செய்கைகாலத்தைச் சந்திக்கின்றோம் என்றால் எங்கள் வாழ்வாதாரம் என்னாகும்? எங்களுடைய பிள்ளைகளின் எதிர்காலம் என்னாகும். எங்களுடைய எங்கள் பிள்ளைகளுடைய வாழ்க்கையே போராட்டம் தானா? இது ஜனநாயக அரசிற்கோ தேசிய நல்லிணக்கத்தை எதிர் பார்க்கும் அரசிற்கோ நீதியான செயலா? தொடர்ந்தும் தொடரின்னல்களை அரசு மக்களுக்கு கொடுக்காத நலனைக் கருத்தில் கொண்டு 45, 50 வருடங்களுக்கு மேல் தனிநபர் காணியில் குடியிருந்த 50 க்கு மேலான குடும்பங்களின் வாழ்விட நிலையையும் 25 ஏக்கர் திட்டதனிநபர் காணி விடுதலை நிலையையும் அரசு அடுத்தகட்ட முடிவாக எடுத்தாலும் கடந்த 04.06.2018 அன்று முல்லைத்தீவிற்கு வருகைதந்த மீள்குடியேற்றமைச்சர் அவர்களை நாம் சந்தித்ததன் பிரகாரம் பிரதேச செயலாளரால் முன்னெடுக்கப்பட்ட காணிகலந்துரைடலின் போது எமது வாழ்விடம் எமக்குவேண்டும் என்று தனித் தனிக் கடிதம் சமர்ப்பித்தோம். கடிதம் சமர்ப்பித்த அத்தனை குடும்பங்களின் காணிகள் ஒரே தடவையில் விடவேண்டும். இனியொரு போராட்டம் வேண்டாம் எனகெஞ்சி இரந்து வேண்டுவதுடன் நாம் குறிப்பிட்ட அனைத்து விடயங்களையும் கருத்தில் கொண்டு எமது வாழ்விடம் எமக்கு வேண்டும் என வீதியோரத்தை வீடாக்கி வெயில் பனி மழை பாராது வீதியில் கிடக்கும் எம் மீதுகருணை கூர்ந்து எதிர்கொள்ளவிருக்கும் மழைகாலத்தையும் கருத்தில் கொண்டு மிகமிக விரைவில் ஒரே தடவையில் வாழும் உரிமை கேட்டு வீதியில் கிடக்கும் எ்ம்மை குடியமர்த்துமாறு மிகமிக பணிவாகக் கேட்டுக்கொள்கிறோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-281)

## மீள்கட்டுமானங்களுக்கு...

உரையாற்றிய போதே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், 'யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் மீள் கட்டுமானங்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற நிதி போதுமானதாக இல்லை. ஆகவே அதிகளவான நிதியை ஒதுக்கு மாறு அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கின் றோம்.

மேலும் இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நிதி அமைச்சரைச் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார். (ம)

## மட்டக்களப்பு கல்வியியற்...

கல்வியியற் கல்லூரியில் முதலாம் வருட மாணவனாக கல்வி கற்றுக்கொண்டிருந்த மாணவன் கல்லூரியில் இணையும்போது ஏழு பேர் கொண்ட மாணவ குழுவினால் பகிடி வதைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்

இதனால் பாதிக்கப்பட்ட நிலையில் கல்லூரி செல்லமாட்டேன் என்று சொல்லி வீடு வந்து நின்ற மாணவனை மீண்டும் பெற்றோர் கல்லூரிக்கு கொண்டு சென்று விட்டுள்ளார்கள்.

இந்நிலையில் குறித்த மாணவன் நேற்று விடுதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்த கொலையில் பெற்றோர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளதாக அவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளார்கள்.

பெற்றோர் சடலத்தினை மீட்டு முல்லைத் தீவிற்கு கொண்டுவருவதற்காக மட்டக்களப்பு சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

குறித்த சடலம் மருத்துவ பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக மட்டக்களப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-281)

### மெகா பவர்

திகதி 08/10/2018
சீட்டிழுப்பு இலக்கம் 289
R 22 02 56 60 62

### மஹஜன சம்பத

திகதி 2018/10/08
சீட்டிழுப்பு இலக்கம் 3763
R 4 4 7 2 5 3

### கொவிசெத

திகதி 2018.10.08
சீட்டிழுப்பு இலக்கம் 1906
Q 20 64 65 72

### சுபிரி வாசனா

திகதி 2018/10/08
சீட்டிழுப்பு இலக்கம் 1367
14 12 14 17 51 44 03

## வன்முறை தொட...

செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 42 பேர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். மேலும், 13 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் விசேட அதிரடிப்படையினரின் உதவியோடு சம்பவங்களுடன் தொடர்புடைய மற்றைய சந்தேகநபர்களை கைது செய்ய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.(ம)

## உச்ச நீதிமன்றத்...

கடந்த யூலை மாதம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் "விடுதலைப் புலிகளின் கை ஓங்க வேண்டும்" எனப் பேசிய உரை குறித்து பல குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில், நேற்று திங்கட்கிழமை காலை, திட்டமிட்ட குற்ற விசாரணைப் பிரிவிற்கு சென்றிருந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கைது செய்யப்பட்டபின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

இந்நிலையில் தற்போது அரசியலமைப்பை மீறியுள்ளதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளதுடன், அவருக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.(ம)

## குமரப்பா, புலேந்...

விலில் அமைக்கப்பட்டிருந்த நினைவுத் தூபி இராணுவத்தினரால் இடித்து அழிக்கப்பட்டது. அந்தத் தூபியை மீள அமைப்பதற்கு வல்வெட்டித்துறை நகர சபையில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய கடந்த 5ஆம் திகதி அடிக்கல் நடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போது, அதனைத் தடுத்து நிறுத்தக் கோரி வல்வெட்டித்துறைப் பொலிஸார், பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் மனுவொன்றைத் தொடர்ந்திருந்தனர்.

அத்துடன், நகர சபைத் தலைவரை அன்றைய தினம் மன்றில் முன்னிலையாகுமாறு நீதிமன்று அறிவித்திருந்தது. வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவரும் மன்றில் முன்னிலையாகியிருந்தார்.

இதன்போது சட்டத்திற்கு முரணாக பொது அமைதிக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலே இத் தூபி அமைக்கப்படுவதால் இதனைத் தடுத்து நிறுத்த வேண்டுமென பொலிஸார் கோரியிருந்தனர்.

அது சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமையவே நடைபெறுவதாக சட்டத்தரணி மன்றில் தெரிவித்திருந்தார். இதனையடுத்து நேற்றையதினம் இதற்கான கட்டளையிடுவதற்காக நீதிவான் வழக்கை ஒத்திவைத்தார்.

வல்வெட்டித்துறை நகர சபையானது இலங்கையின் சட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட்ட ஒன்றாகும். நகர சபையின் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவோடு நிறைவேற்றப்பட்ட சட்ட ரீதியான தீர்மானம் ஒன்றுக்கு அமையவே தீருவில் பகுதியில் தூபியைக் கட்டுவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்தச் செயற்பாடானது இலங்கையின் எந்தவித சட்ட விரோதமான பணத்திலும் மேற்கொள்ளப்படவில்லை. நகர சபைத் தலைவர் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்த சட்ட ரீதியாகவே ஈடுபட்டுள்ளார்.

இத் தீர்மானத்திற்கு எதிராக நீதவான் நீதிமன்றினால் கட்டளையோ அல்லது தடைக் கட்டளையோ பிறப்பிக்க முடியாது. அதன் காரணத்தால் குறித்த செயற்பாடு சட்ட ரீதியற்றது அல்ல என்ற அடிப்படையில் இதனை எதிர்த்து தடை விதிக்க கோரி பொலிஸாரினால் தொடுக்கப்பட்ட விண்ணப்பம் மன்றினால் நிராகரிக்கப்படுகிறது என்று நீதிவான் கட்டளை வழங்கினார். (ம-60)

## யாழ். பல்கலையி...

ஊடாக சென்று கிளிநொச்சி, வவுனியா, ஊடாக அனுராதபுரம் சிறைச்சாலையை சென்றடையவுள்ளது.

இதில் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் அனைவரும் கலந்து கொள்ளுமாறு யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.(ம-9)

## அமெரிக்காவின்...

இன்று செவ்வாய்கிழமை இவர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதன்போது அவர் அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களையும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகளின் பிரதி நிதிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து பேசவுள்ளார்.

அத்துடன், இலங்கையின் புதிய அரசியல் யாப்பு உருவாக்கப் பணிகள், மனித உரிமை பாதுகாப்பு, மறுசீரமைப்பு, நிலைமாறுகால நீதி வழங்கல் செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கூறல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் இதன்போது அவர் அவதானம் செலுத்தவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.(ம)

## விஜயகலா மகே...

பிரதான நீதவான் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அவரை 5 லட்சம் ரூபாய் ஆள் பிணையில் விடுவித்து கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

முன்னாள் இராஜாங்க அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜயகலா மகேஸ்வரன், யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற அரச நிகழ்வில் உரையாற்றிய போது, தமிழீழ விடுதலைப் புலிகளின் கை ஓங்கவேண்டும் என்று வலியுறுத்தினார்.

அவரது இந்த உரை அரசியலமைப்பை மீறும் செயல் எனக் குறிப்பிட்ட சட்ட மா அதிபர், வழக்குத் தாக்கல் செய்யுமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரனுக்கு எதிராக இலங்கை தண்டனைச் சட்டக்கோவை 120ஆம் பிரிவின் கீழ் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் திட்டமிட்ட குற்ற விசாரணைப் பிரிவினர் வழக்குத் தாக்கல் செய்தனர்.

அந்த வழக்கில் நாடாளுமன்ற உறுப்பினரைக் கைது செய்வதற்கான பிடியாணையும் அவர்கள் மன்றில் பெற்றிருந்தனர். அதனடிப்படையில் வாக்குமூலம் வழங்குவதற்காக பொலிஸ் திட்டமிட்ட பிரிவிற்கு வருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரனுக்கு பொலிஸார் அழைப்பாணை வழங்கினர்.

தனது சட்டத்தரணிகளுடன் பொலிஸ் குற்ற புலனாய்வுப் பிரிவுக்கு அவர் நேற்று காலை சென்றிருந்த போது, விஜயகலா மகேஸ்வரன் கைது செயப்பட்டார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த ஜூலை 2-ம் திகதி நடந்த அரச நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் விஜயகலா, தமிழீழ விடுதலைப்புலிகளின் கை ஓங்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

அதனால் தென்னிலங்கையில் மாத்திரமின்றி நாடாளுமன்றிலும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

இராஜாங் அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனை அந்த பதவியிலிருந்து நீக்குமாறு நாடாளுமன்றில் கோரப்பட்டதையடுத்து ஐக்கிய தேசியக் கட்சி கடும் அழுத்தங்களை விஜயகலா மகேஸ்வரனுக்கு வழங்கியது. இதனால் அவர் தனது இராஜாங்க அமைச்சுப் பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி, பிரதமரிடம் வழங்கினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரனின் பதவி விலகலை கடந்த 9-ம் திகதி ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி வர்த்தமானி அறிவிப்பையும் வெளியிட்டார்.

இந்த நிலையில் அவரது கருத்துக்கு எதிராக கொழும்பு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ம)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்

நிறஞ்சன் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, உடுப்பிட்டி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

நிறஞ்சன் நகைமாடம்
சந்தை வீதி, உடுப்பிட்டி.
தொடர்பு: 0763836129
(4096)



Classes

Grade 6 - 10, O/L மாணவர்களுக்கு விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், ICT மீட்டல் மற்றும் கடந்த கால வினாத்தாள்கள் தனியாக/ குழுவாக வீட்டில் வந்து கற்பிக்கப்படும். (ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி மூலம்) English & Tamil Medium

தொடர்பு:
0762909288
(5973)



விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS
(C-3862)

0768226240
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELs



A/L பரீட்சையின் பின்...
அடுத்து என்ன...

➤ நீங்கள் வெற்றிகரமான எதிர்காலம் ஒன்றை அமைத்துக் கொள்ளும் நோக்கம் கொண்டவரா?

➤ உங்களுடைய கனவுகளை குறுகிய காலத்தில் வெற்றிகரமாக நிறைவு செய்யும் விடா முயற்சி உள்ளவரா?

எமது "தொழில் வழிகாட்டல்" கருத்தரங்கில் பங்குபற்றி பயனடையுங்கள்



காலம் : 11/10/2018
நேரம் : 10.00 am - 12.30 pm
இடம் : 62/6, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
வளவாளர் : ஆ.துசியந்தன் (MBA, HNDA, Dip TTHM, Adv.Dip. HR

● குறிப்பு: முற்பதிவு செய்யும் முதல் 50 பேருக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்
(5978)

தொடர்பு: 076 330 4127



வேலைவாய்ப்பு

புதியதோர் எதிர்காலத்தை நோக்கி...
வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டத்தினருக்கான பல்வேறு பட்ட பதவி வெற்றிடங்கள் உள்ளன.
- யாழ் மாவட்டத்தினருக்கும் சந்தர்ப்பம் உண்டு.
- 15 பேருக்கு மட்டும்.

இன்றே உடன் அழைக்க: 0775566226, 0766781042
குறிப்பு: தங்குமிடம், உணவு வசதிகள் உண்டு. வயதெல்லை: 18 - 30
(C-4094)



ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி



➤ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
➤ அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➤ யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org
(5968)

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்



அமெரிக்க லொத்தர் விசா
2020ல் நீங்களும் அமெரிக்காவில்...
ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!
விரையுங்கள் - இந்த வருடமே இறுதி வருடம் 0768226243
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இறுதிச் சந்தர்ப்பம்
சென்ற வருடம் (2017) எம்மூடாக விண்ணப்பித்தவர்களுள் 77 பேர் அமெரிக்க விசாவிற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
எம்மூடாக விண்ணப்பித்த 30 பேர் விசா பெற்று அமெரிக்கா சென்றுவிட்டார்கள்.

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | நெல்லியடி | சாவகச்சேரி | திருகோணமலை |
| --- | --- | --- | --- | --- |
| 0768226243 | 0768226240 | 0776699892 | 0768226242 | 0768226237 |
| மானிப்பாய் | சுன்னாகம் | யாழ்ப்பாணம் | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |
| 0768226238 | 0764550670 | 0768226241 | 0768226230 | 0776697960 |

V2 Travels www.facebook.com/v2tandt



அமெரிக்க லொத்தர் விசா



2020ஆம் ஆண்டுக்கான அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

நிரந்தர குடியேற்றத்திற்கான ஓர் அரிய சந்தர்ப்பம். (18 வயதிற்கு மேற்பட்டோர் தனியாக விண்ணப்பிக்கலாம்.)

2002ஆம் ஆண்டு தொடக்கம் மேற்கொள்ளப்பட்டு வரும் இச் சேவையினூடாக 100க்கும் அதிகமானோர் அமெரிக்கா சென்றுள்ளனர். இச்சந்தர்ப்பத்தை நழுவவிடாது உங்கள் அதிர்ஷ்டத்தை தட்டிச் செல்லுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 755 4528 / 070 375 0001-5
திருமுருகன் கொம் நெற் பிறைவெட் லிமிடெட்
இல.321, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம், கொழும்பு, திருநெல்வேலி, நெல்லியடி, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.10.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.